
# கோடையும் வசந்தமும்



மீரா

# கோடையும் வசந்தமும்

## கவிஞர் மீரா

அகரம்
மனை எண்: 1, நிர்மலா நகர்
தஞ்சாவூர் - 613 007

கோடையும் வசந்தமும்/மீரா/ © ஆர்.சுசீலா/முதற்பதிப்பு: ஜுன் 2002/வெளியீடு: அகரம், மனை எண்: 1, நிர்மலா நகர், தஞ்சாவூர்-7/ அச்சாக்கம்: அகம், சென்னை/ விலை.ரூ.60/

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Kodayum Vasanthamum |
| Subject | : | Poems |
| Author | : | Meera |
| Language | : | Tamil |
| Edition | : | First Edn. June 2002 |
| Size of the Book | : | Crown 1 x 8 |
| Printing Point | : | 11 Pt. |
| Paper | : | 11.6 SPB Book Print |
| Number of Pages | : | 208 |
| Number of Copies | : | 1100 + 100 |
| Printers | : | Agam, Chennai. |
| Publishers | : | **AKARAM**<br>Plot No: 1, Nirmala Nagar<br>Thanjavur - 613 007. |
| Price | : | **Rs.60/ -** |

# ஒளியின் தூதுவனே வாழ்க பல்லாண்டு!

(அணிந்துரை)

## கவிஞர் சிற்பி

மீரா - கவிதைச் சுவைஞர்கள் நெஞ்சில் தேன் பிலிற்றும் ஒரு திருப்பெயர்.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை வரலாற்றில் தமக்கெனத் தனியிடம் வகிர்ந்து கொண்ட ஆளுமை.

மண்ணின் விளிம்புகள் வரை போகும் மனிதம்.

தோழமைக்காகக் கருத்துக்களை விட்டுக் கொடுக்காத துணிவு.

முகம் தெரியாத இளம் கவிகளுக்கு முகவரி கொடுத்த தாய்மை.

மழைத்துளிகளால் செய்த கவிதைச் சிற்பம்.

மாநிலத்தில் வேரோடி கப்பும் கிளையுமாய் விரிந்து கம்பீரமாய்த் தலைநிமிரும் உரைநடை வித்தகம்.

பாலுக்கு ஏங்காமல் தரமுயர்ந்த நூலுக்கு ஏங்கிய அன்னம். பத்தரை மாற்றுப் பதிப்புக்களுக்கு அடியெடுத்துத் தந்த அகரம்.

நிராசை முகில்களைக் கிழித்து நிமிர்ந்த சிகரம்.

விளைவுகளையும் விபரீதங்களையும் நெட்டித் தள்ளி விட்டு அயர்வறியாமல் உழைத்த உன்னதம்.

வாழ்வின் தீராத பக்கங்களை ஓயாமல் நேசிக்கும் உயிர்ச் சிநேகிதன் - அமர காதலன்.

இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம் மீராவைக் குறித்து....

❖

சிவகங்கை மன்னர் கல்லூரிப் பேராசிரியர் மீரா தம் கல்லூரி மலருக்கு ஆசிரியராக இருந்தார். அவர் எழுதிய ஆசிரியர் உரை தற்செயலாக என்பார்வைக்கு வந்தது. நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் அந்த நறுக்குத் தெறித்த உரைநடை வரிகளில் தடுக்கி விழுந்த நான் பின்னர் எழவே இல்லை. அப்படி ஆரம்பித்த அன்பின் உற்சாகம் எங்கள் நட்பு.

எழுத்தில் துளிர்த்த நட்பு இலக்கிய நட்பாய், குடும்ப உறவாய், உயிரின் தோழமையாய்ச் செழித்து வளர்ந்தது. ஓடி ஓடிச் சந்திப்பதும், ஒன்றி மகிழ்ந்து குதூகலிப்பதும் இயல்பாய்ப் போனது. பதிப்பகம் ஒரு அசுவமேத யாகமாய் அவரால் வளர்க்கப்பட்ட போது, குதிரை போகும் திசைகளில் எல்லாம் வில்லும் அம்புமாய்த் திரிந்தவன் நான்.

வானம்பாடியும், அன்னம் விடு தூதும் மேலும் எங்களின் சிநேகிதத்தை நெருக்கி நெசவு செய்தன. சர்ப்பயாகம் முதல் சூரிய நிழல் வரை என் கவிதை நூல்களை அச்சாக்கி அசலாக்கித் தந்த பெருமிதம் அவருடையது. ரகுமானும் நானும் மீராவும் வளர்த்துக் கொண்ட சகோதர பாசம் வாழ்வின் இன்ப நெகிழ்வு அத்தியாயமாக என்றும் நிலைத்திருக்கும்.

❖

மீராவின் படைப்புலகம் ஒரு வர்ணச் சித்திரமல்ல வர்ண விசித்திரம்.

மரபுக் கவிதையின் விசால வீதிகளில் கடிவாளமில்லாத புரவியாய் பவனி வரவும் அவரால் முடிந்தது. புதுக்கவிதையின் விசுவ வெளியில் ஓசையின்றி நழுவும் விண்கலமாவதும் அவருக்குச் சாத்தியமானது.

மீராவின் கவிதைகள், மூன்றும் ஆறும் முதலிய தொகுதிகள் வெளிவந்த காலத்தில் அவர் எழுதிய மரபுக் கவிதைகள் இளங்கவிஞர்களின் இமை விளிம்புகளில் ஈரத்தையும், வீரத்தையும் விதைத்தன.

''வேலை இருக்கிறது நிரம்ப - என்னை
வேகப்படுத்தி விடு தாயே''

என்ற வரிகளின் உக்கிரம் எண்ணற்ற இதயங்களில் நெருப்புப் பந்தங்களை ஏற்றி வைத்தது.

அப்போதெல்லாம் கவியரங்குகள் திருவிழாக்களாக நடைபெறும். ரகுமானின் சித்திரச் சிலேடைகளும், முருகுசுந்தரத்தின் செந்தமிழ்ச் செழிப்பும், மூத்த கவிஞர் முடியரசனின் சிந்தனைத் தெறிப்பும், சுரதாவின் சிலிர்ப்பூட்டும் உவமையும், தமிழன்பனின் ததும்பி வழிகிற கற்பனையும் விம்மிப் பெருகிக் கொண்டிருந்த சூழலில் புதிய சமுதாயத்தை உருக்கி உருவாக்கும் உலைக்களமாக மீராவின் கவிதைகள் ஒலித்திருக்கும்.

''கனியைப் பிழிந்திட்ட சாறு -
கதியில் உயர்ந்திட யாம் பெற்ற பேறு''

என்பாரே பாரதிதாசன், அந்த அனுபவத்தின் சாரம் மீரா அன்று படைத்த மரபுக் கவிதைகள்.

ஒரு சமதருமச் சமுதாயம் உருவாக வேண்டும் என்று தவித்துத் தவம் கிடந்த அபூர்வமான படைப்பாளிகளில் மீராவுக்குத் தனியிடம் உண்டு. அந்தக் கனவு இன்று வரைக்கும் அவரிடம் சோடை போனதில்லை. முற்போக்கு இயக்கங்களின் மீது தீராத காதலும் மாறாத பற்றும் இந்தச் சிவகங்கைச் செம்மலருக்கு இருந்தன. அதை வெறும் மௌடீகப் பார்வையாக இல்லாமல், மனித குலம் பெற

வேண்டிய பேறு, ஒரு மகத்தான வாய்ப்பு என்று அவர் கருதி வந்திருக்கிறார்.

இது ஏதோ கட்சிக் கண்ணோட்டம் அல்ல. சக மனிதர்கள் மீது கொண்ட அப்பழுக்கற்ற அன்பின் பிரவாகமே அவரை மார்க்சீய சிந்தனைக்கு இட்டுச் சென்றது. கள் குடிப்பது போல, கஞ்சா தின்பது போல இலக்கியமும் ஒரு போகப் பொருள் என்று கருதுகிற மூடர்களுக்கு இந்த நுட்பம் ஒரு போதும் புலனாகாது.

சமூக விமர்சனப் பார்வை மீராவிடம் கூர்மையாகக் குடிகொண்டது. எந்த அளவுக்கு கூர்மை? ஊசி முனைக் கூர்மை! அநாயசமான நகைச் சுவை - அந்த நகைச் சுவைப் பழத்தில் ஓசைப்படாமல் ஊசியேற்றுகிற லாவகம். நவீன தமிழ்க் கவிதையில் 'ஊசிகள்' தனித்தன்மை வாய்ந்த படைப்பு. அரசியலும், சமூக பொருளாதார வாழ்வியலும், மனிதக் கீழ்மையும் 'இழிப்பு'ச் சுவை கசியக் கசிய மீரா கையாண்ட எடுத்துரைப்பு - ஒரு பரம்பரையை இலக்கிய உலகில் நடமாட விட்டது.

பட்டி மன்றம் என்ற சொற்போர்க் கலை சிறுத்துச் சீரழிந்து தன்னைத் தானே கேலிப்பொருள் ஆக்கிக் கொண்ட போது அதை நயமாகக் கேலி செய்தார் மீரா 'ஊசிகளி'ல்.

''பாட்டி செத்த பத்தாம் வினாடி
பெரிய குழப்பம் -
பிணத்தை
எரிப்பதா புதைப்பதா என்று.....

உள்ளூர்ப் புலவர் ஓடி வந்தார்
பட்டி மன்றம் வைத்துப்
பார்த்தால் என்ன என்று''

ரகுமான் குறிப்பிட்டுச் சொன்னது போல 'குத்தல்' இருப்பதால் ஊசிகள் என்று மீரா பெயர் சூட்டினார் போலும்!

மீராவின் கவித்துவச் சாதனைக்கு மற்றோர் அடையாளமாய் அமைந்தது, கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள். 'விசால அன்பால் விழுங்கு லோகத்தை' என்று சொன்ன கவியரசனின் வார்த்தைகள் கண்ட வாழ்க்கை மீராவினுடையது. அந்த அன்பென்னும் கொடி மரத்தில் பட்டொளி வீசிப் பறந்த பதாகைதான் 'கனவுகள்+ கற்பனைகள்' நூல். இளைய தலைமுறையின் காதல் பைபிளாக நெடுங்காலம் அரசோச்சிய இந்நூல் இன்னும் புதிய பதிப்புகளைக் கண்டு வருகிறது. புத்தகச் சந்தையில் இன்று மலைமலையாய்க் குவியும் காதல் கவிதைகளின் 'ஒரிஜினல்' இந்தச் சின்னக் காதல் மாயமோதிரத்தில் தான் பதுங்கிக் கிடக்கிறது. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே பற்றிக் கொள்ளும் பரிசுத்தமான காதல் நெருப்பு எத்தனை மாசற்ற புனிதங்களைப் பூக்க வைக்கிறது என்பதை மீராவின் வரிகளில் தரிசிக்கிறோம்.

'Love's philosophy' என்று ஷெல்லி பாடிய காதல் தத்துவம் போல ஓர் ஆன்ம விகசிப்பை மீராவின் இந்நூல் புலப்படுத்தும்.

'' என் வேட்கையே......
நீ எனக்குக் காதலைத் தந்தாய்
அது உழைப்பாளியின் வியர்வையைப் போல்
உயர்வானது
நான் உனக்கு இந்த
வசன காவியத்தைத் தருகிறேன்
இது, ஏழையின் கண்ணீரைப் போல்
உண்மையானதா என்று பார்''

என்று முகப்பில் உயிர்ப்புடன் தொடங்கும் கவிதைகள் விதைப் பண்ணையாகவும், நாற்றங்காலாகவும், நந்தவன மாகவும், முடிவில் கைப்பிடி இதயத்தின் காலதீதச் சோகமாகவும் உருமாறிக் கொண்டே போவதைப் படித்த பின்னர் வெற்றுப் புலம்பல்களைக் காதல் கவிதை என ஒரு போதும் மதிக்க முடியவில்லை.

❖

மெய் ஓய்ந்த போதும் மனம் ஓயாத என் தோழர் மீரா இதோ மறுபிறவி எடுக்கின்றார். 'குக்கூ' 'கோடையும் வசந்தமும்' முதலான கவிதைத் தொகுதிகளின் மூலமாக.

முன்பு ஒருமுறை நா. காமராசன் எழுதினார்:

''ஓய்வில்லாத சரித்திரப் போராட்டங்களால் மண்ணெல்லாம் சிவப்பாகிவிட்ட அந்த மறவர் பூமியின் புரட்சிக் கவிஞர். 'சாகாத வானம் நாம்' என்ற பாடலின் மூலம் பாரதிதாசனின் வாரிசாக மாறியவர்.... அண்ணாவால் பலமுறை பாராட்டப்பட்டு அவருடைய கடைசிக் கடிதத்திலும் குறிப்பிடப்பட்ட கொள்கை வீரர்....''

எத்தனை தீர்க்கதரிசனமான சொற்கள் இவை என்பதை இன்னொரு முறை நிரூபிக்கின்றது 'கோடையும் வசந்தமும்'.

இரண்டு பருவ காலங்களின் பெயரை இணைக்கிறது நூலின் பெயர். இரண்டு மன நிலைகளைப் பேசும் ஒரு கவிதையின் தலைப்பே நூலின் பெயராக வடிவெடுத் திருக்கிறது. 'இருவேறு உலகத் தியற்கை'யைப் பார்க்கும் மீராவின் வாழ்வியல் பார்வைக்கு இந்தத் தலைப்பே எடுத்துக் காட்டாகிறது. ஒரு வசந்த காலத்தில் காஞ்சிப் பட்டை அணிந்து வர ஒரு கன்னி இல்லையே என்ற தவிப்பு. ஒரு கோடை காலத்திலோ மனைவி உறையூர்க் கைத்தறிச் சேலை கூட உடுத்து வர வக்கில்லையே என்ற மலைப்பு. கோடை வறுமைக் குறியீடாகிறது, வசந்தம் இளமை வெளியீடாகிறது.

எந்த நூலில் முக்கியமான எந்தக் கவிதையை எடுத்துக் கொண்டாலும் மீராவின் இந்த இருநிலைச் சித்திரிப்பை வெவ்வேறு தளங்களில் பார்க்கலாம்.

'ஏன் வரவில்லை' - கவிதையில் சிவப்பு விளக்குச் சந்தையில் சந்திக்கும் பெண், 'பசியைப் பசியால் விரட்டி அடிக்கிறோம்' என்கிறாள். விளக்கம் கேட்டபோது,

''எங்களுக்கோ குடற்பசி
எங்களைத் தேடிவரும்
உங்களுக்கோ
நல்ல உடற்பசி''

என்று இனம் பிரித்து இருநிலைகளைப் பேசுகிறாள். 'வெட்கத்திரை' கவிதையில் வயதுக்கு வருவதற்கு முன், பின் என இருநிலை. யோசித்துப் பார்த்தால் எல்லா இடங்களிலும் மீராவின் இருநிலைப் பார்வை பளிச்சிடுகிறது.

மீராவின் தனித்துவங்களில் ஒன்று - மிகச் சாதாரணமான செய்திகளுக்குக் கூட அசாதாரண அழகுகள் சேர்ப்பது. ஆழ்ந்து நிற்கும் கவியுளம் கொண்டவர்க்கேயன்றி மற்றவர்களுக்கு இது சாத்தியமல்ல. வெறும் வார்த்தைக் குவியல்களுக்குள் முகம் புதைத்துக் கொள்ளும் பச்சோந்திக் கவிஞர்களுக்கு இது ஒரு நாளும் கைவருவதில்லை. 'மறுபடியும் மறுபடியும்' என்றொரு கவிதை. காதலியின் பார்வையும், அதன் தொடர்ச்சியாக வருத்தம் தரும் நினைவுகளும் தான் கவிதைப் பொருள். பார்வை சுகமானது, நினைவுகளோ பயங்கரமானது. அதனால் பார்வைகள் ஊர்ந்து வரும் பட்டுப் பூச்சிகளாம்! நினைவுகள் அரிப்பூட்டும் கம்பளிப் பூச்சிகளாம்! எத்தனை எளிமை! எத்தனை அருமை.

மயிலிறகால் வருடுவது போல் மென்மையிலும் மென்மையாகப் பேசும் சுக லயம் மீராவின் தனிச் சிறப்பு. நன்றாக எழுதுமென்று பைலட் பேனா வாங்கினாராம். அது 'ஏமாற்றம்' தந்து விட்டதாம். கவிஞர் அதை எப்படிச் சொல்கிறார் என்று பாருங்கள்:

''இதற்கு முன்பு
எந்தப் பேனாவும்
வாங்கியதும்
என் பெயர் எழுதும்
இதுவோ சுத்த மோசம்
உன் பெயர் எழுதுகிறது......''

ஏகாந்தத்தில் மனதுக்கு இதமாக ஒத்தடம் கொடுக்கும் ரோஜா இதழ்கள் மீராவின் வரிகள்.

மழலை இனிதென்று வள்ளுவரே சொன்ன உண்மைக்கு ஒரு மெருகு கொடுக்க முனைகிறார் மீரா. மழலை அப்படி இனிமையாக இருப்பதற்குக் காரணம் அது மழை தந்த இனிமையாம். முன்னொரு காலத்தில் மழை நீர் பிடிக்கக் குடம் வைத்தார்களாம். குடத்தில் அலைபாய்ந்த நீரில் ஒரு சங்கீதம் - ஆ! மழை நீர் சுவைத்த இனிய ஓசையை மழலை என்றனராம். குழந்தையின் கொஞ்சு தமிழுக்கு அந்தப் பெயரை வைத்துவிட்டார்களாம். இது சொல்லாராய்ச்சி அல்ல. சொல்லுக்குள் இருக்கும் சுகம் பற்றிய ஆராய்ச்சி! இப்படித்தான் 'மழைநீர்' கவிதையில் கிணறு வெட்டப் பூதம் புறப்படும் ஆராய்ச்சியும்!

நகைச் சுவை மீராவின் கவச குண்டலம். பக்கத்துக்குப் பக்கம் புன்னகையை ஓவியமாக ஒட்டி வைத்து விடுகிறார். உயர்ந்த பாரீஸ் சென்ட்டின் மெல்லிய நறுமணம் போல் அது கவிதைகள் தோறும் உலாவிக் கொண்டே இருக்கிறது. 'ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாயதன்றே' என்று கம்பன் சிலிர்த்துக் கொள்வானே, அப்படி உலாவுகிறது நகைச் சுவை!

ஆனால் அந்த நகைச் சுவைக்குள் ஒரு வேதனை குடியிருக்கும். 'சுவரொட்டி' கவிதையில் தமிழ்ச் சமுதாயம் 'போஸ்டர்' பித்துப் பிடித்து அலைவதை நயமாக நையாண்டி செய்கிறார். இப்படியே போனால்,

"கடைக்குப் போய்
காய்கறி வாங்கி வந்த
கருமவீரனே வருக

பற்று தேய்த்துப்
படிப்படியாக
சமையல்காரியாய்ப்
பதவி உயர்வு பெற்ற
பங்கஜமே வருக....."

என்று சுவரொட்டிகள் வந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை என்கிறார். தமிழனின் தன்மானச் சீரழிவு இவ்வரிகளில் தொக்கி நிற்கின்றது.

கொத்தனார் மகனும் முதலாளி மைந்தனும் மணலில் விளையாடும் போது, "இது எங்க அப்பா கட்டிய வீடு" என்று ஏழை மகன் சொல்ல, மறு நாள் வேறு கொத்தனார் வேலைக்கு வந்தார் என்பது வேதனையில் பூத்த நகைச்சுவை 'எங்கள் முதலாளி' கொதிக்கும் வெயிலில் நிற்கிறார், கொட்டும் மழையில் நிற்கிறார் என்று தொடங்கும் கவிதை,

"இப்போது தானே
ஆலை வளாக வாசலில்
அசையாமல் நிற்கிறார் நிலையாய்
எங்கள் முதலாளி சிலையாய்"

என்று முடியும் போது நம் இதழ்க் கடையில் மலரும் புன்னகை ஒரு சமுதாய அவலத்தையும் சேர்த்தே பிறக்கிறது.

மீராவின் நகைச் சுவை வேப்பம் பூப் பச்சடி, இனிப்புப் பூசிய மருந்து. பாறையையும் நெகிழ்விக்கும் பசும் புல்லிதழ்.

நீண்ட கவிதைகளைச் சரம் தொடுத்தாற்போல் எழுதிச் செல்லும் இயல்பு மீராவுக்குக் கைவந்த கலை. உழவன், இந்த மே தினத்தில், புதுமைப் பெண்ணே புறப்படு, தூர தரிசனம், பாம்புகள் பலவிதம், முதலிய கவிதைகள்

பூத்தொடுக்கும் மீராவின் விரல் நளினத்துக்கு எடுத்துக் காட்டு.

குழந்தையின் பட்டுக் கன்னம் போல இத்தனை மென்மையாகத் தமிழில் எழுத முடியுமா என்று ஆச்சரியப் படவைக்கும் மீராவின் கவிதைகளில் அங்கங்கே முத்தும் வைடூரியமுமாய் தத்துவத் கீற்றுக்கள் தலைநீட்டிப் பார்க்கும். நாட்களில் சில மகிழ்வைத் தருகின்றன. சில துயரத்தைத் தருகின்றன. அவற்றைப் பற்றிப் பேசும் ஆசிரியரின் ஆழத்தைப் பாருங்கள்:

''எவனோ
காலத் தேனடையைக் கசக்கிப் பிழிந்தான்
நாவில் விழுந்ததோர் தேன்துளி; அதனை
மணநாள் என்று மகிழ்ந்து சொல்வோம்
எவனோ
காலக் கடலைக் கடைந்தான்
ஆல கால நஞ்சின் ஒரு துளி
இதழின் நுனியில் பட்டது. அதனைப்
பிணநாள் என்று பேசுகின்றோம்''

''ஓரில் நெய்தல் கறங்க'' என்ற புறப்பாடல் வந்து நினைவில் மோதுகின்றது.

வாழும் காலத்தில் நமக்கு ஒரு வரமாகக் கிடைத்த மீரா வெறும் கவிஞர் மட்டுமல்ல - காலத்தின் குரல். அவரை அறிவதும் அவரை உணர்வதும் நம் கால இலக்கிய வாதிகளுக்கு வாழ்வின் பெருமிதம்.

இந்தத் தொகுதியில் கல்லறை வரிகள் என்றொரு கவிதைப் பகுதி. அதில் மணப்பெண், விபச்சாரி, வெட்டியான் எனப் பலருடைய கல்லறைகளுக்குப் பொருத்தமான வரிகளைப் பொறித்துள்ள கவிஞர் 'என்

கல்லறை' என்றொரு கவிதையும் எழுதியுள்ளார். தலைப்பே நம்மைத் திடுக்கிட வைக்கிறது.

''என் கல்லறையில் எழுதுங்கள்
கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்''

நம்மை அதிர வைக்கும் வரிகள் இவை. ஆனால் மீரா, உங்கள் கனவுகளும் கற்பனைகளும் வெறும் காகிதங்கள் அல்ல - அமர காவியங்கள்.

நீங்களே சொல்லவில்லையா -

''கவியின் கனவை
கற்பனை என்று தள்ளாதீர்கள்
அந்தக் கனவுகளில்
ஆயிரம் தீபங்கள் சுடர் விடலாம்''

என்று.

நீங்கள் ஆயிரம் தீபங்களை ஏற்றிய ஆரத்தி தீபம். தலைமுறைகளை வெளிச்சப்படுத்தும் அந்தத் தீப ஒளி எத்தனை சூரியர்களை நாளைக்கு எழுப்புமோ, யாருக்குத் தெரியும்!

ஒளியின் தூதுவனே, வாழ்க பல்லாண்டு.

பொள்ளாச்சி
8-3-2002

அன்புடன்
**சிற்பி**

# நீரோட்டக் கவிதைகளின் தேரோட்டம்

## (மதிப்புரை)

## கவிஞர் தேனரசன்

எப்போதுமே மீரா கவிதையை நினைத்தால் கண்முன் அலையாடுவன அவரது சமூககோபம், அதை வெளிப்படுத்துகிற பாங்கில் கையாளும் நியாயமான எள்ளல்- அங்கத உத்திகள், இயல்பான நகைச்சுவை, பண்பட்டுக் கைவந்த தொழில் நுணுக்கத்தின் படைப்புக் கலை நயம், சொற்களின் நளினம் ஆகியவைகளே.

கோடையும் வசந்தமும் என்னும் இந்தத் தொகுப்பிலும் கவிஞர் மீராவின் மேற்சொன்ன படைப்புக் கூறுகள் நிரந்து பரந்து கிடப்பதைப் பார்க்கலாம்.

அன்றொரு காலம்..... பாரதி பாடம் கேட்டுப் பழகிய பரவசத்தால் சொல்புதிதாய், பொருள் புதிதாய், சுவை புதிதாய், மரபின் செழுமையும் வளமையும் சிந்திவழிய 'இராசேந்திரன் கவிதைகள்' வெளிவந்து கவிதை நேயர்களின் நெஞ்சங்களைச் சிவகங்கைத் திசை நோக்கித் திரும்ப வைத்த காலம்! கைமணக்க நெய்மணக்கும் செல்வந்தர் வீட்டுத்தித்திப்புப் பொங்கலையும், இல்லாத மக்களின் பருக்கைக் கனவுகளையும் எண்ணிப்பார்த்து, தமிழர் திருநாளில், 'தெருவோரச் சாக்கடையில் வருமா தெப்பம்' என்று ஏக்கவரிகள் வரைந்து பேரறிஞர் அண்ணா நெஞ்சில் இடம் பிடித்த காலம்.

அடுத்தொரு காலம்... நாடெங்கும் தெருவெங்கும் மேடையெங்கும் கவியரங்கங்களின் கொடி பறந்தகாலம். மீராவின் நயமிகுந்த பாட்டுக்கொடி மற்றவர்கள் எட்டித் தொட மாட்டாத தனி உயரத்தில், வண்ணத்தில், வடிவத்தில் பட்டொளி வீசிப்பறந்தகாலம். கிரேக்க அலெக்ஸாண்டரின் இந்தியப் படையெடுப்பை

''சிந்து நதிப் பெண்ணின் இடை சிறுத்த இடம் பார்த்து
வந்து வென்றான்''.

என்பது போன்ற அரங்க வாசகங்கள் காற்றோடு போகாமல் 'மூன்றும் ஆறுமாக' கேட்ட செவிகளில் ரீங்கரித்திருந்த சிறப்புக் காலம்.

பின்னொரு காலம்.... காதலர் கீதையாய், வாசிப்பவர் நெஞ்சுகளிலும் பிரிவின் இம்சைகளை விதைத்து விட்டு, நூற்றுக்கணக்கில் காதல்பித்துக் கவிஞர்களை வளர்த்து விட்ட கனவுகள் + கற்பனைகள் = காகிதங்களின் பொற் காலம். யாப்புக் கட்டுகளிலிருந்து சுத்தமாக விடுபட்டு, புத்தம் புதுக் கவிஞராக மீரா முடிசூட்டிக் கொண்டகாலம்.

பிறகொரு காலம்.... சமூக நச்சுக் கோடுகளுக்கு மூல ஆதாரங்களாக முகம் மறைத்து வாழும் கீழான கயவர்களைக் குத்திக் கிழித்துத் தோலுரித்துக் காட்டும் ஊசிகளின் உலாக்காலம்.

'உனக்கும் எனக்கும் ஒரே ஊர் வாசுதேவ நல்லூர்...' என்று நவயுகக் காதலைச் சித்தரித்தது போன்ற சமுதாய நையாண்டிப் புதுக்கவிதைகளின் அலை முழங்கிய காலம்.

இன்றொரு காலம்... அந்த நாளுக்கும் இந்த நாளுக்கும் சிந்தனை நூல் நெசவு செய்வது போல, அகமும் புறமுமாய்ப் பின்னிப் பிணைந்த உணர்வுகள் 'கோடையும் வசந்தமு'மாய்க் குலவுகிற காலம். கால இடைவெளிகள்

கணக்குக்கு வந்தாலும் கருத்துப் பிரவாகத்தில் கற்பனைப் பிரயோகத்தில் இடைவெளிக்கு ஏதும் இடமில்லை இந்தத் தொகுப்பில்.

'படை திரட்டப்பாடுகிறேன்' என்று முதல் கவிதையிலேயே எழுச்சிப் பிரகடனம் பண்ணுகிறார் மீரா.

மனிதரில் பிறப்பால் மேல்கீழ் என்று பேசும் பாதகங்களைக் கண்டு பதைக்கும் நெஞ்சம் பாரதிக்கிருந்தது போலவே நம் மீராவுக்கும் இருக்கிறது. அதனால்,

> '' கீழ் மேல் என்றின்னும் கிறுக்கில் உளறுகின்ற
> பாழ்வாய் கிழிக்கும் மொரு படைதிரட்டப் பாடுகிறேன்''

என்று பேசுகிறார்.

மனிதர்களின் பாவத்துக்காகத் தாம் ரத்தம் சிந்தி அவர்களை மீட்பதற்காக ஏசு வந்தாரென்றால், கவிஞர் மீராவோ பாவநிழலே படிய விடாமல் முன் கூட்டியே தடுப்பதற்குத் தேவனாய் வந்து மனத்தெம்பு ஊட்டுவதாகச் சொல்கிறார்.

நம், மீரா கவிதைகளில் பொதுவாக ஊடுருவி நிற்பது அவரது சமூக கோபம். அவருடைய ஒட்டுமொத்தக் கவிதைகளைப் பட்டிமண்டப வாதத்தில் வைத்தாலும் மிஞ்சி நின்று வெல்லுபவை சமுதாய நோக்குக் கவிதைகளே. இந்தக் கவிதையிலும் அந்தக் கோபமே தெறித்து நிற்கிறதைக் காணுகிறோம்.

எளிமையான எளிமை இவர் படைப்பின் தனித்தன்மை. இதற்கு எடுத்துக் காட்டாகும் கவிதைகள் இத்தொகுதியில் நிறையவே உள்ளன. 'வெட்கத்திரை' என்ற தலைப்பில் ஒரு கவிதை. இவரோடு சொந்தம் கொண்டாடி, வம்பளந்து, இவரைக் கேலிச் சித்திரமாக வரைந்து, எதிர்பாராததாய் வரும் பள்ளி விடுமுறைக் குதூகலத்தைப் பங்கு போட்டுத்

தந்து, அரிதாகச் சினிமாவிற்குப் புறப்படும் போது சிட்டாய் ஒட்டி, வெளியூர் போகும்போது வாங்கி வரவேண்டியவை களுக்குப் பட்டியலிட்டு உத்தரவிடும் உரிமையினைப் பெற்ற சிறுமி ஒரு நாள் ஆளாகிவிட்டதும் எப்படி நாணத்தோடு நடந்து கொள்கிறாள் என்பதை எளிமைச் சிற்பமாய் வடிக்கிறார் மீரா.

''இப்போ தெல்லாம் என்னைப் பார்த்ததும்
முகத்தில்
வெட்கத்திரையை வேகமாய்ப் போட்டுத்
தன் அறைச் சன்னலைச்
சாத்தி விடுகிறாள்
அவள் பெரிய மனுஷி
ஆகிவிட்டாளாம்''

என்று முடியும் போது கவிதையும் ஒரு பக்குவப்பட்டு விட்டதைப் பார்க்க முடிகிறது.

இந்தத் தொகுப்பில் குறுங்கவிதைகளும் நெடுங்கவிதைகளுமாக ஐம்பதுக்கு மேற்பட்ட கவிதைகள் அடங்கியுள்ளன. நீண்ட கவிதைகளிலொன்று 'பாம்புகள் பலவிதம்'. வார்த்தைகளுக்குக் காத்து நிற்கத் தேவையில்லாத மீராவின் சிந்தனை நேர்த்திக்கு - நீரோட்டம் போன்ற ஓட்டத்துக்கு உதாரணமாகும் இந்தக் கவிதை.

பாம்பாட்டியின் மகுடிக்கு மயங்கி ஆடி அடங்குகிற பாம்பு ஆதிமனிதராகிய ஆதாம் ஏவாளிலிருந்து இதுவரை மனிதரை எவ்வெவ்வாறு ஆட்டி வைக்கிறது என்பதைப் பலபட அடுக்குகிறார். சபலத்தை ஊட்டி சஞ்சலத்தை உண்டாக்கி அந்த அற்புத முதல் ஜோடியை ஒரு பாம்பு விழவைத்ததிலிருந்து மனிதன் எப்படி விழுந்து விழுந்து எழுகிறான், எழுந்தெழுந்து விழுகிறான் என்பதை

விளக்குகிறார். பலவிதப் பாம்புகளை வருணனை யாக்குகிறார். பாம்பு பொதுவாக ஒரு பாலியற் குறியீடு. தமிழில் பாம்பு பற்றிய கதைகள் பல உண்டு. பழமொழிகள் பல உண்டு. மலையாள மொழியல் பாம்பு என்று நவீனம் ஒன்று உண்டு. மீராவின் பாம்புகள் அந்தப் பாம்பையும் நினைவூட்டுகின்றன. பசும்புல் தரையில் வழுக்கிக் கொண்டு நழுவியோடும் நல்ல பாம்பு போல பாம்புகள் பற்றிய கவிதையிலும் ஓட்டமிருக்கிறது.

மீராவின் எழுத்தில் இழையோடும் இயல்பான நகைச்சுவைக்கு 'புதிய ஏற்பாடு', 'எங்கள் முதலாளி', 'பிரியத்துக்குத் தடையாய் ஒரு பிளாட்பாரம் டிக்கெட்', 'காமதேனு போல; கற்பக தருபோல', 'சிறியோர்கள் நிச்சயித்தபடி' ஆகிய கவிதைகளைக் காட்டலாம்.

ஒடிய முயலும் இடையெனவும், கூந்தலை கொட்டாத கறுப்பு நீர் வீழ்ச்சியெனவும், நுங்கின் மென்பதம் தங்கும் இதழ்கள் எனவும், ஆற்றை 'குடிக்காமல் கூத்தாடும் குமரிப்பெண் எனவும், 'எடுத்து மடிக்காமல் கிடக்கின்ற காகிதம்' எனவும் வருணிக்கும் வரிகளில் மீராவின் கற்பனைத் திறம் வெளிப்படுவதை அறியலாம்.

கவிஞரின் சமுதாயப் பார்வை கூர்மையானது மாத்திரமல்ல கோபமும் கொந்தளிப்புமானது. இத்தொகுதியில் பல கவிதைகள் அவருடைய மனச்சீற்றத்தின் வெளிப்பாட்டு அடையாளங்கள். அவற்றுள் ஒன்று 'உழவன்' என்ற தலைப்பிலான நீண்ட கவிதை.

பிராமிசரிகளின் கொத்தடிமையான இம்மண்ணின் நிஜமைந்தன், உலகளந்த பழமொழிப் பாராட்டுகளின் முத்திரைக் காயங்களால் முதுகு புண்ணானவன். அவனை

மறந்து விடுவதென்று சத்தியம் பண்ணிக் கொண்டு நினைப்பதே இல்லையென்று கங்கணங்கட்டிக் கொண்டு ஆள்கிறவர்கள் பூமியிது.

இந்த ஏழை மகனுக்கு நிம்மதி எங்கு வரப் போகிறது என்று ஏங்கி எண்ணிப் பார்த்ததால் விளைந்த கவிதை இது. படிக்கிறவனை ஒரு நேரத்தில் உருகவைப்பது; ஒரு நேரத்தில் நெஞ்சில் சினம் பெருக வைப்பது.

'கோடையும் வசந்தமும்' தொகுதியில் காணும் சின்னச் சின்னக் கவிதைகளிலும் மீராவின் கைவந்த தொழில் நுணுக்கம், கலை நயம் புலப்படும்.

'ஏலம்' என்ற தலைப்பில் ஒரு சிறுகவிதை; வானம்பாடி இதழ் ஒன்றில் வந்ததாக நினைவு......

குட்டி நடிகையாய்க்
கோடம்பாக்கக்
குளு குளு அறையில்
அறிமுகமானபோது..... அவள்.....

பிரபலமாகிப்
பின்னால் ஒரு நாள்
நாடி நரம்புகள்
தளர்ந்து
சாய்ந்த போது..... அவள் வீடு....

கவிதையைப் படித்து விட்டு தலைப்பை இன்னொரு முறை பாருங்கள். அர்த்தம் உங்கள் செவிகளை அறையும்.

நிறையக் கவிதைகளைப் பற்றி நிறைய நிறையப் பேசலாம். பலவேறு பொழுதுகளில் சந்தர்ப்பங்களில் படைத்தவற்றைப் பதுக்கி வைத்திருந்து மீரா வெளியிடுகிறார்.

இவைகளின் படைப்பு அழகை, வார்த்தைகளின் நேர்த்தியை, அர்த்த வீச்சை, உணர்ச்சிச் செறிவை அனுபவித்து அனுபவித்துச் சுவைக்கலாம். சங்க காலக் கவியொருவன் வார்த்தைகளில் சொல்வதானால் ''தேட்கடுப்பன்ன நாட்படு தேறல்'' எனச் 'சுறுக்'கென்று சுவைக்கலாம்.

பொள்ளாச்சி
9-3-2002

தேனரசன்

# முன்னுரை

சட்டைப்பை, காற்சட்டைப்பை, கைப்பை இவற்றில் வைத்திருந்த பணத்தைப் பயணம் போகும் போது பலதடவை பறிகொடுத்திருக்கிறேன். கூடவே கைப் பையில் உள்ள சாவிகளையும் இழந்திருக்கிறேன்.

ஒருமுறை சென்னையில் பெரியமேட்டிலிருந்து பேருந்தில் ஏறி பாரிமுனை பூக்கடை நிறுத்தத்தில் இறங்கி காற்சட்டைப்பைக்குள் கையை விட்டுப் பார்த்தபோது அதிலிருந்த இரண்டாயிரம் ரூபாய் திருடப்பட்டது தெரிந்தது.

பூக்கடை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு பேருந்தில் ஏறிச் செல்லப் போதிய சில்லறையும் இல்லாமல் நடந்தேன். தலைமைச் செயலகம் வரை நடந்தேன். அன்றைய தமிழ்ப்பண்பாட்டுச் செயலாளர் முனைவர் ஔவை நடராசன் அறைக்குள் சென்று சோர்ந்து போய் உட்கார்ந்தேன். 'என்ன ஐயா..... இப்பிடி' என்று கேட்டார். பணத்தைப் பறிகொடுத்ததையும் 'நட'ராஜன் ஆனதையும் சொன்னேன். 'அட பாவி, நடந்தேயா வந்தாய்' என்று கேட்டார். அப்புறம் சிற்றுண்டி வாங்கி வரச் சொல்லி உண்ணச் சொன்னார். 'வந்த வேலை முடியவில்லை ஊருக்குப் போக வேண்டும். 500 ரூபாய் மட்டும் கொடுங்கள். போய் அனுப்பிவைக்கிறேன்' என்றேன். சரி என்று பையைத் திறந்து எடுத்துக் கொடுத்தார். ஊர்வந்து சேர்ந்ததும் திருப்பி அனுப்பினேன்.

❖

இதனைவிடக் கசப்பான அனுபவம் சில ஆண்டுகளுக்கு முன் மதுரையில் நேர்ந்தது.

'ஓம்சக்தி'யில் பணியாற்றிக் கொண்டிருந்த நேரம்; கோவை குண்டு வெடிப்பை ஒட்டி சிவகங்கை வந்திருந்தேன். 'ஒரு வாரம் ஊரிலேயே இருங்கள். நிலைமை சரியானதும் வரலாம்' என்று பதிப்பாசிரியர் கவிஞர் சிதம்பரநாதன் சொன்னார். அவர் சொன்னபடி மறுவாரம் கோவை புறப்பட்டேன்.

ஒரு கையில் பெட்டியும் இன்னொரு கையில் புத்தகக் கட்டும் இருந்தன. ஆரப்பாளையம் நிலையத்திலிருந்து கோவை புறப்படும் பேருந்து தயாராக இருந்தது. வேகமாய்ப் போய் ஏறி கடைசி இருக்கையில் கைப்பெட்டியையும் புத்தகத்தையும் வைத்தேன்.

நடந்துநர் 'சீட்டு வாங்கிக் கொண்டு ஏறுங்கள்' என்றார். கீழே இறங்கினேன். என் இருக்கைக்குப் பக்கத்தில் தான் அவர் நின்றுகொண்டிருந்தார். சீட்டு வாங்கிக் கொண்டு ஏறி இருக்கையைப் பார்த்தபோது வெறும் புத்தகக் கட்டுதான் இருந்தது. பெட்டியைக் காணவில்லை. அலை மோதினேன். வண்டிக்குள் அங்குமிங்கும் தேடினேன். கீழே இறங்கி எடுத்தவன் தட்டுப்படுகிறானா என்று பார்த்தேன். நடத்துநர் வண்டியில் ஏறிவிட்டார். வண்டி புறப்படும் நேரம். பெட்டியை காணவில்லை என்று சொன்னேன். சீட்டை வாங்கிக்கொண்டு பணத்தைக் கொடுத்தார். ஆரப்பாளையம் காவல் நிலையம் போங்கள் என்றார். வேறு வழியில்லாமல் காவல் நிலையம் போனேன். புகார் எழுதிக் கொடுத்தேன். ஆய்வாளர் வரட்டும் என்றார்கள். காத்திருந்தேன். தலைமைக் காவலர் ஒருவர் அங்கே ஒரு பக்கம் உட்கார்ந்திருந்த பத்துப் பதினைந்து பேரைச் சுட்டிக் காட்டி 'இவர்கள்' எல்லாருமே

பேருந்துப் பெட்டித் திருடர்கள். திருச்சியைச் சேர்ந்தவர்கள். பேசிப் பாருங்கள் என்றார். பறிகொடுத்த என்மனம் பதைபதைத்துக் கொண்டிருந்தது. கண்ணீர் வருவது போல் இருந்தது. துடைத்துக் கொண்டேன். மெல்ல அவர்கள் பக்கம் சென்று பேட்டி எடுப்பது போல் விசாரித்தேன். 'என் பெட்டியை யார் திருடியிருப்பார்கள்' என்று கேட்டேன். மௌனமாயிருந்தார்கள். 'கண்ணதாசனைத் தெரியுமா என்றேன். 'தெரியும்' சினிமாப் பாடல்கள் எழுதுபவர் தானே' என்றார்கள். 'ஆமாம், அவர் ஒரு பெருங்கவிஞர். அவர் மாதிரி நானும் ஒரு கவிஞன். என் பெட்டியில் கைப்பையில் பணமும் கோவையில் உள்ள என் வீட்டுச் சாவிக் கொத்தும் இருந்தன. ஒரே ஒரு வேட்டி இருந்தது. மற்றவை எல்லாம் கவிதைகள் கட்டுரைகள் எழுதிய தாள்கள் தான். நீங்கள் பெட்டியைத் திருடினால் என்ன செய்வீர்கள். பணத்தை எடுத்துக் கொண்டு மற்றவற்றைப் பெட்டியில் உள்ள முகவரிக்கு அனுப்பமாட்டீர்களா' என்று கேட்டேன். 'அதெல்லாம் எங்கள் வேலை இல்லை. பணத்தை நகையை எடுத்துக் கொண்டு மற்றவற்றைப் பெட்டியோடு சேர்த்து ஏதாவது கழிப்பறைப்பக்கம், ஆற்றங்கரை, கண்மாய்க் கரைப்பக்கம் தூக்கி எறிந்து விடுவோம்' என்றார்கள். எனக்கு திகில் ஏற்பட்டது. பணம் போனது பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால்....

கோவையில் அலுவலகம் போனநேரம்போக வீட்டில் சும்மா இருக்கும் நேரத்தில் என் கவிதைகளையும் கட்டுரைகளையும் செப்பம் செய்யலாம், முடிந்தால் தட்டச்சில் அடிக்கச் சொல்லலாம் என்று கொண்டு போயிருந்தேன். பாரதியைப் பற்றிய இரண்டு கட்டுரைகள், பாரதியைப் பற்றி, நபிகள் நாயகம் பற்றி, கலைஞர் பற்றி எழுதியிருந்த கவிதைகள் சில குக்கூக் கவிதைகள்.

ஜெயகாந்தன் பற்றி எழுதி வைத்திருந்த குறிப்புகள் இவை எல்லாமே பெட்டியோடு போய்விட்டன. என் எழுத்துக்களை இழந்த வருத்தத்தில் பிரமை பிடித்தவன் போல் உட்கார்ந்திருந்தேன்.

ஆய்வாளர் வந்தார். அவரிடம் சொன்னேன். புகார்க் கடிதத்தைக் கொடுத்தேன். காவல் துறை உயர்அதிகாரி கவிஞர் வா.சு.கணபதி என் மாணவர் என்றேன். உடனே தொலைபேசியில் அவரிடம் பேசச் சொன்னார். பேசினேன். அவர் எனக்காக ஆய்வாளரிடம் வேகமாக நடவடிக்கை எடுக்கச் சொன்னார். சரி என்றார். பிறகு என்னிடம் 'நீங்கள் போய் வாருங்கள். தகவல் தெரிவிக்கிறோம்' என்று என் தொலைபேசி எண்ணைக் குறித்துக் கொண்டார்கள்.

முதல் நாள் போரில் தோற்ற இராவணன் போல் நிலை குலைந்ததுபோல் நடத்துநர் கொடுத்த பணத்தை வைத்துக் கொண்டு சிவகங்கைக்கே திரும்பிவிட்டேன். இரண்டு மூன்று நாட்கள் சோகத்தில் மூழ்கினேன். எழுதுவது மில்லை. இப்போது எழுதியதுமில்லை என்று வேதனைப் பட்டேன்.

சில நாட்களில் கோவை சென்றேன். பூட்டுக்காரரை அழைத்து வந்து வீட்டுக்கதவுகளில் உள்ள பூட்டுக்களை உடைக்கச் சொல்லி உள்ளே சென்றேன். பீரோவை சாவிபோட்டுத் திறந்துவிட்டார். கவிஞர் சிதம்பரநாதனிடம் எல்லாவற்றையும் சொன்னேன். சமாதானப்படுத்தினார்.

❖

'ஓம் சக்தி' இணையாசிரியர் பொறுப்பிலிருந்து விடுதல் பெற்று வந்ததும் எஞ்சிய கவிதை கட்டுரைகளையாவது விரைவில் அச்சாக்க வேண்டும் என்று எண்ணினேன்.

கவிக்கோ ரகுமானும் கவிஞர் சிற்பியும் தம்பிகள் பாலாவும், போசும் என்னைப் பார்க்க வரும்போதெல்லாம்

'அகரம்' அச்சகம் இருந்தபோது ஊரார்க்கெல்லாம் புத்தகம் போட்டீர்கள். உங்கள் புத்தகங்களைக் கொண்டு வரவில்லையே என்று வருத்தப்பட்டுக் கொண்டார்கள்.

அதற்குப் பிறகுதான் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தேன். நைந்து பிய்ந்து போன தாள்களிலிருந்து கவிதைகளை எடுக்க ஆரம்பித்தேன்.

1965இல் வந்த 'இராசேந்திரன் கவிதைகள்' நூலை முதலில் எடுத்தேன். அப்போதே அதில் சேர்க்கலாம் என்று ஒதுக்கி வைத்திருந்த கவிதைகள் சிலவற்றையும் தொகுத்து 'மீரா கவிதைகள்' என்று புதுப்பெயர் சூட்டியுள்ளேன். இரண்டாவதாக 'குக்கூ' தொகுப்பை முடித்தேன். எஞ்சிக் கிடக்கும் கவிதைகளில் தேர்ந்தெடுத்த சில கவிதைகளைத் தொகுத்து ஒரு நூலாக்கினேன். இந்தக் கவிதைகள் அனைத்தும் எழுபதுகள் தொடங்கி 2002 வரை எழுதியவை. நெடுங்கவிதைகள், கவியரங்கக் கவிதைகளின் சில பகுதிகள், குறும்பாடல்கள், புதுக் கவிதைத் தோற்றம் எடுத்த சில மரபுக்கவிதைகள், புதுக்கவிதைகள் இப்படி ஒரு கலவையான நூலாக இது அமைந்துவிட்டது.

இத்தொகுப்புக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று யோசித்தேன். ஆங்கிலத்தில் Illusion and Reality என்று ஒரு புத்தகம். அந்தத் தலைப்பு மனதில் வந்து நின்றது. அந்த அர்த்ததில் 'கோடையும் வசந்தமும்' என்று பெயர் வைத்தேன். நியாயமாகப் பார்த்தால் வசந்தமும் கோடையும் என்றிருக்க வேண்டும். சொல்வதற்கு ஏற்றபடி இருக்க வேண்டும் என்று அப்படி வைத்தேன்.

எழுபதுகளுக்கு பிறகு என் எழுத்துக்களில் 'பிரச்சாரம்' ஓங்கி ஒலித்தது என்பதை இந்நூல் உறுதிப்படுத்தும். அதற்குக் காரணம் என்னுடைய பொதுவுடைமைச் சித்தாந்த ஈடுபாடு தான். அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக

குரல் கொடுக்க வேண்டும் என்று மார்க்சியம் எனக்கு போதித்தது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் எழுச்சியில் நான் இரண்டறக் கலக்க ஆசைப்பட்டேன். ஒரு பெரிய போருக்குப் படைதிரட்டப் பாடுகிறேன் என்று முழங்கினேன்.

கழகத்தில் இருந்தபோது நான் எழுதிய கவிதைகளுக்கும் (மீரா கவிதைகள்) இதில் உள்ள கவிதைகளுக்கும் அதிகம் வித்தியாசம் இல்லை. இரண்டிலுமே என் முற்போக்கு, அதிமுற்போக்கு அரசியல் முகங்களே தென்படுகின்றன. நடையில் வீரியக் குறைவு, வார்த்தைகளில் கலப்பு மொழி, சில இடங்களில் செயற்கைத் தன்மை இத்தொகுப்பில் காணப்படுகிறது. அவற்றை எடுத்தெறிய முடியவில்லை. மேலும் அழகுபடுத்த அவகாசம் இல்லை. அப்படியே விட்டு விட்டேன்.

❖

'கோடையும் வசந்தமும்' தொகுப்புக்கு அணிந்துரை அளிக்குமாறு வானம்பாடி இயக்கத் தலைவரும் கோவை பாரதியார் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவரும் அறிஞரும் கவிஞருமான சிற்பி அவர்களிடம் வேண்டினேன். கவிதைகளை அனுப்பி வைத்தேன். நான் அவருக்கு இரண்டு முன்னுரை கொடுத்திருக்கிறேன். பதிலுக்கு ஒன்றாவது வாங்க வேண்டாமா?

என் வேண்டுகோளுக்கிணங்க பச்சைப் பசுந்தமிழில் 'கலாபத்தை விரித்தாடும் போது மயில் கொள்ளை அழகைக் கொட்டுமே, அந்த வசீகர நடையில் எழுதியிருக்கிறார்.

என் கவிதைகளின் பெருமைகளை மட்டும் எடுத்துக் காட்டியிருக்கிறார். வயதான காலத்தில் விமர்சிக்க வேண்டாம் என்று விட்டுவிட்டார். என் இருவேறு பார்வைகளைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

மூன்று ஆண்டுகளுக்கு முன் (தேதி நினைவில் இல்லை) பொள்ளாச்சியில் பெரும் மக்கள் கூட்டத்தில் 'வாழ்நாள் சாதனையாளர்' என்னும் விருதளித்து என்னைப் பாராட்டினார். 45 ஆண்டுகளுக்கு முன்பு நான் தொகுத்த என் கல்லூரி வெள்ளி விழா மலர்த் தலையங்கத்தைப் படித்துவிட்டு உயர்ந்த உள்ளத்துடன் என்னைப் புகழ்ந்து எழுதிய நாளிலிருந்து எங்கள் நட்பு நங்கூரம் போட்டது போல் நிலைத்து நிற்கிறது.

'பல்லாண்டு' வாழ்க என்று என்னை வாழ்த்தியிருக்கிறார். வாழ்ந்து காட்டுகிறேன் என்று சொல்ல முடியாவிட்டாலும் வாழ்ந்து பார்க்கிறேன்.

கவிஞர் தேனரசன் எனக்குப் பிடித்த மற்றொரு துடிப்புள்ள வானம்பாடிக் கவிஞர். சிற்பியின் அடியார்க்கு நல்லாரான இவரும் ஒரு பொள்ளாச்சிக்காரர். இவருடைய வெள்ளை ரோஜா கவிதைத் தொகுப்பை பல ஆண்டுகளுக்கு முன் அன்னம் வழியாக நான் தான் வெளியிட்டேன். இப்போது கவிதா பதிப்பகம் மூலம் 'மண் வாசல்' என்னும் தொகுப்பைக் கொண்டு வந்துள்ளார். அதை ஆனந்தமாய்ப் படித்து அனுபவித்து ஒரு கடிதம் எழுதினேன். ஆளை மயக்கும் கொங்குநாட்டுத் தமிழையும் அவருடைய கிராமியத்தையும் புகழ்ந்திருந்தேன்.

சிற்பி என் 'கோடையும் வசந்தமும்' தொகுப்புக்கு அணிந்துரை எழுதுகிறார். அவர் வீட்டுக்கு ஒரு எட்டு நடந்து போய் அத்தொகுப்பைப் படித்துவிட்டு நீங்கள் மதிப்புரை எழுதிக் கொடுங்கள் என்று கவிஞர் தேனரசனிடம் பேசியில் கேட்டுக்கொண்டேன்.

என் ஆதி முதல் அந்தம் வரும் இந்த நாள் வரை என் கவிதைகளில் கண்ட சிறப்புகளை அடுக்கியுள்ளார். அழகொழுக எழுதியுள்ளார்.

பொள்ளாச்சி படப்பிடிப்புக்குப் புகழ்பெற்ற ஊர். என் 'கோடையும் வசந்தமும்' படப்பிடிப்புக்கும் நன்றாய் உதவியிருக்கிறது.

சிற்பியின் அணிந்துரை உதகைக்கு மலைரயிலில் செல்வது போல் உள்ளது என்றால் தேனரசனின் மதிப்புரை உதகை ஏரியில் படகு சவாரி செய்வது போல் இருக்கிறது. இருவருக்கும் என் வணக்கங்கள்.

❖

கவிக்கோ விருதளிப்பு விழாவில் வெளிவரும் மூன்று நூல்களில் இதுவும் ஒன்று.

நான் எழுதுவதே இல்லை என்று குறைப்படும் என் சிறிய வாசகர் வட்டத்துக்கு இது ஒரு சிறுதேநீர் விருந்தாய் அமையும் என்று நம்புகிறேன். இத்தொகுப்பை அழகுறத் தயாரித்து, என்னை அவையத்து முந்தியிருக்கச் செய்யும் என் மகன் கதிருக்கும் அகரத்திற்கும் என் இனிய வாழ்த்துக்கள்.

2, சிவன்கோயில் தெற்குத் தெரு
சிவகங்கை

மீரா
3.6.2002

# காணிக்கை

இராமநாதபுரம் அரசர் உயர்நிலைப் பள்ளியில்
சிவகங்கை மன்னர் துரைசிங்கம் நினைவுக்
கல்லூரியில் மதுரைத் தியாகராசர் கல்லூரியில்
எனக்குத் தமிழறிவித்த தமிழ்ச் சான்றோர்கள்;

*திரு.இரா. இராமனுச ஐயங்கார்*
*திரு.தி. இராமனுச ஐயங்கார்*
*- செந்தமிழ்க் காவலர்*
*முனைவர் சி. இலக்குவனார்*

ஆகிய மூவர்க்கும்.

## படை திரட்டப் பாடுகிறேன்

பொன்னுக்கோ, இல்லை
புகழுக்கோ பாடவில்லை;
என் மனிதச் சாதி
எழுச்சிக்கே பாடுகிறேன்

கீழ்மேல் என் றின்னும்
கிறுக்கில் உளறுகின்ற
பாழ்வாய் கிழிக்குமொரு
படை திரட்டப் பாடுகிறேன்.

ஊழ்வினையாம் சேற்றில்
உள்ளத்தை அடியோடே
மூழ்கவிடும் பேதையரை
முன்னேற்றப் பாடுகிறேன்!

○

பொன்னுக்கோ, இல்லை
புகழுக்கோ பாடவில்லை
மன்பதையின் ஞான
மலர்ச்சிக்கே பாடுகிறேன்!

நாடும் இனமும்வெவ்
வேறெனினும் நம்முடலில்
ஓடுங் குருதிநிறம்
ஒன்றென்று பாடுகிறேன்;

எங்கோ ஒருவன்
இலட்சியத்தை மாலையிட்டால்
இங்கே அவனுக்(கு)
இலக்கியம்நான் பாடுகிறேன்!

○

பொன்னுக்கோ, இல்லை -
புகழுக்கோ பாடவில்லை;
புன்மை களையும்
புரட்சிக்கே பாடுகிறேன்.

மூளைப் பசியறியா
முட்டாளைக் கொண்டாடா
நாளைத் திருநாளை
நாவாரப் பாடுகிறேன்!

பாவ நிழலைப்
படியவிடா மல்தடுக்கும்
தேவன் வந்தேன் என்று
தெம்பூட்டப் பாடுகிறேன்!

'தாமரை'

## ஏன் வரவில்லை?

''புஷ்பா தங்கதுரைக்கு மட்டும்
என்ன ஏகபோகம்
நாமும் போவோம்''
என்றோர் இரவில் எழுந்தேன்

அந்த உடற் கடைவீதியில்
அடியெடுத்து வைத்ததும்
எத்தனை வரவேற்பு எனக்கு.

உள் நுழைந்தேன்;
கல்லறையிலிருந்து
உயிர்த்தெழுந்து வருவதைப் போல்
ஒருத்தி வந்தாள்.
அவள் கண்ணோ
சவக்குழிக்குச்
சரியான உதாரணம்....

'எப்படி இங்கே வந்தாய்?' என்றேன்

'தேனாக இனிக்கும் என்று தேடி
நானாகவா வந்தேன்?
பள்ளிக்குப் போகும்போது
படத்தில் நடிக்கலாம் வா
என்றான் ஓர் எத்தன்

இந்த இடத்தில் விட்டுப்
போய்விட்டான்' என்றாள்.

○
எதிரே
கும்பலில் இருந்தொரு
குரல் கேட்டது.

என் அப்பாவுக்கு
எட்டாவது பெண்நான்.

வரதட்சணை கொடுக்க
வழியில்லாமல்
திரும்பி வராத
திசையில் போனார்.

நானோ,
என் காலில் நிற்க நினைத்தேன்
கல்யாணத்துக்குத்
கை நிறையச் சேர்க்க
இங்கே வந்தேன்
நித்ய கல்யாணியாய் நிற்கிறேன் என்றாள்.

○

'வைரத்தை வைரத்தால்
அறுக்கலாம் என்பார்கள்;
நாங்களோ,
பசியைப் பசியால்
விரட்டி அடிக்கிறோம்
என்றாள் இன்னொருத்தி.

கொஞ்சம்
புதுக்கவிதைபோல் புரியாததால்
விளக்கம் வேண்டினேன்.
அவள் தொடர்ந்தாள்.....
'எங்களுக்கோ குடற்பசி,
எங்களைத் தேடிவரும்
உங்களுக்கோ
நல்ல உடற்பசி....
பசிக்குப் பசி....
எப்படி....' என்று
விரக்தியோடு சிரித்தாள்.

○

மௌனமாயிருந்த
மற்றொருத்தியிடம்
'உன் கதை' என்றேன்
'என் கதை?.....
காவிரிப்பூம் பட்டினத்துக்
கண்ணகி கதை இல்லை
கலியுகக் கண்ணகி கதை;
என் கண்கண்ட தெய்வத்தின்
கண்ணில்

என் கழுத்தில் இருந்த
பொட்டுத்தாலியும்
பட்டுவிட்டது.

ஒரு புட்டியோடு
பொழுதெல்லாம் மயங்கவும்
ஒரு சின்னக் குட்டியோடு முயங்கவும்
என் தாலியைத் தட்டிப் பறித்தார்
அதுவும் போதாமல்
ஆயிரம் ரூபாய்க்கு
இந்த
விடுதியில் என்னை
விட்டு விட்டார்....
விற்று விட்டார்.....

○
சிந்தை துடித்தேன்
திகைத்தேன்..... திரும்பினேன்

கலியுகத்தில்
காசு நாதர்களின்
கையில் சிக்கித் தவிக்கும்
மக்த லேனாக்களைக் காப்பாற்ற
எந்த ஏசுநாதரும்
ஏன் வரவில்லை?

இந்திர போகத்துக்கு
இரையாகிக்
கல்லாய்க் கிடக்கும்
அகலியைகளுக்கு

விமோசனம் அளிக்க
எந்த இராமநாதனும்
ஏன் வரவில்லை?

துச்சாதனக் கரங்களால்
தொட்டுத் துகிலுரியப்
பட்டுத்துடிக்கும்
பாஞ்சாலிகளுக்குப்
பரிவுகாட்ட
எந்தக் கண்ணனும்
ஏன் வரவில்லை?

# வெட்கத்திரை

என்
அறையைத் திறந்த
அடுத்த வினாடியே
அத்துமீறிப் புகுந்து
வம்பளப்பாள்.....

ஏதேனும்
எழுதத் தொடங்கினால்
பேனாவைப் பிடுங்கிப்
பெரிய சித்திரலேகை போலக்
கண்ணால் என்னை
அளந்து பார்த்துப்
படம் எழுதுவாள்;
கட்டபொம்மன் மீசை
வரைந்து
கலகலவென்று சிரிப்பாள்....

திடீரென,
'வட்டத் தலைவர்
செத்து விட்டார் -
இன்று விடுமுறை'
என்று குதிப்பாள்;
குதூ கலத்தில்
கட்டிப் பிடிப்பாள்
என் தோளை....

எப்போதேனும்
சினிமாவுக்குச்
செல்ல எழுந்தால்
சிட்டாய் வந்து
ஒட்டிக் கொள்வாள்...

நான்
மதுரை புறப்படும்
நேரம் பார்த்து
எதிரில் நின்று
'மாமா எனக்கு
ரிங்வளையல் ரிப்பன்
பால்பேனா நகப்பாலிஷ்
வாங்கி வாங்க'
- இப்படிச்
சின்னச்சின்ன
உத்தரவிடுவாள்......
○

இதெல்லாம் முன்னால்.....
இப்போதெல்லாம்
அவளைக் காணோம்.....

என் அறைக் கதவை
எட்டித்தள்ளி
உள்ளே நுழையும் அவள்,
இப்போதெல்லாம்
என்னைப் பார்த்ததும்
முகத்தில்
வெட்கத் திரையை
வேகமாய்ப் போட்டுத்
தன் அறைச் சன்னலை
சாத்தி விடுகிறாள்....

அவள்
'பெரியமனுஷி'
ஆகிவிட்டாளாம்!

## மறுபடியும் மறுபடியும்

மறுபடியும்
என் மனத்தில்
ஊர்கின்றன
உன் பார்வைகள்
பட்டுப் பூச்சிகளாய்,

மறுபடியும் மறுபடியும்
என் உடலில் உயிரில்
ஊர்ந்து ஊர்ந்து
அரிக்கப் போகின்றன
உன் நினைவுகள்
கம்பளிப் பூச்சிகளாய்.

## ஏமாற்றம்

பைலட் பேனாவைப்
பாராட்டிச் சொல்கிறார்கள்
என்று வாங்கி
ஏமாந்து விட்டேன்

இதற்கு முன்பு
எந்தப் பேனாவும்
வாங்கியதும்
என்பெயர் எழுதும்;
இதுவோ
சுத்த மோசம்
உன் பெயர் எழுதுகிறது.....

ஏமாந்துவிட்டேன்......

# நான்

வான வீதியில் வலம் வரு கின்ற
தேவ குமாரனின் தேரில்
பூட்டப் பட்ட பொன்னிறக் குதிரை
ஏழாம்..... அந்த ஏழும் நாட்களாம்....
என்னவோ....
அவன் தேர்
தடையில் லாமல் உருண்டு செல்கிறது
ஏழை மக்கள் வாழ்க்கை வண்டியோ
தரித்திரப் பள்ளத்தில் தடம்புரள் கின்றது.

○

முப்பது நாட்களாய்
அலுவலகத்தில் அடைகாத் திருந்தே
ஒரு நாள்
ஊதியக் குஞ்சைப் பொரித்துப்
பார்க்கும் நேரம் பார்த்துக்

கணக்காய்க்
கொத்திப் போகப்
பறந்து வரும் கடன் காரப் பருந்து.

○

எவனோ
காலத் தேனடையைக் கசக்கிப் பிழிந்தான்
நாவில் விழுந்ததோர் தேன்துளி; அதனை
மணநாள் என்று மகிழ்ந்து சொல்கிறோம்

எவனோ
காலக் கடலைக் கடைந்தான்
ஆல கால நஞ்சின் ஒருதுளி
இதழின் நுனியில் பட்டது. அதனைப்
பிணநாள் என்று பேசு கின்றோம்.

○

நாள் -
காலம் எழுதிய கவிதைத் தொகுப்பின்
பளபளக் கின்ற பக்கம். சாவின்
சந்நி தானத்தில் சஞ்சல வேர்கொண்ட
உடற்கொடி உதிர்க்கும் ஒருமலர். இனிக்கும்
உயிர்க் கரும்பதனைக் கணுத்தொறும் கணுத்தொறும்
அறுக்கும் கொடுவாள். யுகம்பசி கொண்டு,
வெட்டி விழுங்கும் ரொட்டித் துண்டு.
இரவும் பகலும் எதிரெதிர் ஆடும்
கிளியந் தட்டு, கிழமை வீரர்
வலைக்குள் போடும் கூடைப் பந்து!

○

அவள்
விழித்தெழுந்தாள்....
குங்குமக் கடலில் குளித் தெழுந்தாள்.
செக்கச் சிவந்த மேனி காட்டிச்
சொக்க வைத்தாள்.....
கண்கள் கூசும் கவர்ச்சி வேடம்
போட்டுப் புகழின் உச்சி போனாள்
பின்னர்
நாடி நரம்புகள் நன்றாய்த் தளர்ந்தன
ஆடி முடித்தாள்.... அடங்கிச் சாய்ந்தாள்....
மோகம் பதித்த முகம் சுரந்தது
சோகம் படர்ந்தது. சுற்றி
நேயர் கூட்ட நெரிசல்
கன்னங் கரிய ஆடை கவிழ்ந்தது
சவம் -
மேற்குத் திக்கில் புதைக்கப் பட்டது.
''ஒருநாள்'' வாழ்க்கை ஓய்ந்தது.

○

காலம் ஒரு விளக்கு
ஆண்டுகள் -
அதன் முகங்கள்
மாதங்கள் திரிகள்
கிழமைகள் வெளிச்சம்
கிளர்த்தும் சுடர்கள்

நாட்களோ எரிந்து
வீழும் விட்டில்கள்!

காலம் ஒரு கடல்
அதன் மேல்
வருடம் காற்றாய் வருடுகின்றது
மாதம் அலையாய் மோதுகின்றது
கிழமை அடிக்கடி நுரைக் கின்றது
வாழ்நாள் -
குமிழாய்த் தோன்றி மறைகின்றது.

○

சிவந்த பகலும் கறுத்த இரவும்
சேர்ந் திருக்கும் இரண்டு புறமும்
நாள் -
ஒரு
அர்த்தநாரீசர்
அதனைப்
பகுத்தறிவாளரும் பரவலாம்.

○

நாள்
கட்டுப் பாட்டைச் சுட்டிக் காட்டும்
ஒரு
சிவப்பு முக்கோணச் சின்னம்
நேற்று - கரைந்து போன கனவு.
நாளை - நம்ப முடியாக் கற்பனை

இன்று - கையில் இருக்கும் காகிதம்
ஆற்றல் மிக்கவர்
காகிதம் தன்னைக் காவியம் ஆக்கலாம்.

*மதுரையில் நடந்த எழுத்தாளர்
மன்றக் கவியரங்கில் வாசித்தது.*

## பாம்புகள் பலவிதம்

அங்கிங்கு எனாதபடி
அகிலத்தை மனிதகுலம்
ஆண்டு கொண்டிருப்பதுவாய்
ஆர்ப்பரிப்போம் நாம் இன்று....
ஆனாலும் நமை அன்று
ஆடு மனிதனே என்று
ஆட்டி வைத்ததொரு பாம்பு....
அதல பாதாளத்தில்
வீழவைத்ததொரு பாம்பு!

○

முன்னேற்றத்தைச் சமைக்க
மூட்டினோம் தீ: எங்கும்
நெருக்கடிப் புகைமுட்ட
நிற்கிறோம்....
மூச்சுத் திணறுகிறோம்
முகம் வெளுத்துத் திரிகின்றோம்!

ஆனால் நம்
அப்பனுக்கும் அப்பனுக்கும்
அப்பனுக்கும் முன்னோன்
ஆன மனிதன் -
ஆதி மனிதன்
ஏதேன் தோட்டத்தில்
என்னமாய் இருந்தான்!

கைத்தறியோ கதரோ
கண்கவரும் குவாலியர்
மில்துணியோ எதுவுமே
தேவையின்றிச் செலவின்றி
அம்மணமாய் இருந்தான்!
ஆனந்தமாய் வாழ்ந்தான்!

பசி இல்லை பகை இல்லை
பஸ் கட்டண உயர்வில்லை
ரேஷன் இல்லை, 'க்யூ' இல்லை
கடை இல்லை கடன் இல்லை
காவல்துறை இல்லை
கற்பழிப்பும் இல்லை
ஸ்டவ் இல்லை, வரதட்சணைச்
சாபம் இல்லை சதி இல்லை
தேர்தல் இல்லை கட்சி இல்லை
தெருவில் எங்கும் கொடிகள் இல்லை
தேர்வு இல்லை 'காப்பி' இல்லை
தேசம் இல்லை சண்டை இல்லை....

அடடா,
ஆதி மனிதன்

ஏதேன் தோட்டத்தில்
என்னமாய் இருந்தான்!

சொர்க்கத்தின் அரவணைப்பில்
சுகத்தைப் பகிர்ந்து கொண்ட
சுந்தரக்கனவு கண்ட
அற்புத ஜோடியை
ஆதாம் ஏவாளை
ஆட்டி வைத்ததொரு பாம்பு....
சபலத்தை ஊட்டி
சஞ்சலத்தை உண்டாக்கி
வீழவைத்த தொரு பாம்பு....

அந்த நாளிருந்தே
அந்தோ பாவம்,
மனிதன் விழுகிறான்...
நிமிர்கிறான் எழுகிறான்
எழுந்துபின் விழுகிறான்...

நாளும் பொழுதும் நடக்கும்
இந் நாடகத்தைப்
பார்த்துச் சிரிக்கும்
பரிகசிக்கும் பாம்பு!

○
பாம்பு விஷம் கக்கும்
ஆனாலும் அதே விஷமே
விஷத்துக்கு மருந்தாகும்
விந்தையினைக் காண்கிறோம்;
ஏறுகின்ற விஷத்தை
இறக்குகிறோம், அதே விஷத்தால்!

'விலைவாசி ஏற்றம்
விஷம்போல்...' என்கிறோம்
ஏறுகின்ற இந்த விஷத்தை
இறக்க முடிகிறதா?
குறைக்க முடிகிறதா?
மனித விஷத்துக்கு
மருந்தில்லை என்றிருந்தால்
சீறும் பாம்பும்
சிரிக்கத்தான் செய்யும்!

○

பாலநாகம்மா காலமுதல்
திரையுலகில்
பாம்பை வைத்துத்தான்
பல கதைகள்;
பலப்பல காட்சிகள்
உண்மையில் பாம்புகள்தான்
படங்கள் எடுக்கின்ற
படாதிபதிகள்....
பிடாரன் கையில்
பிரியமாய் வைத்திருக்கும்
வட்டப் பெட்டியைப்
பாருங்கள்; பக்குவமாய்
படச்சுருளை வைத்திருக்கும்
டப்பாவைப் பாருங்கள்
எத்தனை ஒற்றுமை!

அந்தஸ்தில் உள்ளவர்
அங்கவஸ்திரம் அணிவர்;
கல்லூரிக் காளையர்

கச்சிதமாய் ‘டை’ அணிவார்...
அன்பாய் ஓர் ஆலோசனை....
அவரெல்லாம்
பளபளப்பாய் வழுவழுப்பாய் இருக்கும்
பாம்பை அணிந்தால்
வீதியிலே போவோர்
விழிகள் எல்லாம் மொய்க்குமே!

நாதர் சிவபெருமான் நற்கழுத்தில்
நாகப்பாம் பணிந்திருக்க
பார்க்கின்றோம் கும்பிட்டுப்
பாவாறு துதிக்கின்றோம்
அந்த
அரனைப்போல் நாமும்
அரவத்தை அணிந்தால்தான்
‘மனிதன் என்பவன்
தெய்வம் ஆகலாம்’
என்ற கவிதைக்கு
இலக்கியம் ஆகலாம்!
ஏற்றபொருள் காணலாம்!

ஒரு
மலர் மாலையை எடுத்து
மாணிக்க மாலையாகப்
போடுதற்குப் பதிலாகப்
புதுவிதத்தில் இனிமேல்நாம்
மந்திரிகளுக்கெல்லாம்
ஒரு
மலைப்பாம்பைச் சூட்டலாம்
நம்
மரியாதையைக் காட்டலாம்!

○

இன்னொருவன் வீட்டு
இளமயிலைத் தூக்கிப்போய்
பொன்விலங்கு போட்டுப்
போகத்துக் காளாக்க
ஏங்குகிற பாம்புகள்
இராவணப் பாம்புகள்.....

வேடம் புனைந்து
வேண்டியவர் போல் என்றும்
கூட இருந்து
குழிபறிக்கத் திட்டமிடும்
கொலைகாரப் பாம்புகள்
குடிலப் பாம்புகள்....

அரசியலில் சூதை
அலங்காரக் கலையாக்கி
தருமத்தை விலையாக்கும்
சண்டாளப் பாம்புகள்
சகுனிப் பாம்புகள்....

வட்டிக்கு மேல் வட்டி
வாங்கி ஏழைகளை
அட்டையென உறிஞ்சி
அன்றன்று கொல்லுகிற
சதிகாரப் பாம்புகள்
'ஷைலக்' பாம்புகள்....

ஒற்றுமைப் பண்பாட்டை
உலகெங்கும் இசைக்கின்ற
உன்னதப் பறவையினை

உன்மத்த மதவெறியாம்
துப்பாக்கியால் துளைத்தே
துயரத்தை அரங்கேற்றும்
குணங்கெட்ட பாம்புகள்
கோட்சேப் பாம்புகள்....

இப்படி
மனிதரில்
எத்தனை பாம்புகள்
எத்தனை பாம்புகள்!

இளைஞனே!
பல்லில் விஷங்கொண்ட
பாம்பை விட்டுவிடு!
உடம்பெங்கும் விஷங்கொண்ட
பாம்புகளின்
உயிரை எடு
இளைஞனே
உடனடியாய்த் தடியை எடு!

*மதுரை அமெரிக்கன் கல்லூரிக்*
*கவியரங்கொன்றில் பாடியது.*
*நாள்: 21.3.85*
*தினமலர் தீபாவளிமலர்*
*1988இல் வெளிவந்தது*

## கோடையும் வசந்தமும்

வசந்த காலம்....

கையில் காம சூத்திரம் ஏந்திக்
கண்கள் அலையச் சென்றேன்;
கடையில் பொம்மை கட்டி யிரு
காஞ்சிப் பட்டைக் கண்டேன்;
இடையில் அதனை எழிலாய்க் கட்
எதிரே ஒருத்தி வந்தால்
எப்படி இருக்கும் எப்படி இருக்கும்
என்று நினைத்துப் பார்த்தேன்;
வாங்கிக் கொடுக்க ஆசை இருந்தும்
இல்லையே எவளும் என்று
ஏங்கி நின்றேன் ஏங்கி நின்றேன்
ஏங்கி ஏங்கி நின்றேன்....

கோடைக் காலம்....

கையில் கணக்குக் கட்டைச் சுமந்து
கால்கள் தளரச் செல்கிறேன்;
கடையில் கம்பியில் அழகாய்த் தொ

உறையூர்ச் சேலையைப் பார்க்கிறேன்;
இடையில் அதனை எடுத்துச் சுற்றி
எதிரே மனைவி வந்தால்
எப்படி இருக்கும் எப்படி இருக்கும்
என்று நினைத்துப் பார்க்கிறேன்;
வாங்கிக் கொடுக்க வனிதை இருந்தும்
இல்லையே எதுவும் என்று
ஏங்கி நிற்கிறேன் ஏங்கி நிற்கிறேன்
ஏங்கி ஏங்கி நிற்கிறேன்.....

இது கோடைக் காலம்....
அது வசந்த காலம்.....

த.பீ. செல்லம் தொகுத்த
'விதி' தொகுப்பிலிருந்து

## இந்த மே தினத்தில்.....

இப்போதும்
இமை மதகுகளை மீறி
வெளிவருகிறது
ஈர வெள்ளம்.
ஒரு தோழன்
இன்னொரு தோழனிடம்
எதிர்பார்ப்ப தெல்லாம்
கண்ணீரல்ல -
வியர்வையும் இரத்தமும்
என்று என்னுள்
ஒரு மணிக்குரல்.
மையை ஒற்றும்
தாளாய்க்
கையை வைத்துக்
கண்ணீரைத் துடைக்கிறேன்.

○

தோழர் அலெண்டே!
வெள்ளை மாளிகை
வேட்டை நாய்கள்

உன் இரத்தத்தை
உறிஞ்சியதை விட
வியர்வையில் செழித்து
நிமிர்ந்த சிலியின்
செந்நெல் வயல்களை
டாலர் வெள்ளம்
புகுந்து நாசம்
புரிந்ததை நினைத்தே
உனது நெஞ்சம் துடிதுடிக்கும்
இப்போதும்.

○
நீ
விடுதலைப் புறாவைப்
பறக்க விட்டாய்;
பார்த்துக் கொண்டிருக்குமா
பாசிசக் கழுகு?
உன்னையே கொத்தித்
தின்று விட்டது.

○
நீ
ஆதிக்கப் பாம்பை
அடித்துக் கொல்லாமல்
மகுடி ஊதி
மடக்கப் பார்த்தாய்;
உன்னையே சீறித் தீண்டிவிட்டது.

○
நீ
சோஷலிசத்துக்குப்

படித்துறை அமைத்தாய்;
சுரண்டல் முதலை
சும்மா விடுமா?
உன்னையே வஞ்சித்து
விழுங்கி விட்டது.

○

ஒரு வெள்ளிக் கிழமை
விடியலில்
பெண்டகனில்
பொட்டுக் கட்டிப்
புறப்பட்டு வந்த
ஈனக் கும்பல்
சாந்தியா கோவில்
வீதியில்
அவிழ்த்துப்போட்டு
ஆடியது.
பீரங்கிச் சத்தம்
காதைக் கிழித்தது.

வானில்
குண்டுப் புகை
கூடு கட்டியது.

மண்ணில்
குருதி தூசியைக்
குளிப்பாட்டியது.

பினோசெட்டின்
பிற்போக்கு ராணுவப் பிடாரியின் கை

ஜனநாயகத்தின்
சேலையை உரிந்தது.

பல லட்சம்
தேசபக்தப்
பாப்லோ நெரூடாக்கள் -
கல்லறையில்.

கொள்கை மாற்றுக் குறையாத
கோர்வாலன்கள் -
கொட்டடியில்,

புரட்சி நூல்கள்
பொங்கும் நெருப்பில்.....

செல்வம் கொழிக்கும்
செம்புச் சுரங்கங்கள்
தேசியமயம் ஆக்கப்பட்டதால் -
கழுதையாயிருந்த
அமெரிக்க மூலதனம்
கட்டெறும் பானதால்
ஏகபோகம்
தனிநபர் கொலையைத்
தத்துவமாக்கி விட்டது.

சிலியின்
நல்ல நரம்பொன்று
அறுந்து விட்டது.
எனினும்
அதன் இரத்த ஓட்டம்

நின்று விடவில்லை -
இப்போதும்.

○

கலகம்
மழைக் காலக்
குடைக்காளான்களாய்த்
தலைதூக்கி அழியும்.
புரட்சியோ
எரிமலையாய் வெடித்துச்
சர்வநாச சக்திகளையும்
சாம்பலாக்கித்
தடந்தெரியாமல் அழிக்கும்.

கூண்டில் அடைபட்டாலும்
சிங்கம் சிங்கம்தான்.
எதிரில் தெரியும்
இரும்புக் கம்பிகளை
ஓங்கி அறையும் ஒரு சிங்கம் போல்
சிலி -
உக்கிரம் கொண்டிருக்கிறது
இப்போதும்.

○

தோழர் அலெண்டே;
நீ தான்
புரட்சிப் படையை
நடத்துகின்றாய் -
இப்போதும்.

மூலம் காண முடியாத
ஒரு ஜீவ நதிபோல்
எங்கிருந்தோ
உலகத் தொழிலாளர் உள்ளங்களிலே
உத்வேகம் அளிக்கிறாய்.

தோழர் அலெண்டே;
இப்போதும் -
நீ
நித்திரை கொண்டிருப்பதாய் நினைக்கிறோம்.
சங்கொலிக்கும்
சாயுங் காலத்தில்
வீடு திரும்பித் திண்ணையில்
பகல் வேலை
முடித்து வந்த அலுப்பில்
படுத்துறங்கும்
ஒரு பாட்டாளியைப் போல்
நீ
நித்திரை கொண்டிருப்பதாய் நினைக்கிறோம்.
இப்போதும் -

○

உன் நித்திரையில் வரும்
கனவுகளில் எல்லாம்
சிலியின் செங்கதிர் உதயமே தெரியும்
செம்படை அணிவகுப்பே தென்படும்.

தோழர் அலெண்டே;
உன் புதைகுழியில்
உன் துணைவி தூவிய

தூய மலர்கள்
வாடவில்லை -
இப்போதும்.
அவற்றின் சுகந்தம்
இலத்தீன் அமெரிக்க நாடுகளில்
தென்கிழக்காசிய நாடுகளில்
இன்னும் இன்னும்.....
அகிலமெங்கும் பரவுகிறது.

○

மார்க்சியம் -
உலக அரங்கில்
ஒலிம்பிக் பந்தய
ஓட்டக் காரன் போல்
கம்பீரமாக
வெற்றிச் சுடரை
ஏந்தி முன் வருகிறது.

முதலாளித்துவமோ-
ஒரு திருடனைப் போல்
இருண்ட
சந்து பொந்துகளிடையே
உருவம் மறைத்து
ஓடி ஒளிகிறது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்
விசுவரூப மெடுத்து நிற்கும்
கால கட்டமிது.

இனி
அது
எடுத்து வைக்கும்
மூன்றாவது அடியில் -
கம்போடியாவில்
குப்புற விழுந்து
தென் வியத்நாமில்
மண்ணைக் கவ்விய
ஏகாதி பத்தியம்
இருந்த இடம் தெரியாமல்
அதல பாதாளத்தில்
அழுந்தப் போகிறது,

தோழர் சால்வடோர் அலெண்டே;
ஒரு முறை
உன் பெயரை உச்சரிக்கும் போது
உதடுகளில்
மின்சார வெறி பிறக்கிறது.

எங்களுக்கு வாழ்த்துக் கூறு
இந்த மே தினத்தில்.

இந்திய ஜி.டி.ஆர்.
நட்புறவு மலரில் வெளிவந்தது
1.5.75

## மழை தந்த மழலை

குழலும் யாழும் கொடுக்கும் இசையை
இனிதென் றுலகில் இயம்பு வோர்கள்
பிள்ளை யில்லாப் பிள்ளை யார்கள்.
இனிது இனிது மழலை இனிது!
மழலை இனிதெனில் மழலையை ஈன்ற
மழைமிக இனிதே! ஈதென்ன மழையா
மழலையை ஈன்றது என்று மலைக்க
வேண்டாம். இதோநான் விளக்கம் தருகிறேன்.
ஒருநாள் இம்மண்ணில் உங்கள் மூ தாதையர்
மழைநீர் பிடிக்க வைத்த குடத்தில்
உலைநீர் போன்ற ஓசையைக் கேட்டனர்.
ஆ! ஆ! மழைநீர் அலைத்தலி னாலே
பிறக்கும் ஓசை பெரிதும் இனிதே
என்றனர்; மகிழ்ந்தனர்; மழலையைக் கண்டனர்
இதற்குப் பிறகுதான்
பலதரங் கேட்டுப் பார்த்தாலும் சலிக்காச்
சலதரங் கம்எனும் சங்கீதம் கண்டனர்.

## எங்கும் சுவரொட்டி!
## எதற்கும் சுவரொட்டி!

சுவரின்றிச் சித்திரம்
வரைய முடியுமா
என்று நம் முன்னோர்
சும்மாவா சொன்னார்!
முன்னோர் மொழியைப்
பொன்னே போல் போற்றுகிறோம்
இன்னும்
ஒருபடி மேலேநாம் போகின்றோம்.

தீபாவளித் திருநாளில்
சின்னப் பிள்ளைகள்
மத்தாப்பு வெடிஎன்று
காசைக் கரியாக்கிக்
காட்டுவார்.....
தேர்தல் பெருநாளில்
தேசத்தைக் காப்பாற்றும்
பெரிய பிள்ளைகள்
பிரியமுடன் பல இலட்சம்
செலவில் போஸ்டர்கள்

தெருத்தெருவாய் ஒட்டுவார்கள்;
கள்ளக் கணக்கைச்
'சரி'யாக்கிக் காட்டுவார்.

சுத்தமாய் வெள்ளை
அடித்த சுவர்என்றால்
மொத்தமாய்க் கைப்பற்ற
முன்பதிவு செய்வார்....
முத்திரை செய்வார்....
மூர்க்கமாய் அங்கங்கே
தொண்டர்களுக் கிடையே
கைவரிசை! கால்வரிசை!
'போடா இதுஎங்கள்
சுவர்' என்று ஈரணிகள்
சோடா பாட்டிலொடு
தோன்றுவர்....

வீட்டுக்காரன்
வெளியே வந்தாலும்
வேடிக்கை பார்ப்பதன்றி
என்சுவர் என்றுரைக்க முடியுமா?
எல்லோரும்
கூட்டணி அமைத்துக்
கொடுத்தால் அவரால்
வாங்கத்தான் முடியுமா?
தாங்கத்தான் முடியுமா?

ஒன்றேகால் அங்குலத்தில்
ஒருவர் சுவர்வைக்கப்
பார்த்தேன்.... பதறினேன்.

இதுஎன்ன நிலைக்குமா
இருபதுநாள் நிற்குமா
என்றேன் நான். அவர் சொன்னார்....
தேர்தல் அறிவிப்புச்
செய்தி தெரியாதா?
இன்னும் சிலமாதம்
சென்று வாருங்கள்
வந்து பாருங்கள்
அப்போது
ஆச்சரியப்படும்படியாய்
அதிகனமாய் சுவர் இருக்கும்
என்றார் பெருமையுடன்.

தேர்தல் முடிந்த
சிலநாளில்
ஆவலோடு
போய்ப்பார்த்தேன்....

அதிசயம்....
கம்பன் காலத்துக்
கன்னிப்பெண் இடைபோல்
இருந்தசுவர்
கர்ப்பவதி வயிறுபோல்
கனத்திருக்கக் கண்டேன்
கட்சித் தொண்டர்கள்
கணக்கின்றி இரவெல்லாம்
ஒன்றுக்கு மேல்ஒன்றாய்
ஒட்டிய சுவரொட்டிகள்
உண்டான பெண்ணாக
உருமாற்றி விட்ட
உண்மையினைக் கண்டு கொண்டேன்

○

தேர்தல் முடிந்தாலும்
தீரப் போவதில்லை
சுவரொட்டி மனப்பான்மை
கல்தோன்றி மண்தோன்றி
சுண்ணாம்பு தோன்றி
சுவர்தோன்றி விட்டது.

வெற்றிவிழாச் சுவரொட்டி
வீழ்ச்சியுற்ற போதிலும்
நாகரிகமாக
நன்றிசொல்லும் சுவரொட்டி
மந்திரியாய் வருகின்ற
மகத்துவத்தைப்பாராட்டி
வட்டச்செயல் வீரர்
வடிவேலு வண்ணமுத்து
அஜ்மல்கான் அலெக்ஸ் என்று
அடியில் பெயர்பொறிக்கும்
வரவேற்புச் சுவரொட்டி
கல்யாணச்சுவரொட்டி
காதுகுத்துச் சுவரொட்டி
புதுவீடு கட்டிப்
புகுந்தால் சுவரொட்டி
செத்தால் சுவரொட்டி
செல்வாக்குக் காட்டும்
பித்தால் சுவரொட்டி
பெருகிவரக் காண்கின்றோம்.

சீட்டுக் கம்பெனி
சின்ன முதலாளி
ஓட்டலிலே தின்று
உருண்டு புரண்டு

ஒரு வாரத்துக்குப் பின்னர்
ஊர் வந்தால்
'சீமைப் பயணம்
சென்று திரும்பிய
வித்தகரே வருக' வென்று
விளம்பரச் சுவரொட்டி!
இனிமேல்-
சுவரொட்டி இல்லாமல்
சுவைக்காது எதுவுமிங்கே!

கடைக்குப் போய்வந்த -
காய்கறி வாங்கிவந்த
கர்ம வீரனே வருக!

பற்றுத் தேய்த்துப்
படிப்படியாய்
சமையல்காரியாய்ப்
பதவி உயர்வுபெற்ற
பங்கஜமே வருக!

கீர்த்தி மிகுந்த
கேம்பிரிட்ஜ் பள்ளியிலே
எல்.கே.ஜி. வகுப்பிலே
இனிதாகச் சேரவந்த
இளந்தளிரே வருக

- இப்படி
சுவரொட்டி இல்லாமல்
சுவைக்காது எதுவுமிங்கே!

'மாலை முரசு'
பொங்கல் சிறப்பிதழ்
*27.10.89*

# உழவன்

அகரம் அவன்....
அனைத்துக்கும்; யாராலும்
தொடமுடியாச்
சிகரம் அவன்.

நெய்வோர் கை பசிவந்தால்
நின்றுவிடும்; நெஞ்சம்
தொய்வார்.... வாழ்வில்
செம்மை சேராவிட்டால்
சிந்தை கவர் ஓவியங்கள்
எம் மை கொண் டெழுதத்தான் இயலும்?
கஞ்சிக்குத்
திண்டாடும் போதிங்கே தில்லைக்குச் செல்வார் யார்?
வண்டாடும் மருதம் வறண்டால் பாடுவதார்?
சோறு வடிக்கச் சுத்தமாய் இல்லையென்றால்
வீறுமிகு வேல்வடிக்க விரும்பும் கொல்லன் யா
இரைப்பை சுருங்கையில் எதிரிகளைச் சாடும்
விறைப்பை உடைய வீரப் படைஞர் யார்?

அகரம் அவன்.....
அனைத்துத் தொழிலுக்கும்.... யாராலும்
தொடமுடியாச்
சிகரம் அவன்....
○
தேவர்க்கு மட்டும்
அமுதளித்தார் சிவபெருமான்
யாவர்க்கும் அமுதளிக்கும்
அண்ணல் உழவன் அவன்!

அரிய உணவு தன்னை ஆக்கல்;
சுட்டெரிக்கும்
பெரிய பசிதன்னைப் பெயர்த் தொழித்தல்
உயிரைக்
காத்தல் என்றுலகில் கச்சிதமாய் முத்தொழிலும்
வாய்த்த மனிதன் அவன்!

அவன்
கீர்த்தி பெரிது; கேள்விப் பட்டால் மும்
மூர்த்திகளும் கூடக் கைகட்டி முன்நிற்பார்....
என்றெல்லாம்,
ஏடெல்லாம் இசைக்கலாம்
நாடெல்லாம் பேசலாம்....

என்றாலும்
நால்வருண வேற்றுமையை நாட்டியவர் அவனைத்தான்
கீழ்வருண மென்றுரைத்தார்.
கேவலமாய் அன்றுரைத்தார்.
○

*எனக்குத் தெரிந்ததோர் குருக்கள்.... ஈசனுக்கும்*
*தனக்கும் சம்பந்தம் உண்டென்று*
*சாதிக்கப் பார்ப்பார்.*
*வேதம் உயர்ந்ததென்று விரித்துரைத்தே*
*பேதம் வளர்ப்பதற்குப் பெரிதும் வழி பார்ப்பார்.*

*மாலை உருட்டி மந்திரங்கள் முணுமணுத்து*
*மேலான சாதியென்று வேடமிடப் பார்ப்பார்.*
*சாதகம் பார்ப்பார் சகுனம் பார்ப்பார்*
*பாதகம் உண்டா என்று ராசிபலன் பார்ப்பார்*
*மதியை இழந்திருக்கும் மானுடக்கும்பலிலே*
*விதியை நுழைய விடப் பார்ப்பார்...*
*ஒரு மாதிரியாய் வண்டி ஓட்டப் பார்ப்பார்....*

*எனக்குத் தெரிந்ததோர் முன்னாள் இளவரசர்;*
*இன்றும்*
*தனக்குக் கீழ்தான் இந்தத்*
*தரணியே என நினைத்திடுவார்*
*அரசு கட்டில் இல்லை. ஆனாலும் பத்திரிகை*
*முரசு கொட்டி விளம்பரங்கள் முழக்கிடுவார்*
*மான்வேட்டையாடுவார்...*
*முடிந்தால் மனிதரையும்*
*தான் வேட்டை யாடத் தயங்காமல் முன்வருவார்..*

*எனக்குத் தெரிந்ததோர் வியாபாரி....*
*பட்டப் பகலில் பலருக்கும் முன்னாலே*
*நட்ட நடுத் தெருவில்*
*நாகரிகமாய் வணிகம்*
*என்னும் பெயரில் ஏமாற்றிப்*

பொன்னும் மணியும்
பொழுதெல்லாம் குவித்திடுவார்......

அரிசியிலே அளவாய்க்
கல்லைச் சேர்த்துவைத்து கலப்புமணம் செய்விப்பார்
இரும்புப் பெட்டிக்கு இடுப்புவலி வரவைத்து
கறுப்புப் பணத்தைக் கணக்கின்றிப் பெருக்கிடுவார்...

○
இவரெல்லாம்
உழைக்காமல் சுரண்டும் உன்மத்தர்.....
இவரெல்லாம்
மேல் வருணமாம்....
பாடுபடும் பாட்டாளி - விவசாயி
கீழ் வருணமாம்....
கேட்டால் மனம் கொதிக்கும்.

○
உண்மையில் அவன்தான்
காடுகொன்று நாடாக்கும் காவலன்
ஆனால் அவன் வாழ்வில் - முட்
காடு வளர்கிறது. குருதி கசிகிறது.

மற்றவர்க்கு
மணிகளை அள்ளித் தருகின்ற
அவன் வாழ்க்கை
பதராய் உதிர்கிறது; பாழாய்த் தெரிகிறது.

இனிக்கும் கரும்பை கொடுக்கின்றான்,
அவன் வாழ்க்கை வேம்பாய்க் கசக்கிறது....
வேதனையில் துடிக்கிறது.

வாழை இலையில்
வரிசையாய்ப் பரிமாறுகின்றான்
அவன் வாழ்க்கை
வெற்றிலை போல்
மென்று விழுங்கப் படுகிறது.

அட்சயபாத்திரமாய்
அகிலத்துக்குதவுகின்றான்
அவன் வாழ்க்கை
எச்சில் இலை போல்
எடுத்தெறியப்படுகிறது.

○
மேழி பிடிக்கும் கை
மேலான கை என்றுரைத்து
மெல்ல அவன்
மென்னியைப் பிடிக்கவே
கைகளை நீட்டும்
காருண்யர் இங்கதிகம்;
அவனிடம் தான்
ஆட்சிச் செங்கோல்
வரவேண்டும் என்று
அண்ணல் காந்தி சொன்னதாய்
ஆர்பரிப்பார்....
அவன் வீட்டுக்கு
வைக்கோலும்
வரவிடாமல் தடுக்கும்
வள்ளல்கள் இங்கதிகம்

அவன் உலகத்துக்கு ஆணி என்றோர்
பாட்டை ஒப்பித்து

ஏசு பிரானைச் சிலுவையில்
அறைந்ததைப் போல்
அந்த
இளைத்த பிரானை
இதயத்தில் அறைய
ஆணி தேடும்
அருளாளர் இங்கதிகம்

○

ஆனை இருந்தாலும் இறந்தாலும்
ஆயிரம் பொன்
விவசாயி இருந்தால்
முதலாளிக்கோ - வியாபாரிக்கோ
பல்லாயிரம் பொன்...
இறந்தால்
அவன் மனைவி மக்கள் வாயில் மண்.

○

மனைவிக்கு
மாற்றி உடுத்த ஒரு சேலை
பள்ளிக்குப் போகும்
பச்சை மயிலுக்கு
ஒரு புதுப் பாவாடை
தலையில் கொஞ்சம் பூவாடை
சின்னப் பிள்ளைக்கு
வண்ணச் சொக்காய்
தனக்கொரு நாலுமுழ வேட்டி
இப்படி
எதற்கும்
தை பிறக்கட்டும் என்று

பல்லவி பாடுவான்
பரிதாபப் படுவான்

○

தை பிறக்கத்தான் செய்கிறது...
ஆனாலும் அவனிடம் நிற்காமல் அது
பறக்கத்தான் செய்கிறது

இந்தத் தை.....
வாடிப் பட்டியில் நிற்காத
வைகை எக்ஸ்பிரசா என்ன?
பாவம் அவனிடம் நிற்காமல்
பறக்கத்தான் செய்கிறது!

எத்தனையோ தை பிறக்கத்தான் செய்கிறது
அவன் முகத்தில்
புன்னகைப் பொங்கல்
பொங்கவில்லையே!

அவன் இல்லத்தில்
அரிசிப் பொங்கல் இல்லையே!
அரிசியின் தரிசனத்துக்காக
இந்த நந்தன்
இன்னும் எத்தனை தைதான் காத்திருப்பதோ?

இன்னும் எவ்வளவு காலம்தான்
தைமகளின் சுயம் வரத்தில்
பசப்பல் வேடம் போடும்
நிலப்பிரபுத்துவக் கலிபுருடன்
மாலை சூட்டி மதிக்கப் பெறுவதோ?

ஏரோட்டும்
ஏழை நளன்
ஏமாற்றப்படுவதோ? சபிக்கப்படுவதோ?

○

இனிமேல் இல்லை கவலை
இதோ புரட்சிச் சட்டங்கள் என்கிறார்கள்...

ஏழை உழவனே!
உனக்காகத் தான்
எத்தனை சட்டங்கள்.....
குறைந்த பட்சக் கூலிச் சட்டத்தை
கோரினாய்
உள்ள வேலையும் இல்லை
உயிருக்கே மோசம் என்கிறான்
பண்ணை முதலை.

குடியிருப்பு மனைச் சட்டத்தை
கொண்டு வா என்றாய்
குடியிருக்கும் குடிசையை விட்டு
எழுந்திரு என்கிறான் கோமான்!

தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை
வேண்டினாய்
சேரியையே
நெருப்பின் நீண்ட கரம்
தீண்டும் என்கிறான் செல்வச் சீமான்!

சட்டங்கள் எல்லாம்
உனக்காக வா?
நிலப்பிரபுத்துவத்தை-
நீசச் சித்திரத்தைப்

பாதுகாக்கப் போடப்படும்
சட்டங்கள்!

○

நிலம் ஒரு பெண் என்றால் -அவள்
நலம் நுகர்வோன் எவனோ
அவனே அவள் கணவன்.

நிலத்தைப் புணர்ந்து மனத்தைப்
பூரிப்பில் நிறுத்தும்
உழவனே கணவன்.
அந்த உரிமை உடையவனை
கிழவன் என்றே நம்
இலக்கியங்கள் சித்திரிக்கும்.....
இப்போதோ. கையாலாகாத
புதுமைக் கிழவர்கள்
புறப்பட்டு விட்டார்கள்;
கொண்டாடும் நிலமகளை
இன்னொருவனிடம் கொடுத்துப்
பெண்டாட விடுகின்றார்.
ஆண்மையற்ற அந்த அலிகளை விலக்கியே
மேன்மைமிக்க உழவனை நிலமங்கை
மறுமணம் புரிகின்ற
புதுயுகத்தை நாம் படைப்போம்.

தவத்திரு அடிகளார் நடத்திய
பாரி விழாவில் கலைஞர்
தலைமையில் பாடியது.

# வாள்நாள்

கிழித்தெறிந்த நாள் அல்ல -
தாள் நாள் அல்ல;
ஆதிக்கத்தின் மார்பைக்
கிழித்தெறிந்த நாள் இது -
வாள் நாள் இது;

பள்ளுப் பாடும்
கீர்த்திமிக்க நாள் இது -
வாழ்நாள் இது.

முன்னூறு வருடமாய்
முற்றுகை யிட்ட
அந்நிய இருட்டின்
அரக்கக் கூத்து
முடிந்தது என்று
முழங்கி நின்றது
எந்த நாளோ
அந்த நாள் இது.

செத்த பிணமாய்ச்
சீவனில் லாமல்

மொத்தமாயத் தேசத்தை
முற்றுகையிட்ட
மூட மூட
நிர்மூட உறக்கத்தை
ஓட ஓட
விரட்டி யடித்து
விழிக்க வைத்தது -
வையம்
வியக்க வைத்தது -
எந்த நாளோ
அந்த நாள் இது.

பரிதவித் திருந்த
பாரத அன்னை
காளியாய்ச் சீறிக்
கைவிலங் கொடித்து
பகையைத் துடைத்து
சத்திய நெஞ்சின்
சபதம் முடித்து
கூந்தல் முடித்துக்
குங்குமப் பொட்டு வைத்து
ஆனந்த தரிசனம்
அளித்து நின்றது
எந்த நாளோ
அந்த நாள்இது.

சதி வழக்கினிலே
சம்பந்தப் பட்டுத்
தூக்குக் கயிற்றில்
தொங்கப் போகும்

கடைசிக் கணத்திலும்
கண்முன் நிறுத்திப்
பகத்சிங் பார்த்துப்
பரவசப் பட்ட
அற்புத விடியலை
அழைத்து வந்தது
எந்த நாளோ
அந்த நாள் இது.

முற்றிப் படர்ந்த
முட்காட்டை எரித்து
விளைந்த மூங்கிலை
வீரமாய்த் துளைத்து
மூச்சுக் காற்றை
மோகித்து நுழைத்து
புரட்சிப்
புல்லாங் குழலில்
பூபாளம் இசைத்தது
எந்த நாளோ
அந்த நாள் இது.

இதந்தரும் இந்தச்
சுதந்திர நாளைச்
சொந்தம் கொண்டாடத்
தந்த பூமியைத்
தமிழால் வணங்குவோம்.

*மதுரை வானொலியில்*
*வாசித்த சுதந்திரதினத்*
*தலைமைக் கவிதையின் ஒரு பகுதி.*

## நல்ல காலம்

*சாயுங் காலம் ......*
*மேற்கில் பரிதி மூத்துச்*
*சாகுங்கா லம்....*
*தென்றல் பூம ணத்தை*
*மேயுங்கா லம்;*
*இளைஞன் நெஞ்சில் மோகம்*
*மீறுங்கா லம்;*
*உழைக்கும் கைகள் கொஞ்சம்*
*ஓயுங் கா லம்;*
*பறவை கூட்டை நோக்கி*
*ஓடுங்கா லம்;*
*காதல் இருவர் தோள்மேல்*
*சாயுங்கா லம்;*
*இதழ்கள் நாடும் இன்பச்*
*சல்லாபக் காலம்!*
*நல் லாபக் காலம்!*

# ஒரு சுய சரிதைக் கவிதை

அன்றொரு நேற்று
'அருணாசலம் பேரன்
லட்சுமி மவன்'

அடுத்தொரு நேற்று
'சுசி புருஷன்...'

நேற்றொரு நேற்று
'சுடர் அப்பா...
கதிர் அப்பா...
கண்மணி அப்பா...'

இன்று
'காவியா தாத்தா
ஓவியா தாத்தா
அபூர்வா தாத்தா....'

○

எனக்கொரு பெயர் இருப்பது
எப்படித் தெரியாமல் போனது
என் தெருக்காரர்களுக்கு....

'குமுதம்'

## காலில் ஆணி குத்தியது...கலங்கினேனா?

நான்
நடந்து செல்லத் துணிந்தேன் - ஒரு
நான்கு சுவரையும் பதினான்கு சந்தையும்
கடந்து செல்லத் துணிந்தேன் - ஓ....
காலில் செருப்புத் கடித்தது - என்
கவின்பய ணத்தைத் தடுத்தது - நான்
கைவிட்டேனா, மெய்சோர்ந்தேனா?
கழற்றி எறிந்தேன்;
உதறி எழுந்தேன்

தொடர்ந்தேன் நான்
நடந்தேன் நான்...
புனிதப் பட்டாளம்
நோக்கியே

○

நான்
நடந்து செல்லக் களித்தேன் - சில

நடிப்புச் சுதேசியர் நாட்டிய மேடையைக்
கடந்து செல்லக் களித்தேன் - ஓ.....
காலில் கொடுமுள் பாய்ந்தது - தன்
கருத்தை முடித்தே ஓய்ந்தது -நான்
கதறினேனா? பதறினேனா?
கிள்ளி எறிந்தேன்; துள்ளி எழுந்தேன்

தொடர்ந்தேன் நான்
நடந்தேன் நான்......
தர்ம யுத்தம் நோக்கியே!

○

நான்
நடந்து செல்லச் சிலிர்த்தேன் - பொய்
நந்த வனத்தின் மலிந்தசிற் சுகங்களைக்
கடந்து செல்லச் சிலிர்த்தேன் - ஓ.....
காலில் ஆணி குத்தியது - எனைக்
கடுந்துன் பத்தால் வருத்தியது - நான்
கலங்கினேனா?மயங்கினேனா?
கிழித்தெ றிந்தேன்; கிளர்ந்தெ ழுந்தேன்

தொடர்ந்தேன் நான்
நடந்தேன் நான்.....
புதியசெங் கோட்டை நோக்கியே!

'ஜனசக்தி'

## கேளுங்கள் கேளுங்கள்.....!

பணக்காரன் மேல் அதிகம் வரிப்போடக்கூடாதாம்-அவன்
பையில் கண்போடும் ஒருவன் சொன்னான்- பல(ர்)
தலையில் ஙகபோடும் அசுரன் சொன்னான்!

மணக்காதாம் சமதர்மம்... புரட்சித்தேர் ஓடாதாம்-நல்ல
மஞ்சட் காமாலைக் காரன் சொன்னான்-சுரண்டும்
வஞ்சச் சீமான்கள் தாசன் சொன்னான்
கேளுங்கள் கேளுங்கள்.... வேடிக்கை-சில
கிறுக்கர்க்கிப் பதர்ப்பேச்சே வாடிக்கை!

சட்டங்க ளால்ஏழை நிமிர்ந்துநிற்க முடியாதாம் -நன்கு
சறுக்கி விழுந்துள்ள நொண்டி சொன்னான் -எலும்
புருக்கி எண்ணமுள்ள கோழை சொன்னான்

கட்டாயம் தானின்றி நற்பொழுது விடியாதாம்-இரு
கண்ணை மூடியுள்ள குருடன் சொன்னான்-விளக்
கெண்ணெய் குடித்துள்ள வதனன் சொன்னான்
கேளுங்கள் கேளுங்கள்.... வேடிக்கை-சில
கிறுக்கர்க்கிப் பதர்ப்பேச்சே வாடிக்கை!

## அன்னம்

நீ அசைந்து அசைந்து நட!
பூமியெங்கும்
வனப்பும் வசீகரமும்
அணிவகுக்கட்டும்.

நீ கம்பீரமாய்ப் பற!
வானமெங்கும்
தூய்மையும்
ஒளி வெள்ளமும்
பாயட்டும்; பரவட்டும்.

நீ தூது செல்
வெப்பத்தில் புழுங்கிக் கிடக்கும்
இதயங்கள்
பரவச கங்கையில்.மூழ்கி எழட்டும்
வறண்ட
ஆன்மாக்கள்
இளந்தென்றலில் மிதக்கட்டும்

உன் பவள அலகை நீட்டு
பொய்ம்மையிலிருந்து உண்மையைப்
பிரித்துக் காட்டு.
கரிக்கும் உப்பு நீரை ஒதுக்கி
இனிக்கும் அமிர்தப் பாலை
மானிட சாதிக்குப் புகட்டு.

நேற்று
முட்டைக்குள்
உயிர் ஒடுங்கியிருந்த நீ
இன்று உன்
செம்பட்டைச் சிறகை விரித்து
எங்கள் நயன விளிம்பில்
நர்த்தனம் செய்கிறாய்.
நாளை ஒரு தேவதை போல்
எங்கள் கனவுகளில்
நிறைந்து நிற்பாய்.

'அன்னம் விடுதூது'
தனிச்சுற்றுக்காகத்
தொடங்கப்பட்டமுதல்
இதழில் வந்த முகப்புக் கவிதை

## அரசகவிதை

ஓய்ந்ததோ -
உதிரம் சிந்திச் சிவந்த
(சிவ) கங்கைச் சீமையின்
களப் புகழ் பாடிய
ஒரு கலைக்குயில்.

சாய்ந்ததோ -
கீதை அழகுக்
கிளர்ச்சிகள் செய்து
கிறங்க வைத்த
ஒரு பிருந்தாவனம்.

உதிர்ந்ததோ -
இருண்ட திரையாய்
இருந்த வானை
உன்னத ஒளியில்
உயிர்த்திடச் செய்த
ஒரு துருவ நட்சத்திரம்.

*நின்றதோ-*

*செந்தமிழ் வீதியில்*
*சிந்தை அள்ளிச்*
*சிலிர்க்க வீசிய*
*சந்தனம் பூசிய*
*ஒரு மந்திரத் தென்றல்*

*முடிந்ததோ -*

*நாம்*
*சிரசில் வைத்துத் துதித்த*
*ஓர் அரச கவிதை!*

***கவிஞர் கண்ணதாசன் மறைந்தபோது***
***சிவகங்கைக் கலை இலக்கியப் பெருமன்றம்***
***சார்பில் அச்சிட்டு வழங்கிய கவிதை***
***21.10.81***

## புதிய ஏற்பாடு

கொட்டிக் கிடக்கும் மணலில்
குதித்து விளையாடும்
கொத்தனார் மகன் கூறினான்.....

'எங்க நைனா
கட்டியதாக்கும்
இந்த வீடு
எங்க வீடு....'

முதலாளி மைந்தன்
முறைத்தான்....

○

மறுநாள்....
வேறுகொத்தனார்
வேலைக்கு வந்தார்!

# நம்பிக்கை

சாய்ந்து கிடப்பார்
அப்பா திண்ணையில்....
ஓய்ந்து போய் ஒடுங்கி
உட்கார்ந்திருப்பாள்
அம்மா கொல்லையில்

நான்
கூடத்தின் முன்னால்
கூரையைப் பிய்த்துக்
கொடுக்கும்
சூரிய ஒளியைச்
சுகமாய்
மேய்ந்து கொண்டிருப்பேன் கண்ணால்,

## எங்கள் முதலாளி

இப்போது தானே நிற்கிறார்
இந்தக் கொதிக்கும் வெயிலில்

இப்போது தானே நிற்கிறார்
இந்தக் கொட்டும் மழையில்

இப்போது தானே
ஆலை வளாக வாசலில்
அசையாமல் நிற்கிறார் நிலையாய்.....
எங்கள் முதலாளி சிலையாய்!

'செம்மலர்'

## பூகோளப் படமெங்கும்.....

பொழுது விடியத்தான் போகிறது - ஒளி
விழுது படியத்தான் போகிறது.

புன்மைகள் புதைந்தெங்கும்
உவப்பேறப் போகிறது.
பூகோளப் படமெங்கும்
சிவப்பேறப் போகிறது.

உண்மைக்கும் உழைப்புக்கும்
மதிப்பேறப் போகிறது.
உன்மத்தர்க்(கு) இனிரத்தக்
கொதிப்பேறப் போகிறது
(பொழுது விடியத்தான்...)

எமதர்மர் அதிகாரக்
கொடி இறங்கப் போகிறது.
இல்லாமை புறவாசற்
படிஇறங்கப் போகிறது.

சமதர்ம வண்டிக்குக்
கை இறங்கப் போகிறது.
சமுதாயம் இன்பப் பொய்
கை இறங்கப் போகிறது.

(பொழுது விடியத்தான்...)

*1973*

## பிரியத்துக்குத் தடையாய் ஒரு பிளாட்பாரம் டிக்கெட்!

வண்டி புறப்படும் போது
கொஞ்ச தூரம்
கூடவே என்கால்கள் நடக்க....

சாளரத்தில் முகம் சாய்த்துக்
கம்பிகளின் இடையே நீ
கையசைக்க....

இருவர் இதயமும்
ஆரத் தழுவி
அன்போடு விடைபெறும்....

இப்படிப் பிரிய
இனிமேல் முடியுமா?
நண்பா... என் ஆருயிர் நண்பா...
என்னை மன்னித்துவிடு.

இனி....
வாசலில் வைத்துத் தான்
வழியனுப்ப முடியும்
என்ன செய்வது

இப்போது - நம்
பிரியத்துக்குத் தடையாய்
பிளாட்பாரம் டிக்கெட்
கட்டணத்தையும்
ஏற்றி விட்டார்களே
இரக்கமில்லாமல்...

'தீக்கதிர்'

# ஒரு ஐயப்ப பக்தனைப் போல்....

விடிந்ததும்
ஒரு ஐயப்ப பக்தனைப் போல்
அவசரமாய்க் குளிக்கிறேன்...

ஒரு நாடக நடிகனைப்போல்
கண்ணாடி முன் நிற்கிறேன்....

ஒரு கல்லூரி மாணவனைப்போல்
காத்திருக்கிறேன்.

○

விடிந்ததும் -
ஏன் நான் இப்படிப்
பரபரக்கிறேன்...?

புதிதாய்
வெளிநாட்டுக்குப் போகும்
ஒரு வியாபாரியைப் போல் -

முதல் தடவையாய்
நேர்முகத் தேர்வுக்குச் செல்லும்
ஒரு வேலையில்லாப்
பட்டதாரியைப் போல்-

எதிர்பாராத விதமாய்
மணமேடையில் அமரும்
ஒரு ஏழைப் பெண்ணைப் போல்-

ஏன் நான் இப்படி
விதிர் விதிர்க்கிறேன்...?

எல்லாம்... எல்லாம்...
ஒன்பதாகிறது...
ஒன்பது இருபது...
ஒன்பது முப்பது...
நாற்பது... ஐம்பது...

இதயம் படபடக்கிறது...
என் உயிரே, வா!

## புதுமைப் பெண்ணே புறப்பாடு!

சார்கால ருசியச்
சரித்திரம் மங்கையர்கள்
கார்கால மேகமெனக்
கண்ணீர் வடித்ததனைக்
காட்டிக் கொடுக்கும்;
கணக்கற்ற இளங்கிளிகள்
பூட்டி ஒளித்த
பொருள்போல் உணர்ச்சியற்ற
கற்போல் இருந்தார்;
கனதனவான் காலடியில்
விற்போல் வளைந்து
விழுந்து கிடந்தார்.....
அக்டோபர் புரட்சி
அலைக்கதிர்கள் வீசியபின்
எக்காளமிட் டெழுந்தார்.
ஏக்கம்தனை எறிந்தார்.
ஆணுக்குப் பெண், நிகரா?
'இல்லை' அடிமையெனும்

கோணல் கருத்துரைத்த
குரல் வளையில் கைவைத்தார்
சகல துறைகளிலும்
சமத்துவம் பெற்றின்று
அகிலம் வியக்கின்ற
அற்புதமாய் ஆனார்!

நாமோ
விடுதலை மேடையிலே
வெள்ளிவிழாக் கண்டும் பெண்
விடுதலையை அரங்கேற்றும்
வீரமின்னும் பெறவில்லை
பாரதத்தை முன்னேற்றப்
பாதையிலே மெதுவாகப்
பூ ரதத்தைப் போல் ஓட்டும்
பொறுப்பில் இருந்தவர் ஓர்
பெண் என்று எண்ணுகையில்
பேரின்பம் தோன்றிடலாம்

மண் என்றும் மரம் என்றும்
மங்கையரைப் புறக்கணித்த
காலம் கழிந்த தென்றும்
கருதலாம்; எனினுமிங்கே
கோலமிடல் இல்லத்தைக்
கூட்டல் துணிதுவைத்தல்
கையலுக்கும் வேலைகளைக்
கவனித்தல் என்றிது போல்
மையலுக்கும் சமையலுக்கும்
மட்டும் இருக்குமொரு

கூட்டம் குறைந்ததுவா
கூறுங்கள்! புதுமைத்தேன்
நாட்டம் மிகுந்துள்ள
நங்கையர்கள் எத்தனைபேர்?

○

தானிய உற்பத்தி பெருக்கும் வயல்களை
நன்செய் என்போம் புன்செய் என்போம்
பிள்ளை உற்பத்தியைப் பெருக்க இதோ ஒரு
'பெண்செய்' என்று பேசாமல் பேசும்
ஆண்கள் கொட்டத்தை அடக்கினோமா?

○

உரலுக்கு ஒருபக்கம்
மத்தளத்துக்கு இரண்டு பக்கம்
மங்கைக்கோ -
தந்தை கணவன் மைந்தன்
என்று
தாக்குதல் நடப்பது
மூன்று பக்கமும்....
மூவேந்தர்கள் ஒன்று கூடிப்
பொய்ம்முகங் காட்டிப்
பொன்மயமான
பறம்பை வென்றனர்.....
பாரியைக் கொன்றனர்..... அன்று

இன்றும் அதே கதை....
ஒவ்வொரு வீடும் பறம்பே.....
ஒவ்வொரு வீட்டுப் பாரியும்
அப்பாரியே....

முப்பெரும் உறவால் மூளும்
ஒவ்வொரு நாளும்
அவள் நெஞ்சில்
ஒப்பாரியே....

○
இரும்பைப் பொன்னாக்கும்
வித்தைக்குப் பெயர்
இரச வாதம்....

உறவைப் பகையாக்கும்
விந்தைக்குப் பெயர்
என்ன வாதம்?

தந்தை கணவன்
மைந்தன் என்ற
சிந்தைக் கினிய
சிறந்த உறவை
மங்கை யிடத்தில்
பகையாய் மாற்றும்
விந்தைக்குப் பெயர்
என்ன வாதம்?

○
சிலேட்டில் அ,ஆ எழுதும் சின்னவயது முதல்
சிலேட்டுமத்தால் ஆ ஆ.... என்று முனங்கிச்
சீவன் ஓயும் நாள் வரை
பந்தமாய் வாய்த்த பாவிகள் மூவர்க்கும்
செருப்பாய் உழைத்துத் தேய்கிறாள், மாய்கிறாள்.

○

ஒரே கல்லில் இரண்டு மாங்காய்....
ஆண் வர்க்கத்தின்
அரசியல் தந்திரமே
அலாதிதான்....

பகலில் இருக்கை
இரவில் படுக்கை
இப்படி ஒரு பொருள்
கடையில் கிடைக்கிறது
அதன் பெயர் 'சோபா கம் பெட்'
பகலில் வேலைக்காரி
இரவில் சிற்றின்ப லீலைக்காரி
இப்படி ஒருத்தி
வீட்டில் கிடக்கிறாள்
அவள் பெயர் 'மனைவி'

○

செத்த பிறகும் சில
'தியாகசீலர்கள்'
மனைவி
உடன்கட்டை ஏறவேண்டும்
என்று விரும்புவார்களாம்
வேடிக்கை அல்லவா?
இதுவரை அவனுடன்
கட்டையாய் வாழ்ந்து
காலம்
கழித்தது போதாதா?
தவிர்க்க வழியின்றித்
தவித்துக் கிடந்த

உடற்கட்டை
மறுபடி
'உடன்கட்டை' யாக்குவதா?

அண்மையில் ஜெய்ப்பூர் மண்ணில்
கணவனுடன் சேர்ந்து காரிகை ஒருத்தி
உடன்கட்டை ஏறினாள்
உற்றாரும் உறவினரும்
ஊராரும் வாழ்த்தினார்...

இந்த அதிசயத்தை அல்ல -
அநியாயத்தை
காவல் துறையும் கண்டுகொள்ளவில்லை....
உடனடியாய்த்
தடுக்கவில்லை.....
தவிர்க்கவில்லை...
சதி என்ற சண்டாளப் பழக்கத்தை
பெண்ணடிமைத் தனத்தின்
பெரிய கொடுமையினைச்
சிதைத்தொழிக்க
சென்ற நூற்றாண்டில்
சட்டம் கொண்டுவந்தார்
பெண்டிர்க்கு உதவிட ஒரு
பெண்டிங் பிரபு....
இந்த நூற்றாண்டில் - அந்தச்
சட்டத்தையும் சேர்த்து
உடன்கட்டை ஏற விட்டோம்
இந்த இலட்சணத்தில்
இருபத்தோராம் நூற்றாண்டை நோக்கிப்
போகப் போகிறோம்!

○

பூவையொருத்தி பொங்கு மிளமையில்
பூவையிழந்து பொட்டை யிழந்து
விதவை ஆனால் வெள்ளுடை பூண்டு
கதவைத் தாண்டா திருக்க வேண்டுமாம்

ஆனால்
பெண்டையிழந்த பெரிய மனிதன்
துண்டை உதறித் தோளில் போட்டு
சின்னப் பெண்ணைத்தேடி மணந்து
இன்னொரு முறையவன் இன்புறலாமாம்

சாண்பிள்ளை யெனினும் ஆண்பிள்ளை என்று
சாற்றித் தினமும் ஏ மாற்றி எளிதாய்
கோவலன் சீவகன் ஆகக் கூடுமாம்
காரிகை மட்டும் கண்ணகி யாகவே
இருக்க வேண்டுமாம். எத்தனை கொடுமை!

உரிமை என்பது ஒருவழிப் பாதையா
கட்டுப்பாடும் கற்பும் உங்கட்குத்
தட்டுப் பாடு தானா? என்றே
ஆடவர் முகத்தில் அறைந்தாற் போலக்
கேட்டுத் துணிவாய்க் கிளர்ச்சி செய்யும்
மங்கையர் இயக்கம் மலர வேண்டும்

○

மோனை நயம்பட முட்டாள் தனமாய்ப்
பானை பிடித்தவள் பாக்கிய சாலியென்று
ஏனைத் துறைகள் எல்லாம் ஆடவர்
எடுத்துப் புசித்தே ஏப்பம் விடுவதைத்
தடுத்து நிறுத்தும் தைரியம் வேண்டும்

○

ஆளப் பிறந்தவன் ஆண்தான் அவனை
அண்டி அடங்கி ஒண்டி ஒடுங்கி
வாழப் பிறந்தவள் வனிதை என்னும்
கீழோர் நெஞ்சைக் கீற வேண்டும்;

○

புல்லென் றாலும் புருஷன் தானே
கல்லென் றாலும் கணவன் தானே
சொல் லென்றவனும் கேட்டால் சுடச்சுட
நில்லென் றவனை நிறுத்தி வாங்கிக்
'கொள்' என் றெடுத்துக் கொடுக்க வேண்டும்

○

அண்ணா ஒருமுறை அழகாய்ச் சொன்னார்;
எட்டு வயதில் அடியே எவனைக்
கட்டுவாய் என்று கேட்பார்; அதைப் பதி
னெட்டு வயதில் கேளார்; எனினும்
மொட்டுப் பருவம் வந்ததும் எதற்கும்
கட்டுப் படாமல் கவர்ந்த வனைக்கை
விட்டு விடாமல் விருப்ப முரைத்துத்
தொட்டு மணக்கும் துணிவு வேண்டும்

○

தேனை அளக்கும் இதழ்கள் போதுமா?
தேசம் அளக்கும் தெளிந்த அறிவுடன்
வானை அளக்கும் வல்லமை வேண்டும்
வாலெண் டீனா ஆக வேண்டும்
வாலெண் டீனா ஆகவேண்டும்,

தொழிலா ளர்தம் தூய் நலம் பேண
எழில் மலர்ச் சிறார்களை இனிதாய் வளர்க்க
மங்கையர் அரசியல் மகத்துவம் காணச்
சங்கம் அமைத்துச் சாதனை புரிந்த
தோழர் லெனினின் வாழ்க்கைத் துணைவி
க்ரூப்ஸக் காயா ஆக வேண்டும்
க்ரூப்ஸக் காயா ஆக வேண்டும்.

ஈர மனமிலா ஏகாதி பத்தியம்
வீர வியத் நாம் வீதியில் நடத்திய
கோர மான குண்டுவிளை யாட்டைக்
கண்டு வெகுண்டு கண்டனம் செய்தே
ஆர்ப்பாட்டப்போர் அணியை வகுத்த
அருணா ஆசப் ஆக வேண்டும்
அருணா ஆசப் ஆக வேண்டும்

தொடுக்கப் பட்ட துயர்க்கணை தாங்கி
ஒடுக்கப் பட்டவர் உரிமைக் காக
நிறவெறி பிடித்த நீசரை எதிர்த்தே
அறநெறி நின்று சங்கம் முழக்கிய
அஞ்சலா டேவிஸ் ஆக வேண்டும்
அஞ்சலா டேவிஸ் ஆக வேண்டும்.

பெண்ணே! புதுயுகப் பெண்ணே!
அஞ்சலா டேவிஸ் அருணா ஆசப்
க்ரூப்ஸக் காயா வாலெண்டீனா
இந்திரா சரோஜினி இவர்களை எல்லாம்
நெஞ்சில் பச்சை குத்தி நிறுத்து!

○

பெண்ணே!
நீ ஓர் சிரிக்கும் ரோஜா.....
உன்னைக் கசக்க
ஒருகை முனைந்தால்
முள்ளை நீட்டு....
மூர்க்கம் காட்டு...

பெண்ணே....!
நீ ஓர் புண்ணிய ஆறு
உன்னைச் சுயநல
அணைகள் தடுத்தால்
பொங்கு..... புறப்படு.....
பொடிப் பொடியாக்கு....

○

ஆண்டாள் தான் நம்
ஆண்டவன் தன்னையே
ஆண்டாள் என்றே
அழகாய்ப் பேசி
மடக்கப் பார்ப்பார்
அடக்கப் பார்ப்பார்
கடக்கப் பார் அக்
கதையை எல்லாம்

மார்கழி மாதம்
வைகறைப் போதில்
நீராடப் போதுவீர்
நேரிழையீர் எனக்
கூப்பிடுவார்.....

நான்
கூப்பிடுகின்றேன்...

போராட வா வா
புலி போலச் சீறிப்
போராட வா வா
புது யுகப் பெண்ணே!
போராட வா! வா!...

ஆனந்த விகடன் பொன்விழா
நெல்லையில் நி
இஸ்கஸ் விழாவிலும் வாசி

## பூ.... இவ்வளவுதானா?

பூ அழகுதான்
உன் கூந்தலில்
இருக்கும் போது!

எல்லாம்
இருக்கிற இடத்தைப்
பொறுத்துத்தான் மதிப்பு;
அந்த உண்மை
இந்த அஃறிணைக்கு
எப்படித் தெரிந்தது?

சிரிக்கிறது பார்,
உன் தலைச் சிம்மாசனத்தில்
உட்கார்ந்திருக்கும்
திமிரில்!

○

நந்தவனத்தில் இருந்தது
கருவறைச் சிலையாய்
உன் கேசம் அமர்ந்ததும்

என்னமாய் ஒளியடிக்கிறது
தேரில் வலம் வரும்
உற்சவமூர்த்தியாய்!

○

மெதுவாய் என்ன செய்கிறது....
சங்கப் பாண்டியனின் சந்தேகத்தைப்
பரிசீலித்துப் பார்க்கிறதா?

உன் முகத்தைவிடவா அது மஞ்சள்
உன் கண்களைவிடவா அது நீலம்
உன் பற்களைவிடவா அது வெள்ளை
உன் இதழ்களைவிடவா அது சிவப்பு

பிறகு எதற்கு?
எடுத்தெறியேன்!

○

'ஏன் ஒரு மாதிரியாய்'
என்கிறாய்
ஒன்றும் தெரியாதவள் போல்

சின்னக் கோபத்துடன்
சிணுங்கலுடன்
ஏறெடுத்துப் பார்க்கிறேன்
உன் தலையை.....

பூ இவ்வளவுதானா என்று
புன்னகை செய்கிறாய்

கோதிவிடக்
கையைக்
கூந்தலுக்கருகில் கொண்டுவருகிறேன்
தாயின் முந்தானையை பிடித்துக்
கொள்ளும்
குழந்தையைப் போல்
முறைக்கிறது அது?

பூ அழகுதான்
உன் கூந்தலில் இருக்கும் போது;

உன் கூந்தல் அழகுதான்
பூ இல்லாத போதும்
எப்போதும்.

'குமுதம் ஸ்பெஷல்'
*ஏப்ரல் 96*

## அந்தரங்கம்

எனக்கோ வயது....

பதினாறாண்டுகள்
பறந்து விட்டன....

அந்த முதல் இரவில்
காதல் போதையில்
கதைத்த தெல்லாம்
கேட்டுக் கிடந்தது
காதில்லாமல்!
கிசு கிசுக்காமல் இருந்தது
வாயில்லாமல்!

மாமனார் தந்த
மாபெரும் சீதனம்....

விரித்து வைத்தபோது
அது
தங்கத் தாம்பாளம்...

அவள் அதில்
வெடித்த மாதுளம் பழம்....
பார்த்துச் சுவைத்தேன்
படுத்துத் துய்த்தேன்
அந்த முதல் இரவில் -
அடுத்தடுத்து வந்த
பற்பல இரவில்!

எனக்கு வயதோ நாற்பது இப்போது.....
மேலிருக்கும்
வெல்வெட்டுத் துணியோ -
வெண்பட்டுத் துணியோ நைந்தும்
உள்ளிருக்கும்
வெள்ளை ஆதிக்கம்
வெளியேறிப் போய்த் தொய்ந்தும்
அழகு குலைந்தும்
மெருகு குறைந்தும் தேய்ந்தும்
கிடந்தது அது....

பேசாமல்
ஒரு பெருமூச்சோடு
சுற்றி வைத்தேன்
கட்டி வைத்தேன்!
நிமிர்ந்தேன்.

அவள் பாயை விரித்துப்
படுத்தவாறு
கண்ணால் புன்னகைத்தாள்.

நானும்
அர்த்தத்தோடு
அவளையே பார்த்தேன்....

'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின்
வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல...'

'வானம் ட
உலகத்தமிழ்நா
சிறப்பிதழ் ஜனவரி

## தூர தரிசனம்

*பாரதி!*
*உன் பெயரில்*
*உயிர் இயக்கும்*
*ஒரு சக்தி இருக்கிறது.*
*சத்தியம் இருக்கிறது - வீர*
*சபதம் இருக்கிறது.*

*உன் பெயரில்*
*சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம்*
*நாதமாய் - கீதமாய்*
*நரம்பெல்லாம் முறுக்கேற*
*ஒலிக்கிறது.*

○

*நீ*
*ஒலி பெருக்கிச் சத்தங்களுக்கிடையில்*
*ஒரு உன்னத மௌனம்*

மத்தாப்பு வெளிச்சத்துக் கிடையில்
ஒரு துருவ நட்சத்திரம்;
சாராய வாடைக்கிடையில்
ஒரு சந்தன நறுமணம்;
புன்மைப் பொய்களுக்கிடையில்
ஒரு புனித உண்மை;
சுரண்டிய வெள்ளை
இருட்டுக்கிடையில்
ஒரு சுதந்திர தீபம்,
தியாக தீபம்.

○

சிலருடைய எழுத்து
தினமும் கிழிபடும் 'காலண்டர்'
இன்னும்
சிலருடைய எழுத்து
வருடக் கடைசியில்
பழசாகிப் போகும் பஞ்சாங்கம்;
உன் எழுத்து
இனிவரும் யுகத்தையும் காட்டும்
தூர தரிசனம்.

○

மஞ்சத்தில் கசங்கும்
மல்லிகைப் பூ அல்ல;
நெஞ்சத்தைக் கிள்ளிக்
கிறங்க வைக்கும்
ரோஜாப் பூ அல்ல;
கரிசல் காட்டுக்
கர்ம வீரனே,
மானத்தை மறைக்கும்-
ஆடை அளிக்கும்

பருத்திப் பூ
உன் மணிக்கவிதை!

○

நீ ஒரு பித்தன்....
ஆனாலும்
சட்டையைக் கிழித்ததில்லை....
காரணம்
உன் சட்டையிலே
ஏற்கெனவே
ஏராளாமான கிழிசல்கள்...

பேனாமுள் ஊசியினால்
எங்கும்
நீக்கமற நிறைந்திருந்த
சமூகக் கிழிசல்களைத்
தைக்கவந்த பித்தன் நீ!
புதுமைப் பித்தன் நீ!

○

நீ ஒரு காதலன்....
தேவருலகுக்குத்
தேவைப்பட்ட பாவையர்
ரம்பை ஊர்வசி
திலோத்தமை
என்றிவர் யாரும்
உன் கனவில் வரவில்லை....
கள்மயக்கம் தரவில்லை
கொடி தூக்கிய குமரர்களும்
குண்டடிபட்ட மறவர்களும்
வெள்ளை ஆதிக்க

வேரறுக்கத் துடித்து நின்ற
மேலோரும் நூலோரும்
உன் கனவில் வந்தார்கள்
காதல் தந்தார்கள்...
ஆம்....
நீ வீரத்தை மோகித்த
விநோதக் காதலன்.

○

நீ ஒரு பக்தன்....
தலையில் மொட்டை
கழுத்தில் கொட்டை
நுதலில் பட்டை
இப்படிப்
பண்டார வேஷம் பூண்ட
பக்தனல்லன்....

கையில் கோல்
கண்ணில் கோபம்
நெஞ்சில் ஆவேசம் கொண்டு
பராசக்தியைப்
பாரத சக்தியாக்கி
ஆறுகால பூசையல்ல.....
அனுதினமும் அனுப்பொழுதும்
ஆராதனை செய்த
அதிசய பக்தன் நீ!

○

பாரதி!
உன் சொற்களுக்கு

உள்ள சக்தி
அடடா.... மந்திர சக்தி!

எங்கள் சொற்களுக்கும்
உண்டு சக்தி....
ஆனால்.....
அது தந்திர சக்தி!

'சாதிகள் இல்லையடி பாப்பா' என்றாய்.
நாங்களும் -
'எங்கள் சாதிக்கு இணையாய்
வேறு சாதிகள் இல்லையடி' என்கிறோம்
சங்கம் அமைக்கிறோம்
சந்தா சேர்க்கிறோம்
தலைவர் செயலர் பொருளர் என்று
பதவிகள் பெறுகிறோம்
பரிசுகள் பெறுகிறோம்
தேர்தல் வந்தால் -
தெருத் தெருவாகச்
சாதிக்கடைகளை விரிக்கிறோம்!
சாக்கடை வணிகம் செய்கிறோம்,
பேருக்கு
உன் - பிறந்த நாளிலும்
உன்னைப் போன்ற
உத்தமர் சிலர் உதித்த நாளிலும்
சாதிகள் ஒழிக என்று
சங்கம் முழங்குகிறோம்

பாரதி!
நீ -

மனிதன்!
நாங்கள் எல்லாம்
வேடிக்கை மனிதர்கள்!
பாரதி!
நீ -
வீரன்-
நாங்கள் எல்லாம்
வாய்ச்சொல் வீரர்கள்-

○

காலையிலே -
கடற்கரையில்
கண்ணகியின் சிலையைக்
கைகூப்பிப் கும்பிட்டுக்
கற்புக் கவிதைகள் கொட்டுகிறோம்!
அந்தி மாலையிலே -
கோடம்பாக்கத்தில்
குடியிருக்கும்
ஏதோ ஒரு
மாதவியின் வீட்டுக் கதவைத் தட்டுகிறோம்!

ஆனாலும்
''பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோம்''
என்று -
மேடையிலே வேஷம் போடுகிறோம்!
சரிநிகர் சமானமாக வாழ்வோம் என்று
வாய்கிழியக் கோஷம் போடுகிறோம்!

பாரதி!
நீயோ-

ராஜா ரவி வர்மாவின்
கோலச்சித்திரம்!
நாங்களோ -
மதன் வரையும் - வெறும்
கேலிச் சித்திரம்!

o

பாரதி!
விடுதலை பெற்று
வெள்ளி விழாக் கண்ட பின்னும்
உன் கனவுகள் இன்னும்
அறுவடை ஆகவில்லை

நீ
விதை விதைத்தாய்....
நாங்கள்
'நீர் பாய்ச்சுவோம்'
உரம் போடுவோம்
என்று நம்பினாய்....
நாங்களோ
விதைகளையே
எடுத்துத் தின்னும்
சுயநலக்காரர்கள்!
விதைத்தவனே,
நீ வரவேண்டும்
கைநிறையக்
கதிர்மணிகள் தரவேண்டும்,

நூற்றாண்டு விழாக் காணும் வேளையிலே
'இன்று புதிதாய்ப் பிறந்தோம்'

என்று நீ
இப்போதே வரவேண்டும்

கவிஞர்கள் இங்கே பஞ்சம்
என்றுன்னை அழைக்கவில்லை.
எங்கள் விருப்பமெல்லாம்
பாரதி என்றொரு மானிடன் - மாவீரன்
இங்கே வரவேண்டும்,
இப்போதே வரவேண்டும்!

'பாரதியம்' தொகுப்பு நூலில்
இடம் பெற்ற கவிதை
ஆண்டு 1983

## ஆறு

இயற்கைப் பெண் எழுதும் இனிய தொடர்கதை
மயங்கிக் கடலுக்கு மலையனுப்பும் ஒரு தூது
இந்திரனார் மண்ணுலகில் இயற்றியதண் ணீர்ப்பாதை
சந்திரனார் சூரியனார் முகம்பார்க்கும் கண்ணாடி.
வான நெசவாளி நெய்தெறிந்த புதுச் சேலை
மீன்கள் துள்ளி விளையாடும் மைதானம்!
திரைக் கூத்து நடக்கின்ற சிங்காரப் பொன்மேடை
நுரை எழுத்தால் நிலையாமைக்
கருத்துரைக்கும் நூதனநூல்!
தேனாய்ச், செவியை இனிக்க வைக்கும்
தெள்ளமுதாய்த்
தானாய் இசைக்கின்ற தந்திரப் புதுவீணை
குடிக்காமல் தள்ளாடும் குமரிப் பெண்; எடுத்து
மடிக்காமல் கிடக்கின்ற மாபெரிய காகிதம்
நிலத்தை வளைக்கவரும் நீண்ட மலைப்பாம்பு
பலத்தை வெளிப்படுத்தப் பாய்ந்துவரும் பட்டாளம்.

## காமதேனு போல....
## கற்பகத் தரு போல....

'உங்களுடன் பள்ளியிலே
ஒன்றாய்ப் படித்த
தங்கராசு மனைவி தனம்போல்
மதிப்பாய்
மாருதியில் போக ஆசை
மாதத் தவணையில்
வாங்கினால் என்னவென்று
வாய் ஓயாமல்நான் சொன்னாலும்
வந்தவாசி சாலைக்குக்
கிழக்கே கிடக்கும் புஞ்சையினை
வீட்டுமனை போட்டு விற்றதும் உன்
'நேயர் விருப்பம்' நிறைவேறும் என்று
போகாத ஊருக்கு வழிகாட்டிப்
புறப்பட்டு விடுகிறீர்கள்;
பூ வாங்கி வரட்டுமா என்று
பொல்லாத சாகசம் புரிகிறீர்கள்....

அழுக்கேறிப் போன
அஞ்சுபவுன் சங்கிலியை
அழித்துச் சேர்த்து
அடுத்த வீட்டுக் கனகாபோல்
இரட்டை வடத்தில்
எடுப்பாய்ச் செய்யலாம் என்றால்
முரண்டு பிடித்த முரளி மனோகர்
இறங்கி வந்திருக்கிறார் இரு....
கொஞ்சம் பொறு
யு.ஜி.சி.பாக்கி வந்துவிடும்
அப்புறம் பார் என்கிறீர்கள்...
ஆளை மயக்கும்படி
அழகாய்ச் சிரிக்கிறீர்கள்.

காலுக்கொரு வெள்ளிக்
கொலுசென்று கேட்டாலும்
கஜகரணம் போட்டாலும்
சித்திரை வரட்டும் என்று
தட்டிக் கழிக்கிறீர்கள்....
செல்லமாய்க் கன்னத்தைத்
தட்டிக் கொடுக்கிறீர்கள்...
இப்படியே வாழ்க்கை
முடிந்துவிடும் இல்லையா?' என்று
புத்தகத்தில் எழுதாத புகார்களை
வாசித்தாள் சலிப்பாய்
என் வண்ண மயில்.. சமாளிக்கும்
வித்தகத்தில் தேர்ந்தநான் விடுவேனா....?

'காலம் கனிந்ததடி
கவலை ஒழிந்ததடி

ஒரு டசன் கார்
ஒரு கிலோ சொக்கத் தங்கம்
இருபது கிலோ வெள்ளி
தேவலோகத்துக்
காமதேனு போல
கற்பகத்தரு போல
கேட்ட தெல்லாம் கொடுக்க -
துன்பம் தணிக்க நம்
இன்பத்தமிழ் ஏடுகள் எல்லாம்
வாசலில் வந்து நிற்கின்றன
வரிசையாய்....
வா... கண்ணே! வரும்போது
அஞ்சறைப் பெட்டியில்
அன்றாடம் போட்டுவைத்தது
அத்தனையையும் எடுத்துவா
மொத்தமாய்... முன்பதிவு செய்ய' என்றேன்.

அவ்வளவுதான்...
ஆளை விடுங்கள் என்று
அலறி ஓடினாள்.....
அடுப்படிக் கதவை மூடினாள்...

தமிழ் இதழ்கள் தீபாவளி மலர்
விற்பனைக்கு விதவிதமான பரிசுகள்
வழங்கப்படும் என்று விளம்பரம்
செய்ததை படித்துவிட்டு எழுதியது.
'தினமணி'யில் வெளிவந்தது.

## எல்லைக்காக.....

'ஆத்தாடி' என்றிதழ்கள் அசைய,
அசையாமல் கண்ணிரண்டை
வைத்திருக்கும் கும்பல்...கழைக்
கூத்தாடி ஆடுகிறான்... ஆடுகிறான்
கயிற்றின்மேல் - அவன்
குடும்பம் முழுதும்
ஒரு குறிக்கோள் இல்லாத கூட்டணியாய்க்
கவலையுடன் கைவைத்திருக்கும்
ஒட்டிய வயிற்றின் மேல்!

வயிற்றின் எல்லை ஒரே ஒரு சாண்..... அதில்
வளரும் பசியின் எல்லையோ
விரிந்து பரந்து வியாபித்திருக்கும் நெடுவான்!
ஆரியக் கூத்தோ, திராவிடக் கூத்தோ
கழைக் கூத்தோ, ஆடைஅவிழ்க்கும் களைக் கூத்தோ
எல்லாம் காரியத்துக்காக.....
ஒரு கவளச் சோற்றுக்காக!
எல்லாம் சோற்றுக்காக..... என்றாலும்

இந்த நாட்டுக்காக -
இந்தியனாய்ப் பிறந்த பேற்றுக்காக என்று
சுகங்களைத் துறந்து
சொந்த பந்தங்களை மறந்து
எந்த வினாடியும் இன்னல் தலையில்
இடியாய் விழும் என்பதும் தெரிந்து
இதோ.... ஏறுகிறான்.... முன்னேறுகிறான்
கயிற்றுப் பாலத்தில்....
எதிரிகளைப் பந்தாட.... போர்க்கோலத்தில்....

o

அந்தரத்தில் தொங்கும்
சின்னச் சிலந்தியும்
தன்னுடலின் கசிவையே இழையாக்கி - நூலாக்கி
வலைபின்னுமாமே... அந்த வகையினிலே
பயிற்சியினால் - நாளெல்லாம் செய்த முயற்சியினால்
கட்டி முடித்த கயிற்றேணியில் ஏறி
ஆற்றை மடுவை, அகன்ற ஓடையை
அற்புதமாய்க் கடக்கிறான்.
குன்றுகளுக்கிடையில்
ஒரு குட்டிச் சிங்கமாய் நடக்கிறான்...
இவனைப் போல் இன்னும் எத்தனை தீரர்கள்....
இந்த தேசத்தின் எல்லைக்காக.... எல்லைகாக்க!
இமயம் போல் நிமிர்ந்துநிற்கும் வீராதி வீரர்கள்!

o

பர்ண சாலையில் பத்திரமாய் - பவித்திரமாய்
சீதையும் தசரதன் செல்வனும் இணைந்திருக்க
சிந்தை கலங்காமல் துயின்றிருக்கக் கண்விழித்துக்

கங்குல் முழுதும் காத்திருந்தான் ஒருவன்....
அண்ணன் மீதுள்ள பாசத்தால்

பக்தியின் எல்லைக்கே போய்ப் பார்த்திருந்தான்...
எல்லைக்கே சென்று தொல்லைக்கே வாழ்வென்று
அர்ப்பணிக்கும் வீர மறவர்கள்
தேசபக்தியின் எல்லைக்கே சென்ற இலக்குவர்கள்!

○

எதிரிகளின் வேட்டுகளுக்கு இம்மியும் அஞ்சாமல்
காலில் 'பூட்ஸ்'
இடுப்பில் கனமான 'பெல்ட்'
முதுகில் தளவாடப் பை - உடம்பில்
முரட்டுச் காக்கிச் சீருடை
மற்றும் ஒருகையில் துப்பாக்கி
மறுகையில் கயிற்றேணிப் பிடிமானம் என்று
முன்னேறும் சிறுத்தைகள்
எப்பகைதான் நிற்கும்?
எலிப்பகையாய் ஆகும்
உமியாய்
இருந்த இடம் தெரியாமல் போகும்!

○

'சற்றே விலகி இரும் பிள்ளாய்' என்று
சர்வே கல்லைச் சாதுரியமாய் நகர்த்தி
அடுத்தவன் நிலத்தை அபகரிக்கத் திட்டமிட்டு
அப்புறம்
இவனும் அவனும் குத்துவெட்டு என்றிறங்கி
உச்ச நீதிமன்ற நெடிய படிக்கட்டில்
ஏறி இறங்கி - எல்லோரும்
மெச்சும் படியாய் 'எல்லைக்காகத் துடிக்கும்
வேடிக்கை மனிதர்கள் பெருகும் வேளையில்
இவர்கள் - விந்தை மனிதர்கள்!
வீழாத தேவதைகள்!

ஒரு பக்கம் -
உன்னதமாய் இத்தேசம்
உயர்வதுதான் உத்தேசம் என்று
ஏணியாய்ச் காட்சிதரும் ஏந்தல்கள்.
இன்னொரு பக்கம்
ஏறிய ஏணியினைத் தட்டிவிடும் எத்தர்கள்!
இவர்களால் -
சாதி மத பேதச் சண்டைகள்
ஊரெல்லாம்
சமர்க்களமாய் மாற....
உடையும் ஓராயிரம் மண்டைகள்

'சுற்றி நில்லாதே' என்று
வெளிப்பகையை விரட்டும் வீரர்கள்
விளைநிலத்தில்
பார்த்தீனியமாய்ப் பரவிவரும் உட்பகை
பற்றி அறிந்தால் பதறித் துடிப்பார்கள்.....
பற்றி எரியும் பாவம் அவர் உள்ளங்கள்!

○

கனவுகளில்
காதல் கோட்டைகள் காதல் பள்ளிகள்
காதல் கல்லூரிகள் காதல் கல்லறைகள்
கட்டிக் கொண்டிருக்கும் கட்டிளங் காளையர்காள்
கயிற்றுப் பாலத்தை - காக்கியுடைத் தொண்டனை
கொஞ்சம் கண்கொட்டாமல் பாருங்கள்!
ஊருக்கு நூறுபேர் ஒன்றாய்ச் சேருங்கள்!
ஒற்றுமைப் பாலத்தை உருவாக்க வாருங்கள்!

'தமிழன் எக்ஸ்பிரஸ்
கொடுத்த படத்துக்காக எழுதிய
தமிழன் எக்ஸ்பிரஸ் தீபாவளி மல

# சொர்க்கம்

உடலில் பாய்ந்த
வாளை உருவினான்
மிச்ச உயிரும் போனது.

காயம் பட்ட வீரனுக்கு
வீர சொர்க்கம் கிடைத்தது.

என்
குச்சு வீட்டுச் கூரையில்
ஒட்டிய நூலாம் படையைத்
தட்டினேன்
குச்சு வீடே
தடால் என்று தலையில் விழுந்தது.

என்
சொந்தக் குச்சே சொர்க்கம்
எனக்கு....

# காரும் தேரும்

''பங்களா வாசலில்
பல மணி நேரமாய்க்
கால்கடுக்கக் காத்திருக்கிறேன்
நான்
பால்காரக் கார்மேகம்
உங்கள் பிள்ளை
காரை ஓட்டிக்
கொன்று விட்டார்
கன்றை
எனக்கோர்
வழிகேட்கத்தான் வந்தேன்''

''யாரடா இவனை
உள்ளே விட்டது
மனு
நீதிச் சோழனின் மகிமை பற்றி
நீதிபதி தலைமையில் நீண்ட
சிறப்புரை யாற்றப்
போக வேண்டும்
பொழுது
போய்க் கொண்டுள்ளதே!''

## முத்து

நீ
செத்துச் சுண்ணாம்பாய்ப் போய்
முப்பது வருடம்
முடிந்திருக்கும்;
ஆனாலும்
முத்து,
என் மனக்கதவை
உன் நினைவுக்கரம்
தட்டாமல் இல்லை.

மூன்று மாதங்களுக்கொரு முறை
கோவை, மதுரை
கும்பகோணம், நெய்வேலி
சென்னை தஞ்சை என்று
ஏதாவது ஓர் ஊரில்
ஏதாவது ஓர் நாளில்
முடிவெட்டும் போது
சிந்தனையில் மூழ்கிய
சில கணங்களில்
என் கண்களில்
சித்திரமாய் வந்து நிற்கும்
உன்முகம்.

உன்னோடு போயிற்று
உள்ளூரில் முடிவெட்டுவது....

○
உன்னிடத்தில்
தலையை மட்டுமல்ல
செவியையும் கொடுத்துவிட்டுச்
சிவனே என்றிருந்தால்
மயிரை மட்டுமல்ல
நகரச் செய்திகளையும்
கத்தரித்துப் போடுவாய்
கனகச்சிதமாய்.

ஒரு கிராமத்துத்
திருமணப் பத்திரிகையில் வரும்
தாய் மாமன்களின்
பெயர்களைப் போல
உன் கடையில்
எப்போதும் கூட்டம்....
தேநீர் குடித்துவிட்டுத்
தினத்தந்தி படிக்க
ஓசியில்.... சும்மா
தினம் தினம் முடியுமா
முடிவெட்ட?

○
ஒவ்வொரு முறையும் நீ
முடிவெட்டி முடித்து
மீசையைக் கத்தரித்துவிட்டு
மாப்பிள்ளை மாதிரி
இருக்கிறீர்கள் என்பாய்;

நான்
சிரித்துக் கொண்டே
சில்லறை வேண்டாம்
என்று புறப்படுவேன்.

○

அந்திக்குறிக்கு
ஆன இடம்
உன் கடைதான்
கல்லூரி நாட்களில்
காளைப் பருவத்தில்
செட்டி ஊருணிக்குச்
சென்றிருக்கும் அந்தச்
செந்தமிழ்த் தேன்மொழியாள்
நயனங்கள்
நல்வரவு கூற
நான்
நாடி நிற்குமிடம்
உன் கடைதான்!

○

'கருத்துக்கள்
வேறுபடலாம்
அது பகைமை
ஆகிவிடாது'
என்றோர் வாசகம்
காந்தி சொன்னதாய்
எழுதித் தொங்கவிட்டிருப்பாய்
ஓர் அட்டையில்.
காந்தி நேரு
கஸ்தூரிபாய்

படங்களுடன்
கலைஞர் அண்ணா
படங்களையும்
கண்குளிரக் காணமுடியும்
உன் கடையில்.

கம்யூனிஸ்டாய்
கொஞ்சகாலம்
இருந்ததன் அடையாளமாய்
டாங்கே படமும் தொங்கும்.

'அரசியல் பேசாதீர்கள்'
என்று நீ
எழுதிவைத்திருந்தாலும்
நீயே அதை
முதலில் ஆரம்பிப்பாய்;

o

வேலைக்கு வந்தபிறகு
ஒரு சித்திரை மாதம்
உன் கடைக்கு வந்தேன்,
ஆனால் நீதான் இல்லை.

கடும் வயிற்று வலியால்
காலமானதை அறிந்தேன்....

o

அப்புறம்
உள்ளூரில் முடிவெட்டுவது
உன்னோடு போயிற்று.

## ஞானம்

ஆடுமாடு
மேய்த்துத் திரிந்தேன்
'முட்டாள்' என்றனர்.

பாடுபட்டுப்
படித்து முடித்து
வேலையில்லாமல்
வெட்டிப் பொழுது
போக்கும்போது
எனக்கு
ஞானம் வந்தது
'முழு முட்டாள்' என்று.

## ஒரு பக்கம்

ஒரு பக்கம் கவிதை
எழுதென்று சொன்னார்
எங்கள் ஆசிரியர்

சாளரத்தைத் திறந்துவைத்துப்
பார்த்தேன். சிந்தித்தேன்.
ஒருபக்கம்
வானத்தைப் பார்த்து
வரவா எனக் கேட்கும்
மரங்கள் அடர்ந்த மலைகள்.
ஒரு பக்கம்
ஆழங் காண முடியாத
அகழிகள் போல்
இருண்ட பள்ளத்தாக்குகள்.

ஒருபக்கம்
உயர்ந்து நிமிர்ந்து நிற்கும்
ஓங்கார நாதம் கீதம்
ஒலிக்கும் கோயில்கள்

ஒருபக்கம்
எதிரியாய் வாய்த்த
ஏழை மனிதனைக்
குதறத் துடிக்கும்
நாய்கள் குரைக்கும்
குப்பைத் தொட்டிகள்.

ஒரு பக்கம்
வெண்பளிங்கு
மாளிகைகள்.... மண்டபங்கள்.

ஒருபக்கம்
சாக்கடையோரத்தில்
சாய்ந்து விழச் சம்மதிக்கும்
பொத்தல் குடிசைகள்.

ஒரு பக்கம்
விக்ஸ்டப்பியின் அடிப்பாகம் போல்
ஒட்டிய வயிற்றுடன்
உலாவும் ஒரு ஜீவன்.

ஒரு பக்கம்
வெடிக்கப் போகும்
பலூன் போல்
வீங்கிய வயிற்றுடன்
வீற்றிருக்கும் குபேரன்

ஒருபக்கம்.....
ஓ..... ஒரு பக்கத்தைத்
தாண்டி விட்டதே....?

## முதல்வர் வாழ்க!

உண்ண உணவு
உடுக்க உடை
இருக்க வீடு
முக்கிய தேவைகள்
மூன்றும் வேண்டும்
என்றார் அமைச்சர்!

போன மாதம் வரை
கைத்தறி அமைச்சர்;
அதற்கு முன்பு
உணவு அமைச்சர்
இப்போது அவர்
வீட்டு வசதி
வாரிய அமைச்சர்.

தேவையை உடனே
தெரிந்து கொண்டு அவர்

தேடிக் கொள்ளட்டும்
பாவம் என்று
பத்து மாதங்களுக்கொருமுறை
துறையை
மாற்றிக் கொடுக்கும் நம்
முதல்வர் வாழ்க.

## இனிது

உண்மை தான்
உலகம் இனிதுதான்.....

கலகம் விளைவிக்கும்
கயமைகள் கண்முன்
தோன்றாதொழிந்தால்
உலகம் இனிதுதான்

பொன் இனிதுதான்
விலங்காக்கிப் பூட்டும்
விவேகமில்லாச் செய்கை
வேண்டாம்... கொடிது...

பெண் இனிதுதான்
பிரியமுடன் துணையாய்ப்
பேணாமல் மதிக்காமல்
போகப் பொருளாக்கும்
புன்மை கொடிது.

மண் இனிதுதான்
மதச் சண்டை நிறச் சண்டை
நிதம் நடத்தி உதிரம் சிந்தும்
நீசத்தனம் கொடிது.

விண் இனிதுதான்
வெறிபிடித்துத் திமிர் பிடித்து
ஆதிக்கப் போருக்கு
அங்கேயும் களம் அமைக்கும்
அநியாயம் கொடிது!

## என் தலைவன் வ.உ.சி

அரசியலால் தலைவர்கள்
அளவின்றிப் பெருகிவிட்ட
காலம் இக்காலம்!
உண்மையில் நம் நாட்டில்

எப்போதும் தலைவர்க்குப்
பஞ்சம் இருக்காது.
வேற்று நிலங்கட்கும்
வேண்டும் அளவுக்கு
ஏற்றுமதி செய்திடலாம்!
எத்தனை தலைவர்கள்!

ஆளுக் கொரு கட்சி
அன்றாடம் தொடங்குகிறார்
நாளுக் கொரு கொள்கை
நன்றாய் வகுக்கின்றார்

தலைவராய் ஆகும்
தணியாத ஆசையினால்;
தலைமைப் பதவி
தமக்கில்லை என்றுசொன்னால்
விலகுகிறேன் புதுக்கட்சி
விரைவில் அமைப்பேன் - என்
பலம்தெரியும் பின்னாலே
பாருங்கள் என்பார்கள்
தொண்டன் ஒருவனில்லை
தொடர்ந்துவர; என்றாலும்
கண்டபடி தலைவருள்ளார்;
கட்டுப்பாடிதற்கில்லை.

தடிஎடுப்போரெல்லாரும்
தண்டல்கா ரர்களா?
கொடிபிடிப்போ ரெல்லாரும்
தலைவர்களா கூறுங்கள்
யார் தலைவர்?

கொடுதலையை என்றாலும் கொடுப்பேன்
என் நாட்டின்
விடுதலையேமேல்
உயிர் வெல்லமல்ல எனக்கென்று
கூறிடுவோன் குணமென்னும்
குன்றின்மேல் ஏறிடுவோன்
யாரெவனோ அவனேதான் யானறிந்த நற்றலைவன்;
பேரறிஞன்வ.உ.சி. பெருந்தலைவன், அருந்தலைவன்!

வ.உ.சி
படமெடுக்கத் தலைநீட்டும்

தலைவனல்லன்; ஆதிக்கப்
படமெடுத்த பாம்பின்முன்
தடியெடுத்த தலைவன் அவன்

கள்ளிருக்கும் மலர்மாலைக்
கனவுகண்ட தலைவன் அல்லன்;
முள்ளிருக்கும் பாதையில்கால்
முன்வைத்த தலைவன் அவன்
சட்டசபை
ஆசனத்தைக் கருதும் தலைவனல்லன்,
கொத்தடிமைச்
சாசனத்தை எரிப்பதற்குத்
தாவிவந்த தலைவன் அவன்
பதவிக்குப் பலர்முன்னே
பல்லிளித்த தலைவனல்லன்
உதவிக்கு நான்என்(று)
ஓடி வந்த தலைவனவன்.
அறைக்குள்ளேபேட்டி
அளிக்கும் தலைவனல்லன்
சிறைக்குள்ளேகிடந்து
சீரழிந்த தலைவனவன்
மாணவரை ஏமாற்றித்
தூண்டிவிடும் தலைவனல்லன்
ஆனவரை நாட்டுணர்வைத்
தூண்டிவிட்ட தலைவனவன்
வெள்ளைச் சுவர்வாழும்
விளம்பரத் தலைவனல்லன்
உள்ளச் சுவர்வாழும்
உத்தமத் தலைவனவன்

கள்ளப் பணம்சேர்த்து
கனத்த தலைவனல்லன்
உள்ள பணத்தையும்
உவந்தளித்த தலைவனவன்
சாதித் தலைவனல்லன்
சாதித்த தலைவனவன்
நீதித் தலைவனவன்
நேர்மையுள்ள தலைவனவன்
தனக்குவமை யில்லாத தலைவனவன்;

○

விடுதலை உணர்வுக் கெதிராய்த் தீயர்
பதித்த மடையை உடைத்தான்
விபினரின் மீட்சி விழாவுக் கெதிராய்
விதித்த தடையை உடைத்தான்.

விடுதலைத் திருநாள் விருந்துண்டு வெற்றிலை
போடப் பாக்கை உடைத்தான் - தம்மை
விலைக்கு வாங்கிட வீணாய் முயன்ற
வெள்ளையர் மூக்கை உடைத்தான்.

○

நெருப்பு நாங்கள் நெருங்கா தேயென
நீசர் ஆங்கிலர் சொன்னார்
நெருப்பை அவிக்கும் நீர்நான் என்று
நெடியோன் சிதம்பரன் சொன்னான்.

பொருப்பு நாங்கள் மோதா தேயென
புல்லியர் வெள்ளையர் சொன்னார்
பொடிப்பொடி யாக்கிடும் புதுவெடிநான்எனப்
புரட்சிச் சிதம்பரன் சொன்னான்.

அரவம் நாங்கள் ஆபத் துணர் என
ஆதிக்க வெறியர் சொன்னார்
அதனைக் கொத்தும் கருடன் நான்என
அழகன் சிதம்பரன் சொன்னான்.

கரைதெரி யாத கடல்நாங் கள்என
கம்பெனி யார்கள் சொன்னார்
கப்பல் ஓட்டும் தமிழன் நான்எனக்
கவிதைச் சிதம்பரன் சொன்னான்

○

சுதேசி மலர்களுக்கு - அவன்
தொடுக்கும் புண்ணிய நாராய் இருந்தான்
தூய்மைச் செயல்களுக்கு - அவன்
தொடர்ந்து தாங்கும் வேராய் இருந்தான்

விடுதலை வேள்விக்கு - அவன்
விரும்பிச் சொரியும் நெய்யாய் இருந்தான்.
வீரத் திலகருக்கு - அவன்
வினைமுடிக் கும்வலக் கையாய் இருந்தான்.

○

நூலடியில் கிடக்கின்ற பொருளை நாளும்
நுட்பமுடன் ஆய்ந்தாய்ந்து சொன்ன மேதை
ஆலடியில் பரவுகின்ற நிழல்போல் தம்மை
அண்டியவர்க்(கு) ஆதரவு தந்த அண்ணல்

நாலடியில் ஈரடியில் மனங்கொடுத்த
நற்றிமிழின் வடிவான செம்மல்; மாற்றார்
காலடியில் கிடப்பதற்கு மறுத்த தாலே
கயவர்கள் செக்கடியில் கிடக்க வைத்தார்.

○

நிதம், பரம் பொருளை நெஞ்சில் நிறுத்திடும் அன்பர் கூட்டம்
சிதம்பரம் என்றால் போதும் சிலிர்த்திடும்; நானோ வ.உ.
சிதம்பரம் என்றால் மேனி சிலிர்க்கிறேன்... விடுதலைத் தாய்
பதம், பரம் பொருளே என்ற பக்தனைப் போற்று கின்றேன்.

தூத்துக்குடி வ.உ.சி.
கல்லூரி வெள்ளிவிழாவில்
பாடியது.

# நான் என்ன சொல்ல?

நான் என்ன சொல்ல.....?
என் உள்ளம்
அம்புபட்ட மானாய்
அடிபட்டுத் துடிக்கிறது.
என் வார்த்தை
வெட்டப்பட்ட பசுவாய்
விழுந்து கிடக்கிறது.

என் கவிதை
அனல்பட்ட பூச்சரமாய்
அழிந்து சிதைகிறது

நான் என்ன சொல்ல?

சூரியனே இல்லாமல்
சூன்யத்தை நிலைக்க வைக்கச்
சுட்டான்.

இமயத்தைச் சாய்த்துத்
துகள்துளாய் ஆக்கிட அவன்
சுட்டான்.

கங்கை காவிரியை
போக்கொழிந்து போயொழியச்
சுட்டான்.

நான் என்ன சொல்ல?

பசித்தவர்க்குச் சோறாய்
தாகத்தால்
தவித்தவர்க்கு நீராய்
சுரண்டிப்
புசித்தவர்க்குக் கணையாய்
பொய்ம்மைக்கும் புரட்டுக்கும்
அணையாய்.....
இருந்தாய்.... அம்மா....

இன்று
நான் என்ன சொல்ல?
நான் என்ன சொல்ல?

இந்திராகாந்தி சுடப்பட்டபோது
சிவகங்கையில் நடந்தஅனைத்துக்
கட்சிக் கூட்டத்தில் வாசித்தது.

## அருட்செல்வர்

பூவில் மணம் பிறக்கும்; யாழில் இசை பிறக்கும்;
பாவில் சுவை பிறக்கும்; பண்பாளர் அருட்செல்வர்
சேவையிலே சக்தி பிறக்கும் சிறப்பறிவார்.....

சர்க்கரை ஆலைக்குச் சக்தியின்பேர்;
அக்கறையோடியங்கும் நூற்பாலைக்கும்
சக்தியின்பேர்;
நிதியிருக்கும் நல்லநிறு வனத்துக்கும் சக்தியின்பேர்;
கலையழகும் கருத்தழகும் கண்கவர
சிலையழகுத் தோற்றமுடன் சீராய்ப்பவனிவரும்
சாரமுள்ள இதழுக்கும் சக்தியின்பேர்......

எங்கெங்குக் காணினும் சக்தியடா - தம்பி
ஏழு கடல் அவள் வண்ணமடா!
என்று பாவேந்தர்
இவரை நினைத்துத்தான் இசைத்தாரோ?
அன்று முதல்பாட்டை, அகம்குளிர
○

செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குவதாம்
நல்ல மனம் படைத்த நாச்சிமுத்து மைந்தர்இவர்
சூழ இருக்கின்ற சுற்றத்தார் தம்மோடு
ஏழையரை, எளியோரை எப்போதும் தாங்குகிறார்....

○

இவர்
பணக்காரர் மட்டுமல்லர்
நல்ல
குணக்காரர்
மல்லிகைப்பூ மணக்காரர்

இவர் கைகள் -
ஏற்றியும் வைக்கும்; இறக்கியும் வைக்கும்;
இன்ப விளக்கை ஏற்றி வைக்கும்;
துன்பச் சுமையை இறக்கி வைக்கும்.

இவர் கைகள்-
கொதிக்கவும் வைக்கும்; குளிரவும் வைக்கும்;
பற்பல வீட்டில்
உலைநீர் தன்னைக் கொதிக்க வைக்கும்;
உள்ளம் தன்னைக் குளிர வைக்கும்.

தலைநகரின் தாகத்தைத்
தணிக்கவரும் திட்டத்தைத்
தெலுங்கு கங்கையென்று
செப்புகிறார்.... இவரைக்
கொங்கு கங்கையென்று
ஒப்புகிறார்.... இன்றிந்தக்
கொங்கு கங்கை

கோவைப் பகுதிக்கு மட்டுமின்றி - சிவ
கங்கைப் பகுதியிலும் கனிவாகப் பாய்கிறது.....
எங்கும் பரந்து இனிதாகப் பாய்கிறது.....

ஆதலினால் இனி இவரைக் ஆனந்தமாய்
தமிழ் கங்கை என்போம்!
பாரதத் தங்கம் என்போம்!

○

சங்க காலத்தில் ஏழு வள்ளல்கள்.....
இந்தச் சங்கட காலத்தில்
ஒரு வள்ளல் போதுமா?
இது என்ன ஓரவஞ்சனை என்றே
பிரமனிடம் கேட்டால்
பிரியமுடன் அவன் சொல்வான்:

ஏழு பேரென்ன எழுபது பேருக்கு
ஈடு கொடுத்து எல்லோர்க்கும் கொடுக்கின்ற
'சக்தி' மிக்க வள்ளல் இவர்.....

ஈதல் இசைபட வாழ்தல் என்பது
அன்றைய வள்ளல்கள் வழக்கம்;

வாழையடி வாழையென வந்த இவரோ
ஈதலே வாழ்க்கையாய் ஆக்கியிருப்பவர்
என்றிசைப்பான்.... நன்றிசைப்பான்.....

*அன்னம் இலக்கிய வட்டம் நடத்திய*
*விழாவில் வாசித்தது மதுரை, 28.1.1990*

## ஒன்றுபட்டு.....

*அவர்கள்*
*செங்குத்தான மலைச் சிகரங்களில்*
*ஏறுகிறார்கள்....*
*மேலே மேலே!*

*உருகும் பனிகள் எலும்பைத் துளைக்க*
*நெருப்புப் பிழம்பாய் எதிர்த்துநிற்கிறார்கள்;*
*பகைவனின் பதுங்கு குழிகளைச்*
*சவக் குழிகளாக்குகிறார்கள்.*
*முகாம்களைக் குண்டுமழையில்*
*குளிப்பாட்டுகிறார்கள்.*
*ஊண்உறக்கம் கருதாமல் முன்னேறுகிறார்கள்.*

*எங்கோ குக்கிராமத்தில் வசிக்கும்*
*வயோதிகத் தாய்தந்தையர் நினைவு வரவில்லை.*
*தங்கைக்கு மணம் முடிப்பது தள்ளிப் போகிறதே*
*என்ற ஏக்கம் எதிரொலிக்கவில்லை;*
*தம்பியின் படிப்புச் செலவு பற்றித்*

தனிமையில் உட்கார்ந்து யோசிக்க முடியவில்லை
அவர்கள் நெஞ்சில் நிற்பதெல்லாம்

தேசம்! தேசம்! தேசம்!

○

முகம் சூரியப் பிரகாசமாய் ஒளிர
விழிகள் அக்கினி நட்சத்திரமாய் மிளிர
இதயம் எரிமலையாய்த் தகிக்க
சுற்றி நில்லாதே பகையே
நீ தூள் தூள் என்று
வெற்றி முழக்கமிட்டு
வீரசபதமிட்டு
அவர்கள் போராடுகிறார்கள்
அவர்கள் முன்னேறுகிறார்கள்.

நாம் இங்கே,
பாதுகாப்பு அமைச்சர் பதவி விலக வேண்டும் என்று
பரபரப்பாய்
அறிக்கைமேல் அறிக்கை விடுகிறோம்
பயிர் இதுவென்றுகளையை நடுகிறோம்.

பலவீனமான அரசுதான்
பகைவன் ஊடுருவலுக்குக் காரணம் என்று
உறுமி மேளம் கொட்டுகிறோம்.
ஓங்கிக் கைதட்டுகிறோம்.

மாபெரும் விவாதங்கள் புரிய
மாநிலங்கள் அவையைக் கூட்டவேண்டும் என்று
வாய்ப்பாட்டுப் படிக்கிறோம்
வசைபாடத் துடிக்கிறோம்.

இடையில்
ஒத்திவைக்கப் படுமா தேர்தல்
பொத்தி வைத்த ஆசை புஸ்வாணமாகுமா என்று
மெத்தவும் கவலைப்படுகிறோம்;
கண்ணீர் விடுகிறோம்.

மதவாதமா ஊழலா
எந்த அணி வெல்லும் என்று
பட்டிமன்றம் நடத்துகிறோம்;
பரிதாபமாய்ப் பொழுதைக் கடத்துகிறோம்.

நம்நெஞ்சில் நிற்பதெல்லாம்
வேஷம்! வேஷம்! வேஷம்!

○

அவர்கள் பேசும் மொழி ஒன்றல்ல
பிறந்த இடம் ஒன்றல்ல
மதம் ஒன்றல்ல மார்க்கம் ஒன்றல்ல
என்றாலும் ஒன்றானார்
அவர்கள் உள்ளத்தால்.

கார்கில் போரின்போது
எழுதியது. 'ஓம் சக்தி'
இதழில் வெளிவந்தது.

# சிறியோர்கள் நிச்சயித்தபடி

'பால கர்களே!
பஜனை முடிந்ததும்
சூடாய்க் கிண்டிய
சுண்டல் கொடுப்போம்.....'

'பெரியவர்களே!
இன்னும் இரண்டிடம்
செல்ல வேண்டும்
சுண்டலை முதலில்
சும்மா கொடுங்கள்,
பஜனையை நீங்களே
பார்த்துக் கொள்ளுங்கள்....'

## விகடகவிகள்

*சாதிச் சங்கங்கள்*
*சாலை மறியல் செய்யும்.*
*தங்கள் சாதியார்*
*அதிகமுள்ள கிராமங்களில்*
*தங்கள் தனிக்கொடி பறக்குமாம்*
*தாயின் மணிக்கொடி*
*பறக்குமாம்*

○

*குண்டு துளைக்காத*
*சட்டை அணிந்து*
*குண்டு துளைக்காத காரில்*
*தலைவர் வருகிறார்;*
*அப்புறம் என்ன*
*குண்டு துளைக்காத*
*வாக்குச் சீட்டைப்*
*போட்டுத் தொலைக்க*
*வேண்டியது தானே!*

○

வரலாறு காணாத வறட்சி
என்றார்
ஓர் அமைச்சர்;
வம்பெதற்கு?
பள்ளியிலே
வரலாறே வேண்டாம்
என்றார்
மற்றோர் அமைச்சர்.

## ஏலம்

குட்டி நடிகையாய்க்
கோடம்பாக்கக்
குளுகுளு அறையில்
அறிமுகம் ஆனபோது.....
அவள்.

பிரபலமாகிப்
பின்னால் ஒருநாள்
நாடி நரம்புகள்
தளர்ந்து
சாய்ந்த போது.....
அவள் வீடு.

## சிவப்பு விளக்கு

வெளிச்சம் கொடுக்கும்
விளக்குகளைத் தான்
வீட்டில் தினமும்
ஏற்றி வைக்கிறோம்
வாழ்வின் வெளிச்சத்தை - ஒளிச்சத்தை
அணையாது காக்கும்
அதிசய விளக்கை

போக்குவரத்துப்
புண்ணியன் கண்ட
அற்புத விளக்கை நான்
ஏற்றி வைக்கிறேன்....

o

சூரிய சந்திர விளக்குகள்,
அண்ணாந்து பார்க்கும்
ஆகாயச் சாலையில்
சுதந்திரமாய்ச் சுற்றலாம்;
அண்ணா சாலையில்
அப்படி முடியுமா?

சிவப்பு விளக்கே!
உன்னை மீறி
ஓரடி எடுத்துவைக்க முடியுமா?

சிவனிடமிருந்து
நெற்றிக் கண்ணைச்
சீதனமாய்ப் பெற்றாயோ.....

வம்ச விருத்திக்கு
வகையற்றுக் கிடக்கும்
வானத்துச்
சூரிய சந்திர விளக்குகள்,
ஒற்றையாய்த் தானே
உலா வருகின்றன;
உனக்கோ
ஊரெங்கும் பிள்ளைகள்
உலகெங்கும் பிள்ளைகள்
எங்கும் தமிழ் எதிலும் தமிழ்போல்!

என்னைப் பார்
என் அழகைப்பார்
என்று
நட்டநடுவீதியில்
நாகரிகமாய் நிற்கிறாய்;

இந்த அரசுக்கு
இப்படி ஒரு யோசனை
ஏன் இன்னும் உதிக்கவில்லையோ!
ஒவ்வொரு வீட்டுப்
பள்ளியறையிலும்,

உன்னை வைத்தால்
உற்பத்தி குறையுமே!

அண்ணலும் அவளும்
ஆசையாகப் பார்க்கலாம்;
இதழோடிதழைத் சேர்க்கலாம்;
அதற்கும் மேலே.....
சொர்க்க வாசல் பக்கம்
போக முயலும்போது
அரசின் 'இலவச பலூனை'
எடுத்துவிடுவார்
நீ உன் முகத்தை
செம்மையாகக் காட்டினால் போதும்
விரைவில்
போக்குவரத்தை சரி செய்யும் நீ
வீட்டிலும் வரத்தைச் சரிசெய்யலாமே!

பயணிகளைக்
குண்டுக்குப் பலியாக்கத் திட்டமிட்டு
பேருந்தில்
ஏறவரும் எத்தர்களின்
இடுப்பெலும்பை ஒடிக்கலாம்

வங்கியில் கொள்ளையடிக்க
புல்லட்டில்வரும் புல்லர்களை
தடுத்து நிறுத்தித் தரையில் இழுத்துப்
போடலாம், நையப் புடைக்கலாம்.

ஐயன் திருவள்ளுவன்
'நிற்க' என்று சொன்னதை

எவன் கேட்டான்
தெருவள்ளுவன் நீ
சொல்லாமல் சொல்கிறாய்
எல்லாரும் கேட்கிறோம்.
'என் புருஷன் எப்போதும்
கிழித்த கோட்டைத்
தாண்ட மாட்டார் என்று
தண்டோரா போடும்'
மனைவியர்க்கு இப்போது
ஊரில் உள்ள புருஷர்கள் எல்லாரும்
நீ கிழித்த கோட்டைத்
தாண்டாது நிற்கும்
தாத்பரியம் புரியும்

ஆயிரம் கார்கள்
அணிவகுத்துப் பின்தொடர
அலங்கார பவனிவரும்
அகங்கார அமைச்சரும்
உன்
கடைக்கண் அருளுக்குக்
காத்து நிற்க வேண்டும்.

அப்படி என்ன
மந்திர சக்தியோ
உன்னிடம்
எழுபது கல் வேகத்தில்
வருபவனும்கூட
அப்படியே
கல்லாய்ச் சமைந்து நிற்கிறான்.

## ஈகையும் இரக்கமும்

இலக்கிய வழக்காய்
இருக்கும் ஈகையும்
அகராதி வார்த்தையாய்
ஆன இரக்கமும்
எல்லா
இதயங்களிலும்
இரண்டறக் கலந்தால்
ஆனந்தம் பிறக்கும்
அகிலம் தழைக்கும்.

இரக்கம் காரணம்
ஈகை காரியம்
காரணமின்றிக்
காரியம் இல்லை
அதனால் தான்
எழுத்தில் முதலில்
'இ' வரும்; அடுத்து
'ஈ'கைக்குரிய 'ஈ' வரும்.

வெல்லுவதை இரக்கமின்றிக்
கொல்லுவதை வீரம் என்று
நினைத்ததெல்லாம் பொய்யாக்கி
உயிர்களிடம் அன்பு வைத்து
ஈ எறும்பைக் கூடக்
கொல்லாத
இரக்கமனம் கொண்டவரை
ஈகை மதம் கண்டவரை
மகாவீரர் என்றே
வையம் துதிக்கிறது.

கொஞ்சம் கொடுத்தால் நன்கொடை
கூடக் கொடுத்தால் கொடை
அள்ளிக் கொடுத்தால் வள்ளன்மை
ஆனாலும்
அருட்பெருஞ்சோதி
வடலூர்க் கருணை நிதி
வாடிய பயிரைக் கண்டபோது
வருந்தியதால்
வள்ளலார் என்றே
வையம் மதிக்கிறது.

மாவீரர் ஆவதற்கும்
வள்ளலார் ஆவதற்கும்
ஒரே ஒரு வழி
இரக்கத்தை
வளர்ப்பது தான்.

குடுகுடு கிழவர்களை
கூன்விழுந்த கிழவர்களைத்
தொண்டு கிழம் என்பார்கள்.

அன்னை தெரசாவை
அந்த அர்த்தத்தில்
அழைக்க மாட்டோம் நாம்....

எங்கோ பிறந்து
இங்கு வந்து
ஏழை எளியவர்க்
கிரங்கி உதவினார்
தொழுநோயாளர்களைத்
தொட்டுச் சேவை செய்தார்....
தொண்டு செய்து
தொண்டு செய்து பழுத்தார்
அன்னை தெரசாவை
அகிலம் தழைக்க வந்த
தொண்டு கிழம் என்று
கண்டு கொண்டேம் நாம்.

o

கடையெழு வள்ளல்
காலம் முடிந்ததே
என்ற கவலை
இனிமேல் வேண்டாம்....
இப்போதும் இங்கே
கடையெழு வள்ளலைக்
காணலாம்.... காட்டலாம்...
தீபாவளிக்கு முன்னால்
தெருக்களில் எல்லாம்
துறைதோறும் துறைதோறும்
தங்களுக்குத் தொண்டு செய்ய
இனாம் கேட்டு வருகிற
இரவலர் கூட்டத்தைக்

கண்டதும் வேகமாய்க்
கல்லாவை விட்டு
எழுந்து பதுங்கும்
கடையெழு வள்ளலைக்
காணலாம்!

O

பாவம் பிச்சைக்காரன்....என்று
பரிதாபப் பட்டுநான்
சில்லறை இல்லாததனால்
முழுரூபாய் நாணயத்தைப்
முகமலர்ச்சியோடளித்தேன்....
என்
ஈகைக் குணத்துக்கு
மனதுக்குள் மாலையிட்டேன்.

'இந்த நிலை வந்ததுனக்கு
ஏனப்பா' என்றேன். சட்டென்று
'உன்னைப் போல்தான் ஐயா
கணக்குப் பார்க்காமல்
கண்டபடி விரயம் செய்து
திருவோடேந்தித்
திரிகின்றேன்' என்றான்.....
திகைத்தேன் நான்.....

இரக்கம் நம்மீது
இரக்கப்படும் வகையில்
இருக்கக் கூடாது.....
கொசுவுக் கிரங்கிக்
குருதியினைக்
கொடுக்கக் கூடாது;

பாம்புக் கிரங்கி
பாதத்தை நிச்சயமாய்
நீட்டக் கூடாது!

○

ஈகை
இருக்கிறது
கானல் நீராக....
போகட்டும்
இரக்கம்
பெருக்கெடுக்கக்கூடாதா
மழை நீராய்.....

○

கவலைகளை மறந்து
கண் தூங்கும் நேரத்தில்
வெடிவைத்துப் பாலத்தை
விழவைத்து ரயிலைக்
கவிழவைத்து உறவினரைக்
கதறவைத்து விட்ட
கயவர்க்கு
காதகர்க்கு
கடுகளவேனும் இரக்கம்
இருந்திருக்கக் கூடாதா?

○

வெண்மணியில் பெல்சியில்
விழுப்புரத்தில் ஏழைகளின்
குடிசைகளில்
சாதி நெருப்புவைத்து

தர்மத்தை
கொன்றுவிட்ட பேர்களிடம்
இரக்கத்தை எப்படி நான் போதிப்பது?

இரக்கம் ஈகையென்ற
பெயராலே சிலர் இங்கே
இலவசமாய்
வேட்டி புடவைகள்
விநியோகம் செய்கின்றார்
நெரிசலிலே சிக்கி
சிலர் மூச்சு நிற்கிறது.
இரக்கத்தால் சிலர் இங்கே
இறக்கத்தான் முடிந்தது.

தனிநபர் ஈகைகள்
தர்மகர்த்தா ஈகைகள்
தேவைதான் என்றாலும்
பெருகிவரும்
ஏழ்மையினை வறுமையினை
எதிர்கொள்ள முடியாது......

தலைமுறைகள் கடந்து நிற்கும்
தத்துவத்தால்
சமதர்மத் தத்துவத்தால் தான்
இந்த அகிலம் பிழைக்கும்....
எல்லார்க்கும் எல்லாம்
என்கின்ற திட்டத்தால்
இலட்சியச் சட்டத்தால்
மட்டுமே இந்த
அகிலம் தழைக்கும்
ஆம்.... அகிலம் தழைக்கும்!

## வளையும் குண்டலமும் தொலைந்ததேன்

*சயமப் பிரிவினை யால்மனம் தளர்ந்து*
*வாடினாள் தமிழ்த்தாய்; வளையல் குண்டலம்*
*வேண்டாம் என்றே வீசினாள். 'இருஇரு'*
*என்று வள்ளலார் எழுந்துவந்தார்.*

○

*சமய வெறியால் தம்மக் கள்சிலர்*
*கலகம் வளர்க்கக் கண்டு தமிழ்த்தாய்*
*விலக்கப் போனாள் வீணாய். பாவம்*
*கைவளை குண்டலம் காணா தொழிந்தன.*

○

*உன்புகழ் முழக்கும் ஒருமகன் பின்னால்*
*இளசையில் பிறப்பான் என்றாள் குறத்தி ஒருத்தி*
*குதூகலத் தாலே குண்டலம் வீழ*
*வளையையும் தமிழ்த்தாய் வழங்கினாளே!*

## கறுப்பு நிலா உன் வானத்திலே

(புறம்)

கங்கை பாயும் பாரதமே
கறுப்பு நிலாஉன் வானத்திலே
எங்கும் சுரண்டல், சுதந்திரத்தோ(டு)
ஏழ்மை வந்தது விமானத்திலே!
அங்கம் குறைக்கும் தொழுநோயாய்
அரசியல் நடக்கும் ஈனத்திலே
இங்கு மகாத்மா திரும்பி வந்தால்
தலைகுனி வார் அவ மானத்திலே!

(அகம்)

கடலில் பிறந்த வெண்முகத்தே
கறுப்பு நிலாஉன் வானத்திலே!
மடலில் தாழையாய் மனங்கவர்ந்தாய்
வசப்பட் டேன்உன் நாணத்திலே!
குடலில் பசியாய் அரவணைப்பேன்
குடிமகன் நான் இதழ்ப் பானத்திலே!
உடலில் உயிர்நீ என்றுன்னை
உயர்த்தி வைப்பேன் உப மானத்திலே!

## கல்லறை வரிகள்

### மணப்பெண்

முதல்இர வுப்பகல் வருமுன் னாலே
அமாவா சைஇர வாகி விட்டாள்.
முழுஇர வாக மாறி விட்டாள்.

○

முன்னு ரையிலே முடிவுரை எழுதிய
புதுமைப் பெண் இவள்

○

வாழ்வுத்
தட்டெழுத் துப்பொறி தனிலே ஆசையாய்
'அ' வரத் தட்டினாள்..... '%' வந்து விழுந்தது.

○

## விபச்சாரி

இப்போதுதான் இவள்
இரவில்
நிம்மதி யாக நீள்துயில் கொள்கிறாள்.

○

இதுதான் அவள் கண்
மூடப் போகும் முதல் இரவு

○

கீலராகக் கிடந்தவள்
கண்ணகியாகக் கனவு காண்கிறாள்.

○

கல்லறைக் குள்ளொரு குட்டிக் கல்லறை

○

## வியாபாரி

இங்கே
மூல தனமே முடங்கிப் போனது.

○

முதலுக்கிங்கே மோசம் வந்தது.

இலாபத்தின் உயரத்தை
எட்டிப் பார்த்த இவர்
நட்டத்தின் ஆழத்தை
அளந்து கொண் ருக்கிறார்.

**அரசியல் வாதி**

உடனே என்னை உயிர்ப்பியுங்கள்
வேண்டிய மட்டும்
வாக்குறுதிகள் நான் வாரி வழங்குவேன்.

**கடத்தல்காரன்**

திரைகடல் ஓடித் திரவியம் தேடிய
கப்பல் இங்கே தரைதட்டி நிற்கிறது.
○
அதை இதைக் கடத்தி அங்கங்கே பதுக்கிய
பொல்லாப் பழக்கம் போகாத தால் இன்று
உயிரையே கடத்தி ஒளித்து வைத்துள்ளான்

**வெட்டியான்**

(சுடு)காட்டு யானைக்கு கவளம் கொடுத்த
பாகனே இங்கு பருக்கையானான்
○

**என் கல்லறை**

என் கல்லறையில் எழுதுங்கள்:
கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்.

## என்னைப் போட்டால் என்ன?

புது மழையில்
பூரித்தோடும் நதி
புல்லைப் போட்டுப் பார்த்தேன்
மிதந்தது.
கல்லைப் போட்டுப் பார்த்தேன்
அமிழ்ந்தது.
நான்
என்னைப் போட்டுப்
பார்த்தால் என்ன?

## அதிகாலை

தாமரைக் குளத்தின்
கரையில் இருந்து
தகதகக்கும்
தண்ணீர்க் குடத்துடன்
கண்ணுக்குள் புகும்
கவிதை வரிகளாய்க்
கலகலப்புடனே
சிரித்துப்பேசி
அன்ன நடை யிடும்
சின்ன மயில்களின்
அழகிய ஊர்வலம்
காணா விட்டால்
அதிகாலை செத்துப் போகும்.

## மழை நீர்

*கிணறு வெட்டப் பூதம் தோன்றினாற்*
*போல என்பர்! பூதம் என்றால்*
*அலாவு தீன்விளக்கில் அவதரித் துப்பின்*
*உலாவிய பூதமா? உயிர்கொல்லும் பூதமா?*
*கிணறு வெட்டினால் கீழிருந்து ஐந்து*
*பேராற் றல்களுள் ஓராற் றல்எனும்*
*நீர்வரும் என்பதை நிகழ்த்தினார் அப்படி!*

*மண்ணி லிருந்து சுரக்கும் நீரினும்*
*விண்ணி லிருந்து வீழும் நீரையே*
*கண்கண்ட கடவுள் காலத்தின் கருணை*
*வறுமைக்குச் சத்துரு வாழ்வுக்குச் சத்து - உரு*
*பாரியின் கை இப் பாரின் நம்பிக்கை*
*என்று கவிஞர் ஏத்திப் புகழ்வார்.*

*வானம் பார்த்த பூமி என்பதை*
*மானம் பார்த்த பூமி என்றே*

உழவர் கொச்சையாய் உரைப்பதும் சரியே!
மழைநீர் இல்லையேல் உழவிருக் காது
உழவிருக் காதெனில் விளைவிருக் காது
விளைவிருக் காதெனில் வறுமை வளர்ந்திடும்
வறுமை வளர்ந்திடில் மானம் பறந்திடும்
ஆதலால்
கெடுப்பதும் மழைநீர்! கெட்டார்க்கு வாழ்வு
கொடுப்பதும் மழைநீர்! கொல்லும் பசியெனும்
நோயும் மழைநீர்! நோயைக் கொல்லும்
மருந்தும் மழைநீர்! வயிற்றுத் தீயைத்
தணிக்கும் உணவை ஆக்கித் தருவதும்
தானே உணவாய் இருப்பதும் மழைநீர்!

## கவியின் கனவு

‘களவும் கற்று மற’
-இது பழமொழி.

கனவும் கண்டு மற
- இது புதுமொழி.

○

காதலிலே தோல்வியுற்றால்
காலமெல்லாம்
காளையரும் கன்னியரும்
கனவுகளில் தான்
கவலையை மறப்பார்கள்...
கற்பனையில் பறப்பார்கள்.

○

கொலம்பயின் கனவு இந்தியா...
அந்தக் கனவு வசப்படவில்லை.
ஆனாலும்
அந்தக் கனவின் நிழல்

அமெரிக்காவெனும்
அற்புத நிஜமாய் ஆனது!

○

ஷாஜஹான் கனவு
தாஜ்மகால் ஆனது
அது காதல் கனவு.

பூசலார் கனவு - மனக்
கோயிலாய் வளர்ந்தது.
அது பக்திக் கனவு.

○

அரசியல் வாதியின் கனவுகள்
அழகான சங்கிலிக் கனவுகள்.
பலர்பார்க்கும் படிக்கட்டுக் கனவுகள்
உள்ளாட்சி, நகராட்சி, உறுப்பினர்
சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்....
சந்தர்ப்பம் உருவானால் அமைச்சர்....
அப்புறம் முதல்வர்... முடிந்தால் பிரதமர்.

○

விஞ்ஞானக் கனவுகள்
அறுவடை நடக்க
விதைகளாய் அமைந்தன
கவியின் கனவுகள்
கவிதைக் கனவுகள்

புட்பக விமானம்
புராதன - புராணக் கனவாய்க்
கவிஞன் கண்டது.

அதுதான் ஆகாய விமானமாய்
உண்மை உருவம் கொண்டது.

○

நிலா நிலா
வா வா என்று
அழைத்தான் கவிஞன்
சந்திரமண்டலம் போக
சாதனை புரிந்தான்,
உழைத்தான் அறிவியலறிஞன்.

இன்று
நிலவுலகமும்
நிலவு உலகமும்
நெருக்கம் கண்டது.
இனிமேல் - வீரமுள்ள
இளங்காதலர்கள்
தேன்நிலவுக்கு
உதகமண்டலம் போகவேண்டாம்....
சந்திரமண்டலம் போகலாம்.

சந்திரமண்டலத்தியல் தெளிவோம்
என்ற பாரதி
மங்கியதோர் நிலவினிலோர்
அழகுத் தெய்வத்தை ஆராதனை செய்து
பொங்கிய கவிதைகளைப்
புசிக்கிறோம் பொங்கலாய்.

○

உப்பில்லாத சமுதாயத்தை
ஒப்பில்லாத சமுதாயமாகக்

எத்தனை கனவுகள் கண்டான்...
அவை வெறுங் கனவுகளா?
காலத்தை வென்று நிற்கும்
திட்டங்கள்! சட்டங்கள்!

○

இனி
கவியின் கனவை
கற்பனை என்று தள்ளாதீர்கள்.
அந்தக் கனவுகளில்
ஆயிரம் தீபங்கள் சுடர்விடலாம்.

வெறும் மண்தானே என்று
விலக்காதீர்கள்....
அதனுள்
ஆயிரம் கிலோ தங்கம் புதைந்திருக்கலாம்..

உப்புக் கடல் தானே என்று ஒதுக்காதீர்கள்...
அதன் அடியில்தான்
விலை மதிப்பற்ற முத்துக்கள்
மூழ்கிக் கிடக்கலாம்.

கவிஞனின் கனவைப்
பொய் என்று புறக்கணிக்காதீர்கள்
அதில்தான்
காலங்காலமாய் வாழும்
உண்மைகள் உறங்கிக் கொண்டிருக்கும்
சத்தியங்கள் சயனித்துக் கொண்டிருக்கும்.

ஒரு
கவியின் கனவைக்
கானல் நீராய்க் கருதாதீர்கள்
காவிரிப் பெருக்கும்
கங்கைப் பிரவாகமும்
உற்பத்தியாகி
ஊர்வலம் புறப்படும்

○

ஒரு விவசாயி
பாரதத்தின் தலைவனாய்
பவனி வரவேண்டும்.
இது
அகிலம் துதிக்கும்
அண்ணல் காந்தி கண்ட கனவு.

○

தமிழாய்ந்த தமிழன்தான்
தமிழ்நாட்டின் தலைவனாய்
வரவேண்டும்
இது பாவேந்தர் கண்ட
பத்தரை மாற்றுத் தங்கக் கனவு
இந்தக்
கனவுகள் நனவாகும்
காலத்தைக் கையில் ஏந்தி
இன்பத் தேன் மாந்தி
உயர்வோம்.... உன்னதம் பெறுவோம்....

○

லாட்டரிச் சீட்டு
வாங்கியவன் கனவு

லட்ச லட்சமாய் விழும் எனும்
ஆசையின் கனவு....

○

யோகி கண்ணை முடிக் கொண்டிருந்தால்
தியானமாம்
அரசியல்வாதி கண்ணை முடிக்
கொண்டிருந்தால் அது இராஜதந்திரமாம்.
அறிஞர் கண்ணை மூடிக் கொண்டிருந்தால்
அது சிந்தனையாம்!
கவிஞர்கள் கண்ணை மூடிக் கொண்டிருந்தால்
அது கவிதையாம்.

○

பதவிக் கனவுகள் அரசியல்வாதிகளுக்கு
அன்றாடம் விரும்பும்
தொலைக்காட்சித் தொடர்போல!

○

இட்லர் பிரஸ்யாவின் சுருங்கியிருந்த
எல்லைகளை வரைபடத்தி விரிவாக்கக்
கனவு கண்டான்,
ஜெர்மனி பிறந்தது.
அளவோடு கண்ட கனவு நாட்டுப்பற்று
அது அதிகமானபோது ஆதிக்கப் பற்று
அவனுக்கு அதுமுற்று.

○

கவிஞர்களுக்குக் கனவே உணவு.... கனவே உறவு
நிலவும் கனவு, நீலக் கடலும் கனவு,

○

உலகெல்லாம் உயிர்களுக்கு வேண்டும்
உணவு; இது வள்ளுவரின் கனவு -

புதியதோர் உலகம் செய்வோம்...
இது கவிஞன் கனவு மட்டுமா
பூதலம் காணும் கனவு; பொன்மயக் கனவு

## மடம்

இதுதான் என் வீடு
இவள் தான் என் மனைவி
என்று
போட்டி போட்டுச்
சண்டை போட்டனர்
ஒரு முதலாளியின் மகனும்
ஒரு தொழிலாளியின் மகளும்

'எதற்கு மோதல்?'
நான்
இரண்டு பேருக்குமே
மனைவியாக
இருந்து விட்டுப் போகிறேன்
என்றாள் அந்த
ஐந்து வயதும் நிரம்பாத
பெண் குழந்தை.

நன்றி. டென்னிசன் கி.ரா.(ஜடை)

## மழை நீராய்.....
## மகா நதியாய்.....

வெண்பஞ்சினும் மெல்லிய
ஒரு மயிலிறகின் தடவலாய்
ஒரு செந்தாமரை மலரின் தழுவலாய்
உடலும் உள்ளமும்
ஒரு விநோத மலர்ச்சியில்
ஒன்றியிருக்கும் உன்னத வேளையில் -
உயிர் உருக விடைபெறும் வேளையில்
உன் திருமுகம் நோக்குகிறேன்....

கபடமற்ற ஒரு குழந்தையின்
குதூகலச் சிரிப்பும்
பற்றற்ற ஒரு ஞானியின் புன்னகையும்
அதில் ஒளிவீசக் காண்கிறேன்.

ஒரு நல்ல ஓவியனின் தூரிகையில்
விரும்பியவாறு
வண்ணமும் கோடும் வளைவும்
வந்து சேர்வதுபோல்

ஒரு நல்ல பாணனின் இசையில்
சரியாய் பாவமும் ராகமும் தாளமும்
ஒன்று சேர்ந்திருப்பது போல்
அறிவும் ஆற்றலும்
அரவணைக்கும் குணமும்
ஆகாய மனைய மனமும்
உன்னிடம்
கொலுவிருக்கக் காண்கிறேன்.

என்னுள் மாணிக்க விளக்கை ஏற்றும்
உன் அருள் விழியை நோக்குகிறேன்.
நீ ஒரு தெய்வச் சிலையாய்த் தென்படுகிறாய்.
அன்றன்று அருகிருந்து
ஆராதனை செய்யும் ஆர்வத்துடிப்புடன்
காத்திருப்போர் ஆயிரம் ஆயிரம் பேர்....

நான் விலகி நின்றாலும்
வெகுதூரம் சென்றாலும்
உன் காந்த சக்தியில்
கட்டுண்டு நிற்கிறேன்....

தோற்றத்தில் மூர்க்கமாய்
முரண்பட்டுத் தோன்றும் யாளியும்கூட
நல்லதோர் வீணை
நாதத்துக்கு மயங்குவதுபோல்
நான் உன் ஆளுமையில் கிறங்குகிறேன்.

உன் கோயிலின்
கருவறை வரை வந்து நிற்கும் போதெல்லாம்
என்னுள் இருந்தோ

எங்கோ இருந்தோ கேட்கும் ஒரு குரல்:
'நீ ஆத்திகனா....?

நாத்திகனையும் வணங்க வைக்கும்
'நல்ல கடவுள் இதோ' என்று நா முழங்கியதும்
அது அப்படியே அடங்கும்.... ஒடுங்கும்....

விடைபெறும் இந்த வேளையில்
விசித்திரமாய்ச் சிரித்துக் கொள்கிறேன்....
ஒரு நாளேனும் ஒரு பொழுதேனும்
உன் நெற்றிக்கண்ணால் என்னை நீ
நேர்கொண்டு பார்க்கவில்லை....
நக்கீரனாகும் ஒரு நல்ல வாய்ப்பு வராமலேயே
நழுவிவிட்டதை நினைத்துப் பார்க்கிறேன்....
கோபத்தின் உச்சியிலிருந்து
அன்பு மூலிகை மணக்கக்
கொட்டும் ஒரு குற்றால அருவியில்
குளித்தெழுவதற்கு எனக்குக்
கொடுத்து வைக்கவில்லை என்று
கொஞ்சம் கவலைப்படுகிறேன்.

நான் உன்னிடம்
வெறும் மழைநீராக வந்தேன்...
இப்போது ஒரு மகாநதியாய்ப்
பிரவாகமெடுத்துப் புறப்படுகிறேன்.
ஓடும் வழிகளிலெல்லாம்
கரைகளில் நின்று
காது கொடுப்போர்களிடமெல்லாம்
உன் நற்பெயரை
இசைத்துக்கொண்டே போவேன்.

நான் உன்னிடம் வட்டமடிக்கும்
ஒரு வண்ணத்துப் பூச்சியாய் வந்தேன்....
இப்போது ஒரு வானம்பாடியாய்ச் சிறகடிக்கிறேன்
பறக்கும் வெளிகளிலெல்லாம்
பார்க்கும் உயிர்களிடமெல்லாம்
உன் தயவை
உச்சரித்துக்கொண்டே போவேன்.

நான் உன்னிடம்
சீர்பரவும் ஒரு தொண்டனாய் வந்தேன்...
இப்போது ஒரு தூதுவனாய்ச் செல்கிறேன்.
செல்லும் இடங்களிலெல்லாம்
சேரும் மனிதர்களிடமெல்லாம்
உன் ஆன்மநேயச் செய்தியை
அமுதமாய் வழங்கிக் கொண்டே போவேன்.

விடைபெறும் இந்த வேளையில்
ஆனந்தக் கண்ணீருடன்
நெடுநேரம் உன்முன் நிற்கும் என்னிடம்
'என்ன உன் வேண்டுதல்' என்கிறாய்....
'எப்பாரும் எப்பதமும் எங்ஙணும் நான்சென்றே
எந்தை நினதருட் புகழை,
இயம்பி இசைத்திடல் வேண்டும்' என்கிறேன்.

'அப்பா அப்பா அப்பா' என்கிறேன்...

நான் புறப்படுகிறேன்.

*ஓம் சக்தி தீபாவளிமலர்*
*அக்டோபர் 1998*

## நீ இல்லாவிட்டால்.....

தினம் தினம்
ஒரு சின்னத் தடையுமில்லாமல்
ஒரு தடங்கலுமில்லாமல்
உன் சித்திர மேனியின்
நித்தில வனப்பை
வைத்தகண் வாங்காமல் -
பார்க்க வேண்டும்; என்னுள் கோடிக்
கற்பக மலர்கள் பூக்க வேண்டும்.

உன் ஒவ்வோர் அசைவிலும்
ஒய்யார நடையிலும்
ஒடிய முயலும் இடையிலும்
பரிகாசம் செய்து
பளிச்செனச் சிந்தும்
பரிசுத்த அழகிலும்
ஊனும் உயிரும் உருக உருகத்
தேனும் பாலும் வெள்ளமாய்ப் பெருகத்
தீர்த்தமாடும் ஒரு பக்தனைப் போல

நன்றாய் நனைய வேண்டும்;
நயமாய்க் கவிதைகள் - நான்
நாற்பதாயிரம் புனைய வேண்டும்.

என்னை
மெல்ல விழுங்கும் உன்
செல்லக் கண்களை
முத்தம் கொடுத்து
முகர்ந்து பார்த்துப்
பித்தம் பிடித்துக் கிடக்க வேண்டும்;
பெரிய மன்மதக் கூத்து நடக்க வேண்டும்.
உன் கொட்டாத கறுப்பு நீர் வீழ்ச்சியைக்
கோதிக்கோதி விட்டு
ஒரு குழந்தையைப் போல் உனை
அள்ளி எடுத்து அணைத்து
அப்படி இப்படிக் கொஞ்சவேண்டும்;
நீ கெஞ்ச வேண்டும்.

நுங்கின் மென்பதம்
தங்கும் உன் இதழ்களை.....
விட்டு விடுகிறேன்....
நீ சிணுங்குகிறாய்....

என் கண்ணே,
நீ இல்லாவிட்டால் என்னால் வாழமுடியாது!

o

என் விழிவிளக்கின் சுடர்
கரைந்து மங்கும் - ஒடுங்கும்

கடைசி நாளில்
கட்டில் அருகில்
நீ இருந்துன் பூவிரல்களால்
காய்ந்த என் கன்னங்களைத்
தீண்ட வேண்டும்
அணையும் சோதியைத் தூண்டவேண்டும்.

மூச்சுத் திணறிக் தடுமாறி
முற்றிற்று எனக் கதை முடியும் நொடியில்
நெற்றியை வருடித் தடவி
என் நெஞ்சில் நீ சாயவேண்டும்....
இதமாய், மெதுவாய் நான் ஓயவேண்டும்

என் கண்ணே,
நீ இல்லாவிட்டால் என்னால் சாக முடியாது!

தினமணி
தீபாவளி மலர்

பின்னுரை

# பிரும்மாக்கள்

''மீரா தீட்டிய வசன கவிதை ஓவியம், இளைஞர்கள் பலரைக் காதல் கவிதைகள் எழுத வைத்து 'மீராவின் அலை'யை உருவாக்கியது.''

'கனவுகள் +கற்பனைகள்=காகிதங்கள் என்ற கவிதை நூல் மூலம் தமிழ்க் கவிதை உலகில் பரவலாய் அறியப்பட்டவர் மீரா. தமிழ்ப் புதுக்கவிதைகளின் முன்னோடிகளில் குறிப்பிடத் தக்க ஒருவர். மருதுபாண்டியர் கோலோச்சிய சிவகங்கை சீமையில் கவிதை ஆட்சி செய்தவர் மீரா. புதிய கவிதை இலக்கியத்தின் அரை நூற்றாண்டு சரித்திரம் மீரா என்பதற்குப் பொருத்தமானவர்.

மீரா பிறந்தது சிவகங்கை. படித்தது ராமநாதபுரம். கல்லூரி வாழ்க்கை சிவகங்கையிலும், மதுரையிலும். 1938-ல் பிறந்த மீரா, தாம் பயின்ற சிவகங்கைக் கல்லூரியிலேயே பேராசிரியராக, முதல்வராகப் பொறுப்பு வகித்தவர். இயற்பெயர் மீ.இராசேந்திரன்.

கல்லூரிப் பருவத்திலேயே பகுத்தறிவுச் சிந்தனைகளிலும், திராவிட இயக்கக் கருத்துக்களிலும் அதிக ஈடுபாடு கொண்டதால், அந்த இயக்கம் சார்ந்த கவிதைகளைத்தான் ஆரம்பத்தில் எழுதி இருக்கிறார். இந்தி எதிர்ப்புக் கவிதைகள் கூட தீட்டியிருக்கிறார். இவை பெரும்பாலும் மரபுக்கவிதைகளாகவே இருக்கும். 1962-ல் தமிழண்ணல், அப்துல் ரகுமான், மீரா போன்றோரின் கவியரங்கக் கவிதைகள் பலவற்றைத் தொகுத்து 'சுவை'

என்றொரு தொகுப்பு நூலை வெளியிட்டார். இவரது இந்த முதல் தொகுப்பே, பாரதிதாசன் பரம்பரை என்று சொல்லக்கூடிய அளவிற்கு அழுத்தம் உடையதாக இருந்தது. இதனால் இந்தத் தொகுப்பிற்கு நல்ல வரவேற்பும் கிடைத்தது.

கலை இலக்கியம், அரசியல் எனப் பல தளங்களில் கால் பதித்தவர் மீரா. கல்லூரி நாட்களில் கழகக் கவிஞர் என்றே இவரைப் பலர் அறிந்து வைத்திருந்தார்கள். அன்றைய இளம் நண்பர்களை ஒன்று திரட்டி 'இளைஞர் திராவிட முன்னேற்றக் கழகம்' நிறுவியவர்.

இலக்கியம், இலக்கிய வட்டம், இலக்கியம் சார்ந்த பேச்சு, நிகழ்ச்சிகள் என்றே தம் எண்ணங்களை உலாவ விட்டவர் மீரா. தன் நெருங்கிய வகுப்புத் தோழரான அப்துல் ரகுமானுடனும் ஔவை நடராசன் போன்றோருடன் இணைந்து தொடங்கியதுதான் மதுரையில் தியாகராசர் கல்லூரி இலக்கிய அணி. அதுதான் பின்னர் கா.காளிமுத்து, நா.காமராசன், மு.மேத்தா என்று பலரை ஐக்கியப் படுத்தியது. அப்போதே மீராவின் கவிதைகள் 'தென்றல்', 'இனமுழக்கம்', 'திராவிடம்', 'மன்றம்' போன்ற இதழ்களில் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்தன.

1964-ல் வெளிவந்த 'இராசேந்திரன் கவிதைகள்' தான் மீராவின் படைப்பைத் தாங்கி வெளிவந்த முதல் முழு கவிதை நூல். மரபுக்கவிதையால் தீட்டப்பட்ட இந்த நூலின் ஒவ்வொரு அடியிலும், சீரிலும், அசையிலும் கவிதை இருந்ததைப் பலர் வியந்து பாராட்டி உள்ளனர்.

1965-ல் மீராவின் 'மூன்றும் ஆறும்' என்னும் மேடைக் கவிதைகள் நூலாக வெளிவந்தன. முடியரசன், கண்ணதாசன், ராயசொ முதலான பல கவியரசர்களின்

தலைமையில் மேடையேறிய கவிதைகளின் தொகுப்புதான் இந்நூல். இந்நூலுக்கு தமிழக அரசின் தமிழ் வளர்ச்சிக் கழக விருது கிடைத்தது. தொடர்ந்து 'மண்ணியல் சிறுதேர் - ஒரு மதிப்பீடு' என்ற திறனாய்வு நூல் வெளிவந்தது.

மீராவை வெளி உலகத்திற்கு - கவிதை உலகையும் தாண்டி - அடையாளம் காட்டியது 1971-ல் வெளிவந்த 'கனவுகள்+கற்பனைகள்=காகிதங்கள்' என்ற கவிதை நூல்தான். அதை மீரா தீட்டிய வசன கவிதை ஓவியம் என்று கூடச் சொல்லலாம். தமிழ் ஆர்வமுள்ள இளைஞர்கள் பலரை அது கொள்ளை கொண்டது. 'மீராவின் அலை' இளைஞர்கள் மத்தியில் சுழன்று வீசியதும் இந்தக் கவிதை நூலால் தான். அந்த அலையில் சிக்கிய பல இளைஞர்களை, காதல் கவிதைகள் எழுத வைத்ததும் இந்நூல்தான். காதலை அழகு, நிரந்தரத்துவம் என்று எதுவாகவும் எடுத்துக் கொள்ளலாம் என்று இந்நூலின் மூலம் காட்டியவர் மீரா.

மீராவின் அலை 1974-ல் வேறு விதமாக வீசியடிக்கத் தொடங்கியது. புதுக்கவிதை உலகின் ஆசுகவி என்று சொல்லும் அளவிற்கு இவரை உயர்த்திப் பிடித்தது இவரது 'ஊசிகள்' என்ற கவிதை நூல். இடதுசாரிச் சிந்தனை உள்ள கவிஞராக மீரா அறியப்பட்ட அந்தக் காலத்தில் பொய் முகங்களின் அரிதாரங்களில் ஊசிகள் ஊடுருவிப் பாய்ந்தன. மீராவின் இன்னொரு பரிமாணம் எது என்பதை காட்டிய நூல் 'ஊசிகள்'.

தாமரை, தீபம், வானம்பாடி, சுவடு போன்ற இலக்கிய ஏடுகள் மீராவின் கவிதைகளைத் தொடர்ந்து வெளியிட்டன. இதழ்கள் நடத்த வேண்டும் என்ற ஆர்வம் மீராவின் உள்ளுக்குள் வளர்ந்து கொண்டே இருந்திருக்கிறது. அதன் விளைவாக கவி, அன்னம்விடு தூது போன்ற இலக்கிய ஏடுகளைத் துவங்கி சிலகாலம் நடத்திவந்தார். 'ஓம் சக்தி'

இதழில் சிலகாலம் பணிபுரிந்திருக்கிறார். ஆசிரியர் கழகத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார் மீரா MUTA என்ற ஆசிரியர்கள் இயக்கம் தோன்றக் காரணமாக இருந்தவர்களில் மீராவும் ஒருவர். MUTA இதழ் ஆசிரியராக 8 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

மீராவின் இன்னொரு வெற்றி அன்னம், அகரம் பதிப்பங்கள் நிறுவிய சாதனை தான். ஒரு சிறிய ஊரில் புத்திலக்கிய வளர்ச்சிக்கு அடிக்கல் நாட்டுவது என்பது சாதாரண விஷயமல்ல. புதுக்கவிதை, நாவல், சிறுகதை, கட்டுரை, நாடகம், கலை, தத்துவம், வரலாறு என்று அனைத்துத் துறைகளிலும் தன் பதிப்புக் கொடையை அள்ளித் தந்துள்ளார் மீரா.

மீராவுடைய பதிப்பகம் மட்டும் தோன்றாமல் இருந்திருந்தால், பல படைப்புகள் வெறும் பேனா முனை எழுத்துக்களாகவே மறைந்து போயிருக்கும். இலட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள நூல்கள் விற்காத நிலையிலும், அந்தப் பணியை இன்றைக்கும் செய்து கொண்டே இருப்பதுதான், மீராவின் எழுத்துத் துணிச்சல்.

மீரா ஆங்கில இலக்கியத்திலும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். ''சரோஜினி நாயுடு, ஜிப்ரான், உமர் கய்யாம் படைப்புகள் மிகவும் பிடிக்கும். சரோஜினி நாயுடுவின் கவிதைகளை மொழி பெயர்த்து வைத்திருக்கிறேன். அவை இன்னும் அச்சில் வெளிவராமல் இருக்கின்றன. வெளிக் கொணரவேண்டும் என்பதே என் நீண்டநாள் ஆசை'' என்கிறார் மீரா. அத்துடன், தான் எழுதியுள்ள கட்டுரைகள் பல தொகுத்து வெளியிடப்படாமல் இருப்பதையும் அடிக்கடி நினைவு கூர்கிறார்.

பாவேந்தர் விருது, சிற்பி இலக்கிய விருது, தமிழ்ச் சான்றோர் பேரவை விருது என்று இன்னும் பல விருதுகள் அவருக்கு கிடைத்துள்ளன.

அண்ணாவின் கடைசி உயில் என்று அழைக்கப்பட்ட, தம்பிக்கு எழுதிய கடைசிக் கடிதத்தில் மீராவின் கவிதையை மேற்கோளாகக் காட்டும் அளவிற்கு அண்ணாவின் நெஞ்சில் இடம் பிடித்தவர் மீரா.

மீரா, தன் வாரிசுகளையும் இலக்கியத் தடங்களில் நடக்கவிட்டிருப்பது, பெருமை. அவரது புதல்வர் கதிர், அகரம் பதிப்பகத்தை நடத்திக்கொண்டு இருக்கிறார்.

இளைய தலைமுறை எழுத்துக்கு ஆதரவு, புதிய எழுத்துக்கு ஒரு வரவேற்பு, புதுமை இலக்கியங்களுக்கு ஒரு பதிப்பகம், அச்சகம், நல்ல எழுத்தில் சாதி, குலம் பார்க்காத பேருள்ளம் - இப்படி படைப்பு, பதிப்பு, படிப்பு என்று முப்பெரும் சாதனை படைத்த மீராவை, சந்திப்பதே ஒரு கவிதை படித்த உணர்வை ஏற்படுத்தும்.

**இரா.மணிகண்டன்**

**நன்றி: குமுதம்**

***29.3.2001***

மீராவின் படைப்புலகம்
ஒரு வர்ணச் சித்திரமல்ல
வர்ண விசித்திரம்.

மரபுக் கவிதையின் விசால வீதிகளில்
கடிவாளமில்லாத புரவியாய் பவனி வரவும்
அவரால் முடிந்தது.

புதுக்கவிதையின் விசுவ வெளியில்
ஓசையின்றி நழுவும் விண்கலமாவது
அவருக்குச் சாத்தியமானது.

வாழும் காலத்தில் நமக்கு
ஒரு வரமாகக் கிடைத்த மீரா
வெறும் கவிஞர் மட்டுமல்ல
- காலத்தின் குரல்.
அவரை அறிவதும்
அவரை உணர்வதும்
நம் கால இலக்கியவாதிகளுக்கு
வாழ்வின் பெருமிதம்.

*- கவிஞர் சிற்பி*